பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (27.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 242

## சமாதானப் பேச்சு நடத்துவதற்கான

# நிபந்தனைகளை புலிகள் ஏற்காவிடில்

# ஏனைய குழுக்களுடன் பேசித் தீர்வு

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறிவிப்பு

தியத்தலாவ,ஜூலை27

சமாதானப் பேச்சு நடத்துவதற்கு, அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்காவிடில் -

ஏனைய தமிழ் அரசியல் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் கொண்டுவரும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு, தமிழீழ கோட்பாட்டையும் கைவிட்டுவிட்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட முன்வந்தால் அவர்களுடன் பேச்சு நடத்துவது குறித்து பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயார் என்றும் பிரதமர் கூறினார்.



நேற்றுக் காலையில் தியத்தலாவ இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற படை அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றபின் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

தமிழர்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் மட்டுமல்லர். வேறு பல தமிழ்க் குழுக்களும் செயற்படுகின்றன.

பேச்சு நடத்துவதற்கு அரசு முன்வைக்கும் நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தால் ஏனைய தமிழ் குழுக்களுடன் பேசி நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்து வோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தம் நேற்று நடைமுறைக்கு வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை27

'சார்க்'மாநாட்டை முன்னிட்டு விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த போர் நிறுத்தம் நேற்று நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது

இந்தப் போர் நிறுத்தம் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை 10 தினங்கள் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்காலப் பகுதியில் படையினரின் நடவடிக்கைகள் வழமைபோன்று தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று அரசுத்தரப்பு அறிவித்துள்ளது. (அ-1)

## அக்கரைப்பற்றில் மரக்கறி வியாபாரி வெள்ளி இரவு சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஜூலை. 27

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் வெள்ளி இரவு 8.30 மணியளவில் மரக்கறி வியாபாரி ஒருவர் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நடராசா (வயது 58) என்பவரே கொல்லப் பட்டவராவார்.

இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை யாவார். (அ-1)

## இராணுவத்தினரின் அனுமதி கிடைத்த பின்னரே சி.டி.எம்.ஏ.தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை27

பலாலியில் இருந்து இராணுவத்தினரின் அனுமதி கிடைத்த பின்னரே குடாநாட்டில் சி.டி.எம்.ஏ. தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு இணைப்பு வழங்கப்படும்.

சி.டி.எம்.ஏ. தொலைபேசிச் சேவை முதலில் குடாநாட்டில்அறிமுகம் செய்யப்பட்ட போது அந்தச் சேவையைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் விவரங்கள் யாழ். அரச அதிபர் ஊடாக பலாலி படைத்தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டன. படைத்தலைமையின் அனுமதி கிடைத்தவர்களுக்கு 'ரெலிக்கொம்' நிறுவனம் தொலைபேசிக்குரிய இணைப்புகளை வழங்கி வந்தது.

திடீரென இணைப்புகள் யாவும் நிறுத்தப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களுக்கும் கூடுதலாக தொலைபேசிகள் தொடர்ந்து செயலிழந்துள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் திகதி தொடக்கம் மின் வெட்டு 15 நிமிடங்களால் குறைக்கப்படும்

### திருத்த வேலைகளே இப்போதைய ஒழுங்கற்ற தடைக்குக் காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை17

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் மின் வெட்டு நேரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் 15 நிமிடங்களால் குறைக்கப்படும்.

மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ். முத்துரத்னானந்தன் இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

வகுக்கப்பட்ட அட்டவணைக்கு மாறாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு இல்லாத அனைத்துக் கட்சிகள் குழு அர்த்தமற்றது!

### ஐரோப்பிய எம்.பிகள் தூதுக்குழுவின் தலைவர்



கொழும்பு,ஜூலை27

தமிழ் தேசியக் கூட்டமைப்புஅங்கம் வகிக்காத அனைத்துக்கட்சித் தெரிவுக்குழு அர்த்தமற்றது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்குழுவின்தலைவர் றொபேட் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்ப முன்னர், நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியாளர்களைச் சந்தித்த போதே இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு, அனைத்து அரசியல் கட்சியினையும் பிரதிநிதித்துவபடுத்துவதாக கூறப்பட்டாலும் அதில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி-இரத்மலானை விமானசேவை முதலாம் திகதியிலிருந்தே இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமான சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்கு இடைநிறுத்தப்படவுள்ளது.

'சார்க்' மாநாட்டிற்கான பாதுகாப்பின் ஓர்அங்கமாக இந்தச் சேவை இடை நிறுத்தப்படவிருப்பதாக விமான சேவை நிறுவனங்கள் நேற்றுத் தெரிவித்தன.

விமானசேவை இன்று முதல் நிறுத்துவதென முன்னர் முடிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், விமானப் படையினருடன் கலந்துரையாடியதன் பின்னர் அவர்களின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் கவசவாகனத்தில் அகப்பட்டு பெண் வியாபாரி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சாவகச்சேரி நகரப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக - நேற்றுக் காலை 8.15 மணியளவில்- படையினரின் கவசவாகனம் பின்நோக்கி நகர்ந்தபோது அதில் அகப்பட்டு வியாபாரியான வயோதிபப் பெண் ஒருவர் மரணம் ஆனார்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த கனகசிங்கம் தர்மராணி (வயது 62) என்பவரே மரணமானவர் ஆவார்.

சாவகச்சேரி சந்தையில் பலாப்பழம் விற்பனைசெய்பவரான அந்தப் பெண் சந்தையை நோக்கி சென்றுகொண்டிருந்த வேளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் மீளக் குடியமர்த்தல்; உயர்மட்டக் குழு விரைவில் கூடும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வலி.வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில் பொதுமக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழு அடுத்த வாரம் அளவில் கூடவுள்ளது.

வலிகாமம் வடக்கில் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ள தமதுசொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமரவும் தொழில் செய்யவும் அனுமதிக்குமாறு உத்தரவிடக் கோரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரத்ததானம் உயிர்காக்கும் உன்னத பணி

(15 ஆம் பக்கத்தைப் பாருங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழல்களில் சாய்ந்தது இந்தியா; இலங்கைக்கு இன்னிங்ஸ் வெற்றி!

கொழும்பு, ஜூலை27

சுற்றுலா இந்திய அணிக்கு எதிரான முதலாவது 'டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸாலும் 239 ஓட்டங்களாலும்வெற்றிபெற்றது.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற 600 ஓட்டங்களுக்குப் பதிலளித்து இந்திய அணி ஆடியது. நேற்று போட்டியில் நான்காம் நாள் ஆட்டம் இடம்பெற்றது.மூன்றாம் நாள் ஆட்டம் முடிவடையும் போது இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 159 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



வெற்றிக்களிப்பில் முரளியும் மெண்டிஸும்

களத்தில் 19 ஓட்டங்களுடன் நின்ற வி.வி.எஸ். லக்ஸ்மனும் ஓர் ஓட்டத்துடன் நின்ற கும்ளேயும் தொடர்ந்து ஆடினார்கள். இந்தியாவின் 'ஸ்கோர்' 188 ஐ தொடுவதற்குள் கும்பளே, ஹர்பஜன், ஜாகீர்கான் ஆகியோர் ஆட்டம் இழந்தனர். லக்ஸ்மன் மட்டும் ஓரளவு சிறப்பாக விளையாடி 56 ஓட்டங்களைக் கடந்து கடைசியாக ஆட்டம் இழந்தார்.

இறுதியில் இந்திய அணி 233 ஓட்டங்களை மட்டும் பெற்று 'பலோ ஒன்' நிலைக்குத் தள்ளப்பட்டது.

இலங்கை அணி சார்பில் முரளிதரன் 84 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ் 72 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி வீரர்கள் முரளிதரன், மெண்டிஸ் ஆகியோரின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தொடர்ச்சியாக 'அவுட்' ஆகினர். ஷேவாக்(13), லக்ஸமன் (21), டெண்டுல்கர்(12), டிராவிட்(10),கங்குலி(04), கார்த்திக்(00), கும்பளே(12), ஹர்பஜன்(15), ஜாகீர்கான்(03) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் 'அவுட்' ஆனார்கள். இந்திய அணி 138 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 239 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணி சார்பில் இரண்டு இன்னிங்ஸிலும் 11 விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளிதரன் தெரிவு செய்யப்பட்டார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சமூகவியல் துறையின் உதவி விரிவுரையாளர்
S.சிறீகாந்தன் அவர்களின் தாய்



**திருமதி சண்முகராஜா தையல்நாயகி**

அவர்களின் இழப்பினால் துயருற்று தவிக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எம் சமூகவியல் சமூகமும் யாழ். பல்கலைக்கழக சமூகமும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சமூகவியல் சமூகம்,
சமூகவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(76675)


உள்நாடு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு



## விற்பனைக்கு

T.V., CD பிளேயர், டிஸ் அன்ரனா, பிறிஜ், றேடியோ, மோட்டார் சைக்கிள், தளபாடங்கள், கொம்பியூட்டர் ஆகியன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- V.பாலநாதன்,
நவாலி தெற்கு. தொ.பே.:021 4591025



பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்

நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு முந்துங்கள்

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

★ நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
★ றெடிமேட் ஆடைவகைகள்,
பான்சி ரகங்கள், வெடிங் கிவ்றஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்,
பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
★ சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

### புதிய சாறிகள்

| | | | |
|---|---|---|---|
| 1.Aswini | அஸ்வினி | 19.Nepaly Silk | நேபாளி சில்க் |
| 2.Silver Touch | சில்வர் ரச் | 20.Jamasim | யனசின் |
| 3.Muniaandy | முனியாண்டி | 21.Villu Saree | வில்லு சாறி |
| 4.Anna-Tangi | அண்ணா தங்கை | 22.Mecna Silk | மேக்னா சில்க் |
| 5.Vinay Silk | சில்க் வினே | 23.Sofia Saree | சேபியா சாறி |
| 6.Piriyanka-Saree | பிரியங்கா சாறி | 24.Tulsi Silk | துல்சி சில்க் |
| 7.Kirazy Silk | கிரேசி சில்க் | 25.Varsaw Silk | வர்சோ சில்க் |
| 8.Kofi Saree | கோபி சாறி | 26.Nelco Saree | நெல்கோ சாறி |
| 9.Raj-Guru | ராஜ் குரு | 27.Gawdwal Saree | கோட் வால் சாறி |
| 10.Kuruvvi | குருவி | 28.Robo Silk | ரோபோ சில்க் |
| 11.Kuselan | குசேலன் | 29.Marma Yogi | மர்ம யோகி |
| 12.Kalpana | கல்பனா சாறி | 30.Yarady Nee Mohini | யாரடி நீ மோகினி |
| 13.Luxary silk | லக்ஸ்சறி சில்க் | 31.Susmita | சுஸ்மிற்றா |
| 14.Pandy Saree | பாண்டி சாறி | 32.Just Marriage | யஸ்ற் மறிச் |
| 15.Henstar Saree | கென்ஸ்ரார் சாறி | 33.Sindoor | சிந்தூர் |
| 16.Kalyani Cotton | கல்யாணி கொட்டன் | 34.Gold Glass | கோல்ட் கிலாஸ் |
| 17.Thasavatharam | தசாவதாரம் | 35.Kolkatta | கொல்கத்தா |
| 18.Namitha Silk | நமிதா சில்க் | | |

அரவிந் மில் - மனிஸ்ஸா றெறின் 1 மீற்றர் - 225/=
அரவிந் மில் - சகோறி றெறின் 1 மீற்றர் -275/=
புத்தம்புதிய சுரிதார் தெரிவுகளை திருப்தியாகப் பார்த்து எடுத்துக்கொள்ள ....

G.S.லிங்கநாதன் அன்கோ
சாறித் தெரிவுகளுக்கு:- இல.47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
ஏனைய தெரிவுகளுக்கு:- இல.13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.


### கண்டெடுத்த பை அதிபரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை27

மீசாலை, புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியில் கைப் பையொன்று மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பழைய மாணவி ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு வித்தியாலய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைப் பையினைத் தவற விட்டவர்கள் ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் கு.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

### முன்பள்ளி கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிகளின் கண்காட்சி எதிர்வரும் வெள்ளியும் சனியும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும். வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இக் கண்காட்சியினை சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகசிங்கம் ஆரம்பித்து வைப்பார். (1-207)

## மரண அறிவித்தல்கள்

### சீவரத்தினம் விக்னராசா

தொண்டைமானாறு, கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறோன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் விக்னராசா 24.07.2008 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து சீவரத்தினம் - பூமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - சோதி முத்து தம்பதியரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் (கண்டு) அன்புக் கணவரும் விஜிதன்(U.K.), சுபத்திரா, வித்தியா(ரமா- கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீரங்கன், மனோகரன்(கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.07.2008) திங்கட்கிழமை கனடா, ரொறோன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விமல் அகம்,
கெருடாவில்,
தொண்டைமானாறு.

(A)

தகவல்:
ந.சிவபுத்திரன்
(மைத்துனர்).

### கனகசிங்கம் தர்மராணி

சாவகச்சேரி, கச்சாய் வீதி, கோயில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் தர்மராணி நேற்று(26.07.2008) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்பு மனைவியும் தர்மராஜரத்தினம், தர்மரதி, தர்மஇந்திரா, தவானந்தி, தவேந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தர்சினியின் அன்புத் தாயும் குகனின் (தபாற்கந்தோர், சாவகச்சேரி) அன்பு மாமியும் ரிசிகேசன், கம்சாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.07.2008)ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயிற்குடியிருப்பு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(76676)

தகவல்:
குகன்
(மருமகன்).

### சின்னையா இராசையா



கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசையா நேற்று (26.07.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும், கதிரமலையின் அன்புக் கணவரும், பொன்னுத்துரை மற்றும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, ரத்தினம், நல்லதம்பி, செல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் செல்வராணி, செல்வதாஸ்(சுவிஸ்), புஸ்பராணி(கனடா), தயாராணி (கனடா), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பத்மநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்), ஜெகதீஸ்வரி(சுவிஸ்), கணேசமூர்த்தி (கனடா), செல்வகுமார்(கனடா), சிவரஞ்சன் (யாழ். ஜெயப்பூர் நிறுவனம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருசா, சபீசனன், ஜெனகன், ஜெனனி, துசர்ந், நிவேதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வல்லிபுரம் தம்பதியினரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்(உபதபால்கந்தோரடி) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில்.
(உபதபால் கந்தோரடி)

(76677)

தகவல்:
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14 - 12 - 1918



உதிர்வு
20 - 07 - 2006

### அமரர் குட்டித்தம்பி அன்னபூரணம்

திதி: ஆடிஅபரபட்சத் தசமி (27.07.2008)

ஆறவில்லை எம் மனது அழியாத உம் நினைவுகளால் இரண்டாம் ஆண்டில் உங்களை அஞ்சலிக்கிறோம்.

உதயகிரி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி/552230)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்த இடதுசாரிக் கட்சிகள்

**இலங்கை அரசியல் வரலாற்றின் ஆரம்பகாலகட்டத்தில் இந்நாட்டின் இடதுசாரிக்கட்சிகள் முக்கிய பங்கு வகித்து வந்திருந்தன. இந்த நாட்டின் தமிழ் மக்கள் மத்தியிலும் கணிசமான ஆதரவை அவர்களால் ஈட்ட முடிந்திருந்தது.**

**ஆனால் காலப்போக்கில் பேரினவாதக் கட்சிகளுடன் இணைந்து இரண்டறக் கலந்து விட்ட அவர்களால் தமது தனித்துவத்தை இனங்கள் மத்தியில் நிலைநாட்ட இயலாது போய்விட்டது.**

**இடதுசாரி கட்சிகள் தமிழர்களுக்கு இழைத்த அரசியல் துரோகம் குறித்து விவரிக்கிறது இக் கட்டுரை.**

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு காலகட்டத்தில் நாடாளுமன்ற பலமும், தொழிற் சங்க ரீதியிலான பலமும் கொண்டிருந்த இடது சாரிக் கட்சிகள் இன்று, சிதறிச் சின்னா பின்னமான நிலைக்கு உட்பட்டுள்ளன. அந்தவகையில், அவை இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் ஒட்டிக் கொண்டு காலம்போக்கி வருகின்றன. இன்று சகலராலும் புறம் தள்ளப்பட்ட தரப்புக்களாக இக் கட்சிகள் தமது அரசியலை நடத்தி வர நேரிட்டுள்ளது. படிப்படியாகத் தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்து வந்த இந்த இடதுசாரிக் கட்சிகள் முன்னர் ஒருகால கட்டத்தில் தமிழ் மக்களது கணிசமான ஆதரவை ஈட்டிக் கொண்ட கட்சிகளாக விளங்கி வந்தன. அந்தக் காலகட்டத்தில்,

தமிழ் மக்கள் மத்தியில் குல பேதங்களால் ஒதுக்குதல்களுக்குள்ளான மக்கள் தரப்புக்கள் மற்றும் புத்திஜீவிகள் மற்றும் இளம் சமுதாயத் தினர் ஆகியோரின் ஆதரவை இவ் இடதுசாரிக் கட்சிகள் ஈட்டிக்கொண்டிருந்தன. அவ்விதம் ஒதுக்கப்பட்ட சமூகத்தினரின் உரிமைகளுக்காகத் தலைமைதாங்கிச் செயற்பட்டதன் மூலம் இந்த இடதுசாரிக் கட்சிகள் வட பகுதியில் கணிசமான ஆதரவை திரட்டிக்கொண்டிருந்தன.

தமிழ் மக்களின் உரிமைப் பேராட்டம் ஆயுத வழிப் போராட்டமாக பரிணமிக்க ஆரம்பமானதன் பின்னர், இந்நாட்டின் இனப்பிரச் சினை விடயத்தில், இந்த இடது சாரிக் கட்சிகள் நாட்டின் தமிழ் மக்களுக்கு உரித்தான நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க ஆர்வம் காட்டாது அசட்டைப் போக்கை கடைக் கொண்டதன் மூலம், இந் நாட்டின் தமிழ் மக்கள் மத்தியில் தமக்கிருந்த ஆதரவை இல்லாது செய்து கொண்டன.

இந்த நாட்டுத் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக இந் நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் மேற்கொண்ட துரோ

**தமிழில் : ராஜா**

கத்தனத்தின் வரலாற்றை நான்கு வெவ்வேறான காலகட்டங்களாகக் கொண்டு விமர்சிப்பது பொருத்தமானதாக அமையும்.

### 1935 முதல் 1949 வரையான காலகட்டம்

1935 ஆம் ஆண்டில் இலங்கை சமசமாஜக் கட்சியும் 1943 ஆம் ஆண்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் உருவாக்கப்பட்டன. இருந்த போதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இலங்கை சமசமாஜக் கட்சி 1940 ஆம் ஆண்டின் நடுப் பகுதியிலேயே பிரபல்யம் பெறத் தொடங்கியது.

அதுவரையும் அந்த அரசியல் இடைவெளி யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பினாலேயே நிரப்பப்பட்டு வந்தது. சமூக சீர்திருத்தம் தொடர்பான கொள்கை நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, சீர்திருத்தப் போராட்டங்களை, அந்த யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் முன்னெடுத்து வந்தது.

ஒரு வகையில் அந்த வேளையில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் அதிகாரத்தை விட யாழ். குடாநாட்டுக்கு அப்பால் இடதுசாரிக் கட்சிகளின் அதிகாரம் மேலோங்கிக் காணப்பட்டது. 1943ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம், இலங்கை சமசமாஜக் கட்சியின் பிரபல்யத்துக்குப் பெரிய அளவிலான பாதிப்பை ஏற்படுத்திவிடவில்லை. தர்மகுலசிங்கம் என்ற பெயர் கொண்ட பிரமுகரால் இலங்கை சம சமாஜக் கட்சி யாழ். குடாநாட்டில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. தர்மகுலசிங்கத்தின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட 'வில்லூன்றி மயானப் போராட்டம்' யாழ். குடாநாட்டு மக்கள் மத்தியில் இலங்கை சமசமாஜக் கட்சிக்கு ஸ்திரமானதொரு ஆதரவு நிலையை ஏற்படுத்திவைத்தது.

யாழ். குடாநாட்டுக்கு மேலதிகமாக தமிழ்ப் பிரதேசங்களில் இடது சாரிக் கட்சிகள் வலுவான நிலையில் செயற்பட்டதாகக் கருத எவ்வித ஆதாரமும் கிட்டவில்லை. சண்முகதாசனின் தலைமையிலான சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அக்கட்சி குறிப்பிடத்தக்க அளவு தமிழ் மக்களது ஆதரவை ஈட்டியிருந்தது.

யாழ். குடாநாட்டுக்கு வெளியில் தமிழ்த் தொழிலாள வர்க்கத்தினர் செறிந்து வாழ்ந்த மலையகப் பகுதிகளிலும்கூட இடதுசாரிக் கட்சிகளுக்கு அந்தவேளையில் குறிப்பிடத்தக்க வரவேற்பு கிட்டியிருந்தது.

★ தோட்டத் தொழிலாளர்களது பிரஜா உரிமையைப் பறித்தெடுத்தவேளையில், இடதுசாரிக் கட்சிகளின் தலைமைகள்

★ அரசின் அத்தகைய நியாயமற்ற செயற்பட்டுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு வெளியிட்டு வந்தனர். அதுமட்டுமன்றி தோட்டத் தொழிலாளர்களது பிரஜா உரிமையை மறுக்கும் அரசின் சட்டமூலத்துக்கு எதிராகவும் நாடாளுமன்றத்தில் இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்து வாக்களித்தன.

### 1949 முதல் 1965 வரையான காலகட்டம்

1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட வேளை யிலிருந்து இந்தக் காலகட்டம் ஆரம்பிக்கிறது. 1947ஆம் ஆண்டில் இந்நாட்டுக்கு உருவாக்கி வழங்கப்பட்ட 'சோல்பரி அரசமைப்பு' ஜனநாயகவாத அடிப்படையில் அதிகார ஆதிக்க பலத்தைச் சிங்கள இனவாதத் தரப்புக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. குறிப்பிட்ட இந்தக் காலகட்டம் அரச ஆதிக்கத்தை சிங்கள மயமாக்குவதற்காக ஆளும் தரப்பினர் கடும் அக்கறை செலுத்திச் செயற்பட்ட காலகட்டம் எனக் குறிப்பிட முடியும். இத்தகைய சிங்கள மயமாக்கல் என்பது பிரஜா உரிமைச் சட்டத்திலிருந்து தேர்தல் வெற்றி என்ற அதிகார உருத்துவரை சிங்களக் குறியீட்டை வெளிப்

## இரட்டைப் போக்குக் கொள்கையால் தமிழர்களது ஆதரவை இழக்க நேர்ந்த பரிதாபம்

படுத்தும் விதத்தில் நாட்டின் தேசியக் கொடி, சிங்களம் மட்டுமே அரச கருமமொழிச் சட்டம் வரையாக முன்னெடுத்துக் கொண்டு செல்லப்பட்டது.

நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் குறிப்பிட்ட இந்தக் காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில், தமது கட்சிகளின் கொள்கை நிலைப்பாடுகளிலேயே மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வந்தன. இத்தகைய கட்சியின் அடிப்படைக் கொள்கையையே மாற்றிக்கொள்ளும்போக்கை முதலில் ஆரம்பித்து வைத்தவர் இடதுசாரித் தலைவர்களுள் ஒருவரான பிலிப் குணவர்த்தன ஆவார். அதேபோன்று அந்தக் கொள்கை நிலைப்பாட்டில் குத்துக்கரணம் அடித்த கடைசி இடதுசாரித் தலைவர் என்ற பெயரை கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அரசியல் வரலாற்றில் பதிவுசெய்து வைத்தார்.

தமிழரசுக்கட்சி, ஒரு வகையில் சோல்பரி அரசமைப்புக் காரணமாக உருவாகிய கட்சியென அடையாளப்படுத்தத்தக்கதொன்றாகும். அந்த வகையில் அக்கட்சி நாட்டின் இன ரீதியான அரசியலை தமிழ்த் தேசிய அரசியலாக தலையெடுக்கவைக்கும் விதத்தில் முன்னிலை வகித்துச் செயற்பட்டது.

அதேபோன்று நாட்டின் வட பகுதிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட விதத்திலான தமிழர் தரப்பு அரசியலை, வடக்கு - கிழக்கு என்ற பரந்த பிரதேசத்துக்கு விஸ்தரித்துப் பரவலாக்கவும் வழிசெய்தது. ஜாதி, மத, இன பேதங்கள், பிரதேச வேறுபாட்டுணர்வு ஆகிய பேதங்களைக் கைவிட்டு, தமிழ்த் தேசியத்துவத்தைக் கட்டியெழும்பும் சங்கற்பத்துடன் தமிழரசுக் கட்சி செயற்பட முனைந்தது. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்கள் இந்நாட்டுத் தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசங்கள் என்ற கருத்தை முன்னிலைப்படுத்தி, தமிழ் அரசுக்கட்சி, சமஷ்டி ஆட்சிமுறையொன்றுக்கான தமது கோரிக்கையை சிங்களத் தலைமையிடம் முன்வைத்தது.

நாட்டின் இடதுசாரிக் கட்சிகள் குல ரீதியான வேறுபாடுகள் நிலவிவந்த தமிழ் மக்கள் மத்தியில் அதனையே தமக்குச் சாதகமான அம்சமாக முன்னெடுத்து தமிழ் மக்களில் ஒரு தரப்பினரின் ஆதரவை ஈட்டிக்கொண்டபோதிலும், தமிழரசுக் கட்சியோ தமிழ் மக்கள் எதிர்நோக்கிய இன ரீதியிலான மொழி ரீதியிலான பிரச்சினைகள் குறித்து அக்கறைகாட்டிச் செயற்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் பேராதரவை ஈட்டிக்கொள்ள முடிந்தது.

1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது, சுதந்திரக் கட்சி தனது பேரின வாத கருத்து நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தித் தேர்தலில் போட்டியிட்டது. அது வரை இடதுசாரிக் கட்சித் தலைவர்களி லொருவராகச் செயற்பட்டுவந்த பிலிப் குணவர்த்தன, மகாஜன எக்சத் பெரமுன என்ற பெயரில் கட்சியொன்றை உருவாக்கிக் கொண்டு சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு அத்தேர்தலில் போட்டியிட்டார். அதேவேளை இலங்கை சமசமாஜக் கட்சியும் குறிப்பிட்ட அத்தேர்தலில் சுதந்திரக் கட்சியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக்கொண்டு போட்டியிட்டது.

நாடாளுமன்றத்தில் தமது கட்சிக்கான அங்கத்துவ வாய்ப்பை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் இடதுசாரிக் கட்சிகளில் ஒன்று, இனவாதக் கொள்கை நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தித் தேர்தலில் நின்ற சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டு போட்டியிட்ட அதேசமயம் மற்றொரு இடதுசாரிக் கட்சியான இலங்கை சமசமாஜக் கட்சியோ தேர்தலில் அதிக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில் பண்டார நாயக்கவின் தலைமையில் இனவாத கொள்கை நிலைப்பாட்டை முன்வைத்துப் போட்டியிட்ட சுதந்திரக் கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டது. அப்பொழுத் தேர்தலில் பண்டார நாயக்கா தாம் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டால் 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை அரச கருமமொழியாக்குவதாகச் சிங்களப் பொதுமக்களுக்கு வாக்குறுதி வழங்கிப் போட்டியிட்டார். குறிப்பிட்ட அத்தேர்தலில் வெற்றியீட்டி அரசமைத்த பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசு, தனது வாக்குறுதிக்கு அமைய தனிச்சிங்களச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியும்கொண்டது. அதேவேளை, இலங்கை சமசமாஜயக் கட்சியோ அத்தனிச் சிங்களச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவேளையில் அதனை எதிர்த்தது. அத்தகைய எதிர்ப்பை மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலம் வெளிக்காட்ட இலங்கை சமசமாஜக் கட்சி தீவிரம் காட்டிச்செயற்பட்டபோதிலும் அவை அரச இயந்திரத்தால் முறியடிக்கப்பட்டன.

இலங்கை சமசமாஜக் கட்சியின் ஒரு முக்கிய தலைவரான லெஸ்லி குணவர்த்தன "இலங்கைக்கு இதனால் கடும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிடக்கூடும். இத் தனிச் சிங்களச் சட்டம் காரணமாக தமிழ் மக்கள் தமக்கு அநியாயம் இழைக்கப்படுவதாக உணர்வதுடன், நாட்டில் பிரிவினைவாதக் கோஷமும் முன்னெடுக்கப்பட நேரிடக்கூடும்" என எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இலங்கை சமசமாஜக் கட்சியின் பிறிதொரு தலைவரான கொல்வின் ஆர்.டி. சில்வா மேலும் ஒருபடி முன்சென்று "இரு மொழிகளும் பயன்படுத்தப்படுமானால் ஒரே நாடு என்ற ரீதியில் செயற்பட இயலும். சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரச கருமமொழியெனக் கொள்வோமானால், இலங்கையில் இருவேறு இராச்சியங்கள் அமைவதைத் தடுக்க இயலாது போய் விடும்" என யதார்த்த உண்மையைத் தெளிவுபடுத்தியிருந்தார். அதேசமயம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனிச்சிங்களச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டதாக ஆதாரமெதுவும் கிட்டியிருக்கவில்லை. தமிழரசுக் கட்சியினர் இச்சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து காலிமுகத்திடலில் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டமும், காடையர்களால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு

**சிங்களமூலம் : ராவய- சங்கரன் சிவலிங்கம்**

சத்தியாக்கிரக முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன.

அதேசமயம், தமிழரசுக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் எதிலும் தமிழ் இடதுசாரிகள் எவரும் பங்கேற்கவில்லை. அதேவேளை சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராக தமிழரசுக் கட்சி திருமலை பாதயாத்திரை, சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் என்பன போன்ற பல தரப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோதிலும், இவை எவற்றிலும் இடதுசாரித் தரப்பினர் பங்கேற்று ஆதரவளிக்கவில்லை.

1961ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் ஐ.தே.கட்சியியைத் தோற்கடித்து சுதந்திரக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டனர். ஆனால், 1961ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டத்தைத் தமிழ்ப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தும் அரசின் முடிவுக்கு எதிராக தமிழரசுக் கட்சியினர் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டங்களில் தமிழ் இடதுசாரித்தலைவர்களெவரும் பங்கேற்பதைத் தவிர்த்துக்கொண்டனர். இடதுசாரிக் கட்சிகளின் இக்கொள்கை நிலைப்பாடுகள் காரணமாக இடதுசாரித் தரப்பின் மீது அதிருப்தியுற்ற இலங்கை சமசமாஜக் கட்சி உறுப்பினர்களான சிவ சிதம்பரம் மற்றும் ஆனந்தசங்கரி ஆகியோர் அக்கட்சியிலிருந்து வெளியேறி இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டனர்.

### 1965 ஆண்டு முதல் 1985 ஆண்டு வரையிலான காலகட்டம்

1963ஆம் ஆண்டில் இடதுசாரிக் கட்சிகளான இலங்கை சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும், இனவாதக் கட்சியான சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டன. 1966ஆம் ஆண்டின் தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்க் கப்பட்ட சமயம் இந்த இடதுசாரிக்கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. ஆயினும்,

**அரசியல்**

அந்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இனவாதத் தரப்புக்கள் முன்னெடுத்த போராட்டத்துக்குச் சண்முகதாசனின் தலைமையிலான சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு வழங்காது தவிர்த்துக் கொண்டது. அதேவேளை இனவாதத் தரப்புகளது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்த அக்கட்சியின் உறுப்பினர் ரோஹண விஜேவீரவையும் அக்கட்சி, கட்சியினின்றும் வெளியேற்றியது.

1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்து உருவாக்கிய கூட்டு முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டது. அதனையடுத்து சிறிமாவோவின் தலைமையிலான அந்த அரசில் அமைச்சரொருவராக விருந்த சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி.சில்வாவால் புதிய அரசமைப்பொன்று தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அந்த அரசமைப்பும் சிங்கள மொழிக்கே முதலிடம் வழங்கி உருவாக்கப்பட்டிருந்தது. சிங்கள மொழியே அரச கரும மொழியாகவும், பௌத்த மதமே முக்கிய மதமாகவும் அந்த அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி சோல்பரி அரசமைப்பில் தமிழ் மக்களது பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்டிருந்த அரசமைப்பின் 29ஆவது பிரிவு புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இவற்றையெல்லாம் திட்டமிட்ட விதத்தில் தாம் தயாரித்த அரசமைப்பில் அதன் நிர்மாண கர்த்தாவான கொல்வின் ஆர்.டி.சில்வா மேற்கொண்டு முடித்திருந்தார். இதன் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் இடதுசாரிக் கட்சிகள் குறித்து நிலவிவந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் அற்றுப்போக நேர்ந்தது. 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பின் பின்னர் இலங்கை அரசியலில் தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவந்த நம்பிக்கை முற்றுமுழுதாகத் தகர்ந்துபோய்விட்டது. அதன் காரணமாக வேறு விதத்தில் தனிநாடொன்றை உருவாக்கிக் கொள்ளும் எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் தலைதூக்க ஆரம்பித்தது. அது படிப்படியாகத் தீவிரமடைந்து ஆயுதப்போராட்டமொன்றாக உருவெடுத்தது. அந்த வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளது தோற்றமும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தனிநாட்டுக்கான தீர்மானமும் இவற்றுக்கு உரமிட்டு வளர்த்தன. 1983 ஆம் ஆண்டின் இனக்கலவரமும் இத்தகைய சிந்தனை மென்மேலும் தீவிரம் பெறக்காரணமாய் அமைந்தது.

### 1985 முதல் இற்றை வரையான காலகட்டம்

இந்நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினை விடயத்தில் இடதுசாரித் தரப்புக்கள் விசுவாசமாக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயற்பட்டிருந்தால் தமிழ் மக்கள் மத்தியில் அத்தரப்பினர் பெரும் ஆதரவை ஈட்டிக்கொள்ள வாய்ப்பமைந்திருந்தது. அடிப்படைக் கொள்கைகளை நியாயமான முறையில் வகுத்து, அவற்றுக்கு மதிப்பளித்து செயற்படுவதால் இந்தியாவின் முக்கிய இடதுசாரித் தரப்புக்கள் இன்றும் இந்திய மக்களது ஆதரவை ஈட்டி வலுவான நிலையில் செயற்பட முடிந்துள்ளது. ஆனால், இலங்கையிலேயே இரு முக்கிய இடதுசாரிக்கட்சிகளும் தமது வசதி வாய்ப்புக்களை ஈட்டிக்கொள்ளும் - சந்தர்ப்பவாத அரசியல் நோக்குடன் செயற்பட முனைந்தமையால் இன்று இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் அவ்விரு இடதுசாரிக் கட்சிகளும் போக்கிடமற்றுத் தேய்ந்து அழிந்துபோக நேரிட்டுள்ளது. ★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கார்த்திகைத் திருவிழா இன்று

*மாவைக் கந்தன் அருள்பாலித்திடத் துதிக்கிறோம்*


## ஜெயதுர்க்கா

நகைத்தொழிலகம்
காலத்துக்கு ஏற்ப புத்தம் புதிய டிசையின்களில் தரமான 22கரட் தங்கத்தில் செய்து பெற்றுக்கொள்ள தவறாமல் நாடுமிடம்.
ஸ்ரேசன் றோட், மல்லாகம்.

## ஜனா பாம்

பால், பால் உற்பத்திப் பொருள்கள் சுத்தமான பசு நெய் விற்பனை நிலையம்.
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.


## மாவை முருகன் மலரடி தொழுவோம்



பூ இட்டுப் போற்று வோரும்
புனிதம்சேர் இறைமை போற்றும்
பாஇட்டுப் போற்று வோரும்
பல்கிடும் பதியாய் உள்ள
மாவிட்ட புரத்தின் கந்தன்
மலரடி வணங்கு வோர்க்கு
நோய்விட்டுப் போகும் என்ற
உண்மையை உணர்ந்தோம் நாமே!

அன்புளம் வேண்டு வோர்க்கும்
அறநெறி வேண்டு வோர்க்கும்
பண்புளம் வேண்டு வோர்க்கும்
பார்நலன் வேண்டு வோர்க்கும்
முன்னின்றே அருள் செய்கின்ற
முருகனே மாவை மேவும்
பொன்செய்த மேனியோய் நின்
பொன்னடி வணங்குவோமே!

அற்புதம் நிறைந்த கந்தன்
கார்த்திகை விழாவைக் கண்டே
பொற்புற வணங்குவோர்கள்
புவியினிற் சிறப்புக் காண்பார்
குற்றங்கள் சேர் வதில்லைக்
குணங்களே வந்துசேரும்
நற்கதி கிட்டும் எந்த
நலிவுமே நேர்வதில்லை!

*புலவர் ம.பார்வதிநாதசிவம்*


## ஓமக்ஸ் ஹோட்டல்

காலை, மாலை உணவு வகைகளும், மதியம் புரியாணி அனைத்துச் சாப்பாடு வகைகளும் ஐஸ்கிறீம், கிறீம்சர்பத், நெல்லி மென்பானங்களும் விசேடமாகவும் ஒடருக்கும் பெற்றுக் கொள்ளலாம்.
372,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

## ஆர்த்தி ரெக்ஸ்

சிறுவர்களுக்கான எழில் கொஞ்சும் அழகான ஆடைகள்
இல.33 நவீன சந்தை
[உட்புறம்]
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ கபிலா ஸ்ரோஸ்

பல்பொருள் வாணிபம்
சகல பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
சுதுமலை றோட், தாவடி.

## சோதி ஸ்ருடியோ

சகல மங்கள வைபவங்களையும் சிறந்த முறையில் கலர்ப்படம் பிடித்திடவும் கறுப்பு, வெள்ளை பாஸ்போட் அறிமுக அட்டை, அடையாள அட்டை படங்களை, உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்:
கே.கே.எஸ். றோட், மல்லாகம்.

## ராஜா ஸ்ரோஸ்

புதினப்பத்திரிகை முகவர்
பெயின்ட் இரும்பு வாணிபம்
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

## லக்சுமி ஸ்ரோஸ்

பல்பொருள் வாணிபம்
சகல பொருள்களும் நியாயவிலையில் கிடைக்கும்.
சுதுமலை றோட், தாவடி.


## தசாக கிருஹயக்ஞம்

நிகழும் சர்வதாரி வருடம் ஆடிமாதம் 03ஆம் நாள் (18.07.2008) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த

செல்வி

### ஹேமாவதி செந்தில்நாதக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் : 27.07.2008 ஞாயிற்றுக்கிழமை
ஏகோதிஸ்டம், மாசியம்: 28.07.2008 திங்கட்கிழமை
சபிண்டீகரணம்: 29.07.2008 செவ்வாய்க்கிழமை
கிருஹயக்ஞம்: 30.07.2008 புதன்கிழமை

சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம். (76661) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



தர்மபரிபாலன சபையின் உதவிச் செயலரும், சைவப்புலவருமாகிய *சண்முகராஜா சிறீகாந்தன் (யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை மானிடவியல் உதவி விரிவுரையாளர்)* அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சண்முகராஜா தையல்நாயகி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயில்
தர்மபரிபாலன சபையினரும்,
சை.ச.அபிவிருத்திக் கழகத்தினரும்.

366, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை இராஜசிங்கம்



கரவெட்டி, கோவிற்சந்தையடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராஜசிங்கம் 20.07.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - பத்தினி தம்பதியரின் தவப்புதல்வரும் சின்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதி, இராஜரத்தினம், காலஞ்சென்ற வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மகேஸ்வரி, பத்மராணி, காலஞ்சென்ற கனகசபை, சிதம்பரநாதன், சிற்றம்பலம், கந்தப்பு, தாமோதரம், கண்ணகை, சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனரும் வரதராஜன், அமிர்தராஜன், சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அற்புத ரஞ்சினி, சாந்தரூபன், தனலக்ஷ்சி ஆகியோரின் அன்பு மாமனும் சர்மலி, வைசாலி, வைஷவி, சப்தகி ஆகியோ ரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் முற்பகல் 10 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெற்று பூதவுடல் பி.ப.12.45 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கரவெட்டி. சி.இராமநாதன்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கந்தர்மடம் பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள அரசடி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைப் பொறுப்பாசிரியை திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் பூ.சிவநேசன் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை27

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் கே.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் கலந்து கொள்வார்.

இறுதிஆட்டங்களின் விவரம் வருமாறு:-

- பெண்கள் பிரிவு- காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.-
- ஆண்கள் பிரிவு 'பி' -ஆவரங்கால் பாரதி வி.க. எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க.-
- ஆண்கள் பிரிவு "ஏ"- அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. (202)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளி [illegible]யாயிருந்து உன்னத நிலையை நான் அடைய [illegible] வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் [illegible] அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருங்கொடை[illegible]களின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி[illegible]! எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க [illegible] அருள்புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்தி[illegible]லும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறி[illegible]ய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கு[illegible]ம் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்[illegible]வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொ[illegible]ண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மி[illegible]ல் நிலைத்திருப்பபே னென உறுதி கூறுகின்[illegible]றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனை[illegible]வரும் என்றென்றும் உமது முடிவில்லா மகி[illegible]மையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி
உலக இ[illegible]ட்சகரான இயேசுவே
நீச[illegible]ப்பாவிகள் மேல்
அளவில்[illegible]ா இரக்கம் உள்ளவரே
முடிய[illegible]ாத காரியங்களை
கைகூ[illegible]டப் பண்ணியவரே
[illegible]கள் இயேசுவே
எங்கள் [illegible] [illegible]

## கண்ணீர் அஞ்சலி



எமது விளையாட்டுக் கழக உறுப்பினர்களான எழில்வேந்தன், எழில்காந், எழில்வதனன் ஆகியோரின் பாசமிகு தந்தை

### அமரர் சுப்பிரமணியம் கனகசிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மத்திய விளையாட்டுக்கழகம்**, ஆவரங்கால்.

## கண்ணீர்க் காணிக்கை



நல்லூரைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், சூளானையை வாழ்விடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி இராசம்மா துரைசிங்கம்


*(இராசலட்சுமி)*

அவர்கள் (24.07.2008) அன்று கொழும்பில் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வை.சிவகுமாரன்.**

**அம்பாள் பல்பொருள் வாணிபம்,**
*271, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 021 222 2531*

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் பூதர் ஐயாத்துரை

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர், ஸ்ரீமுருகன் தொழிற்சாலை)

மண்மகிழ
15.05.1937

மனம்துடிக்க
18.06.2008

எம் மண்மகிழ, மனம் மகிழ வந்துதித்த சூரியனே!
பலர் வாழ்வுக்கு ஆலமரம் போல் வாழ்வு தந்தவரே!
நீர் மறைந்துபோனாலும், உம் சேவையும், ஆதரவும்
என்றும் எம்மக்களின் மனங்களைவிட்டு நீங்காது!

எமது தந்தையின் மறைவையொட்டி ஓடோடிவந்து ஆதரவுதந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், ஆறுதல், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சகல நிகழ்வுகளின்போதும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நி.முகவரி: K.K.S. வீதி, தெல்லிப்பழை.
த.முகவரி: உச்சிரோடை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் அருள்மிகு கந்தசுவாமி கோவில்

## திருக்கார்த்திகைத் திருவிழாச் சிறப்பிதழ் 27.07.2008

## கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் கார்த்திகேயன் ஆன முருகப்பெருமான்

பாரதத் திருநாட்டின் ஆறுபடை வீடுகளில் முருகப்பெருமான் எழுந்தருளி அருளாட்சி புரிவதுபோன்று, ஈழமணித்திருநாட்டிலும் குமரக்கடவுள் குடிகொண்டு அடியவர்க்கு அருள்புரியும் திருத்தலங்களுள் மாவிட்டபுரம் திருத்தலமும் சிறப்புப்பெற்றதொன்றாகும். ஈழத்து ஆறுபடைவீடுகள் எனக்கொள்ளப்படும் செல்வச்சந்நிதி, கதிர்காமம், கந்தவனம், நல்லூர், வெருகல் என்பவற்றுடன் ஆறாவது திருத்தலமாகச் சிறப்புப் பெற்றது மாவிட்டபுரம் முருகன் திருத்தலமாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயம், இன்றைய மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேயன்துறை ஆகிய கிராமங்களை உள்ளடக்கி, கோவிற்கடவை் எனஆதிகாலத்தில் பெயர் வழங்கப்பட்ட நிலப்பகுதியில் அமைந்திருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் பகர்கின்றன. கடற்கரையோர கிராமமான கீரிமலையில் அமைந்திருந்த புனிதத் தீர்த்தத்தில் நகுல முனிவர் தீர்த்தமாடி கீரிமுகம் நீங்கப்பெற்றதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கீரிமலை புனிதத் தீர்த்தத்தின் மகிமையை அறிந்த சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி, கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி, கோயிற்கடவை முருகனைத் தரிசித்து குதிரை முகம் நீங்கப் பெற்றதால் இத்தலம் மாவிட்டபுரம் எனப்பெயர் பெற்றதாக வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

தனது குறைநீங்க அருளிய முருகப்பெருமானுக்கு, பெரிய திருவாலயம் ஒன்றை அமைத்து அங்கு பிரதிஷ்டைசெய்ய இந்தியாவில் இருந்து காங்கேயன் என்ற நாமத்தாலும் ஏற்றப்படும் முருகனின் திருவுருவச் சிலையை மாருதப்புரவீகவல்லி வரு வித்து இறக் கியமையால் அவ்விடம் காங்கேயன்துறை எனப் பெயர்பெற்றதாக வரலாற்றுத் தகவல் கள் மூலம் தெரியவந்துள்ளது. அக்காலம் முதல் இவ்வூர்க் குருகுல மக்கள் முருகப்பெருமானின் கார்த்திகை உற்சவத்தை மிகச்சிறப்பாக நடத்திவருகின்றனர்.

### கந்தனுக்கு கார்த்திகை

முருகப்பெருமானின் திருத்தலங்களில் கொண்டாடப்படும் உற்சவங்களில் கார்த்திகை உற்சவம் தனித்துவச் சிறப்புமிக்கதாகும். கார்த்திகைக்கும் முருகனுக்குமுரிய தொடர்பு அற்புதமானது. முருகனை வேண்டி மேற்கொள்ளும் விரதங்களில் கார்த்திகை விரதம் விசேடம் மிக்கது.

சரவணப்பொய்கையில் உதித்த திருமுருகன். செந்தாமரைமலரில் பாலனாய் தோன்றிய விந்தை கண்டு தேவர்கள் யாவரும் வியந்தனர். இறைவனின் பணிப்பின்பேரில் கார்த்திகைப் பெண்கள் அறுவரும் திருமுருகனுக்குப் பாலூட்ட முனைந்தபோது ஒரு திருமுருகன் ஆறு திருக்குழந்தைகளாக ஆறு தாமரை மலர்களில் தவழக்கண்டு கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஆளுக்கு ஒருவராய் அத்திருக்குழந்தைகளை அள்ளியெடுத்துப் பாலூட்டி மகிழ்ந்தனர். கார்த்

**ஐயாத்துரை நற்குணநாதன்**

திகைப் பெண்களால் பாலூட்டப் பெற்றமையால் முருகப்பெருமானுக்கு கார்த்திகேயன் என்ற திருநாமம் நிலைக்கப்பெற்றது.

சரவணப் பொய்கையில் தவழ்ந்துவரும் ஆறு குழந்தைகளின் அழகுகண்டு, அகமகிழ்ந்து, பார்வதிதேவியார் அறுவரையும் ஒரு சேர அள்ளி அணைக்க முற்பட்டவேளை, ஆறுமுகக்கடவுளாக அன்னையின் கரங்களில் ஒருகுழந்தையாகித் திகழ்ந்தமையால் முருகன், கந்தன் எனத் திருநாமம் கொண்டான்.

இவ்வற்புதம் கண்டு மகிழ்ந்து சிவப்பரம் பொருளையும், பார்வதிதேவியையும், கந்தவேள் பெருமானையும் அக்கார்த்திகைப்பெண்கள் துதித்து நின்றபோது ''முருகனை நீங்கள் வளர்த்தமையால் இவன் உங்கள் மகன் என்ற பொருளில் கார்த்திகேயன் எனப்பெயர் பெறுவான். உங்கள் தினமாகிய கார்த்திகையில் முருகனை வழிபடுவோர் இக பர சுகங்களை பெற்றுய்வர்'' என சிவபெருமான் அருள் புரிந்தார்.

### கார்த்திகை விரதம்

கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம் முதலாக திருக்கார்த்திகை மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப்பெருமானை துதித்து கைக்கொள்ளப்படும் விரதம் இதுவாகும். உபவாசம் உத்தமம். இயலாதோர் இரவில் பால், பழம், பலகாரம் உண்ணலாம். அதுவும் இயலாதோர் பகல் ஒருபொழுது போசனம் செய்யலாம். தொடர்ந்து 12 வருடங்கள் இவ்விரதம் அனுட்டிப்பது உத்தமம்.

இவ்விரதத் தினங்களில் தேனும் தினைமாவும் சேர்த்து மாவிளக்கேற்றி முருகனை வழிபட்டால் அவனது திருவருள் கிட்டும். கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை விசேடம் மிக்கதாகும். இத்தினத்தில் முருகன் ஆலயங்களில் கார்த்திகை தீபம் (குமாராலய தீபம்) ஏற்றி பெருமானை சோதி வடிவமாக வழிபட்டு அடியார்கள் அவன் அருள் பெறுவர். தொன்மை மிகு மாவைக் கந்தன் ஆலயத்தில் கார்த்திகை உற்சவங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. இவற்றில் மகோற்சவ காலத்தில் வரும் கார்த்திகை உற்சவம் தொன்றுதொட்டு இற்றைவரை காங்கேயன்துறை குருகுல மக்களால் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றது. அன்றிரவு முருகப்பெருமான் வள்ளி–தெய்வயானை சமேதரராய் மின் விளக்குகளால் ஒளியூட்டப்பட்ட சப்பறத்தில் பவனிவரும் காட்சி காணக் கண்கொள்ளாததொன்றாகும். இவ்வுற்சவத்தை தரிசித்து முருகன் திருவருளைப் பெற்றுய்வோமாக. * * * * * * * * * * * * * * * *



### கார்த்திகைக் குமரனின் புகழ்பாடும்

கார்த்திகைக் குமரன் கலியுக வரதன்
கந்தன் உமைமைந்தன்
கவினுறு தமிழின் பொருளென ஞாலம்
புகழும் காங்கேயன்
கிலிகெடுத் தசுரர் படைவலி கெடுத்தும்
தேவர் தமைக்காத்தோன்
கிரௌஞ்சம் துகள்பட வேலை விடுத்தும்
வெற்றித ரநின்றோன்
ஒலிதரு நாதம் ஓமென் றொலிக்கும்
உட்பொருள் செப்பியவன்
ஓங்கிய குன்ம பிணிகெட மாருத
வல்லிக் கருள்புரிந்தும்
வலியுறு மாவை மண்மணம் காண
வானவர் புகழ்பாட
வந்தருள் எந்தை கந்தன் கார்த்திகைக்
குமரனின் புகழ்பாடும்

புலவர் க.குகதேவன் (தெல்லிப்பழை)



## கந்தன் தந்த அறக்கொடையே சிவத்தமிழ்
## ஜெகராஜசிங்கனின் அறக்கொடை யாழ்ப்பாணம்

கண்கண்ட தெய்வம் கலியுகவர தன் கந்தசுவாமி தந்த அறமே ''சிவத்தமிழ்'' மொழி அறம். இன்று தளர்ந் திருப்பினும் அதுவே நிலைத்துநிற்குமென் பதில் ஐயமில்லை.

''அறம்'' என்ற சொல்லிற்கு சரியான சம அர்த்தம் ஆங்கிலத்திலும் உண்டு. பேராசிரியர் GRIFFITH என்பவர் யசுர்வேத பாஷ்யத்தை எழுதியபோது - அறம் என்பது ''MORAL RELIGIOUS DUTY'' எனக் குறிப்பிட்டதை வல்லபாய்படேல், சேர்.சி.பி ராமசாமி ஐயர், சுவாமி விவேகானந்தர், ராஜகோபாலாச்சாரியர் போன்றோர் அதுதான் சரியான கருத்தென அங்கீகரித்துள்ளனர். முழுமனதோடு விரும்பியாற்றும் சமய அனுஷ்டானச்சேவை என்பதே அதன் விளக்கம்.

அறம் எனும்போது அது நல்லறம், நான்மறை அறம், இல்லறம், துறவறம் என்றெல்லாம் பல பேதங்களில் கையாளப்படுகிறது. அறம் செய்வதற்கும் மனதில் விருப்பம் ஏற்றுக் கொள்ளவேண்டியது அவசியம். பெருவிருப்போடு விருப்பங்களில் எதுவித களங்கமில்லாது ஆற்றும் அறம்தான் மானிடர்களால் ஆற்றப்படவேண்டும். இதனை முன்னிலைப் படுத்தியே ஔவையாரும் ''அறம் செய்ய விரும்பு'' என ஆணையிடுகிறார்.

''அறங்கொடை'' என்ற சொற்றொடர் புனிதமானது. இதனை சங்கராச்சார்ய சுவாமிகள் ''சுதாசாரம் தர்மாசரணம்'' என போற்றுகிறார். அறம் செய்வதற்கு தர்மதேவதையிடம் சரணடைய வேண்டுமாம். தர்மசிந்தனைகளினாலும், தர்மகர்மாக்களினாலும் ஒருவனிடம் தஞ்சமடையும் திரவியங்களையே அறம்வாயிலாக கொடைசெய்யவேண்டுமென சுருதிகள் ஆணையிடுகின்றன.

'சத்யகார்யஞ் சேகார்ய திருவ்யோஷ தர்மம் சர' என்கிறது அர்த்தசாஸ்திரம். உலகம் தோற்றங்கொண்டபோதே அறக்கொடையும் தோன்றிற்று. முருகப்பெருமானாலும் ஓர் அறக்கொடை இப் பூமிக்குத் தரப்பட்டது. எத்தனையோ யுகங்களிற்கு முன்பாகவே இந்தக் கொடையை எம்பெருமான் எமக்கு வழங்கிவிட்டார். கொடையை வழங்கியவர் முருகப்பெருமான். அதனைப்பெற்று எமக்குத்தந்தவர் அகத்திய மாமுனிவர். இன்றும் சிவத்தமிழர் ஒவ்வொருவரும் அந்த கொடையைப்பெற்று அனுபவிக்கிறார்கள். கொடையை வழங்கியவரை யாம் வணங்கி நிற்கின்றோம். பெற்றுத்தந்த அகத்தியரை மறந்து விடுகிறோம். மறந்ததால்தான் ''சிவத்தமிழ்'' அந்தஸ்த்தில் தாழ்ந்தது.

### தமிழ் பிறந்த தன்மை

உத்தராயண புண்யகாலமான தைமாதப் பிறப்பு சங்கிராந்தி தீர்த்தம் மிகமிகப் பெறுமதி வாய்ந்தது. அன்றைய தினத்தில் எங்கெல்லாம் ஜலதாரை ஊற்றுகள் இருக்கின்றனவோ அவையாவும் அமிர்தஜலகளைப் பெற்று அமிர்தவர்ஷிணியாக மாற்றம் பெறுகின்றன. தேவர்களும் ரிஷிகளும் திருக்கைலாய மலைக்குச்சென்று மந்தாகினி நதியில் மூழ்கி இறைவனைத் தரிசிப்பது வழமை. தீர்த்தமாடி கர்மானுஷ்டானங்களை பூர்த்திசெய்துவிட்டு பார்வதி பரமேஸ்வரனையும் வணங்கிவிட்டுத் திரும்பிய அகத்தியரை, மந்தாகினிநதிச் சாரலில் வீற்றிருந்த முருகப்பெருமான் அழைத்து, அருகிலிருத்தி, ''அகத்தியா! பூமியில் சிவதர்மச் செயல்பாடுகள் மேம்படவும், நான்மறைகள் ஓங்கவும், நன்மைக்ள் புரிந்து நலமோடு ஜீவன்கள் வாழவும், ஈரேழு பதினான்கு உலகிற்கும் உயிர்கொடுக்க உதவும் ஓர் சப்தசங்கிரகத்தை யான் தோற்றுவிக்கப்போகிறேன். அந்த சப்தத்தின் முதல் எழுத்து உனது பெயரின் முதலெழுத்தாக அமையும். இந்த சப்தங்கள் இதோ யான் தோற்றமெடுத்த மந்தாகினிநதியின் ஓசையோடும் இணையவும்வேண்டும்'' எனக்கூறி தனது பன்னிரண்டு க்ரங்களாலும் ஒவ்வோர் கரங்களுக்கும் ஒவ்வோர் எழுத்தாக அ முதல் ஔ வரையும், வரைந்துவிட்டு இதற்கு ஓசையை உன்வாயால் அமைத்துவிடு என்றதும் அகத்தியர் அருமையான சப்தங்களை அந்த உயிரெழுத்துகட்கு அமைத்துவிட்டார். இதுவே 12 தமிழ் உயிர் எழுத்தானது. உயிர் வாழ மெய் வேண்டும். உடம்பு வேண்டும். இதனை உணர்ந்த அகத்தியர் ''சுவாமி, உயிர் எழுத்துகள் தோன்றிவிட்டன. அவை வாழ மெய்வேண்டுமல்லவா, இதற்கு என்ன பரிகாரம்'' என வினாவியதும், ''இதோ எனது ஆறு வதனங்களிலிருந்து பதினெட்டு நேத்திரங்கள் மூலம் மெய்வடிவங்களையும் காண்பிக்கிறேன். அதற்கும் நீதான் ஓசையமைக்க வேண்டும்'' எனக்கூறி க முதல் ன வரையும், ''கண்'' என்ற சொல் வரத்தக்கதாக 18 மெய்வடிவங்களை காண்பித்தார் மந்தாகினி தந்த மைந்தன். இதுவே மெய்யெழுத்தாயிற்று. இந்த மெய்யெழுத்துக்களிலும் உயிரெழுத்தான ''அ'' வில், அகத்தியனும் கூட வாழ்ந்து வருகின்றார். முருகப் பெருமானது கைவேலிலிருந்து இவ்வேளையில் ஓர் ஒளிபிரகாசித்தது. விஸ்வாமித்ரர் முருகனுக்குக் கொடுத்ததே அந்த வேல். அந்த ஒளியின் பிரகாசத்தை அறிய எம்பெருமானிடம் அதுபற்றிவினாவ, ''எனது ஆயுதத்திலிருந்து பிரகாசிக்கும் சக்தி. ஆயுத எழுத்தாக ஃ மூன்று அனுவில் உயிர்மெய் எழுத்துக்களின் இடையே அமையட்டும்'' என்றார். அகேனமும் உருவாகிற்று. இதுவே ஆயுத எழுத்து. இவ்வாறுதான் ''தமிழ்'' எழுந்தது.

சிவபிரான் தனது காதில் குண்டலங்களின் வாயிலாக சமஸ்கிருத எழுத்துக்களையும் பாஷையும் தர, முருகப்பெருமான் தனது திருக்கரங்களையும், திருநேத்திரங்களோடு வேலாயுதத்தையும் இணைத்து தமிழ் எழுத்தும் தமிழ்பாஷையையும் தந்துநிற்க, இதனை மனதில்கொண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்ட அகத்தியர் முருகப்பெருமானது பாதங்களில் மரம் வீழ்ந்தது போல வீழ்ந்து வணங்கி நின்றார்.

''ஆதியுற்றுழி அச்சமோடேயழி இ மூதுரைத்தமிழ் முற்றுணர்மாமுனி
கோதையுற்றிடக் கொம்பொடுவாங்கிய பாதலத்திற் பணிந்தனைன்பன்முறை'' (கந்தபுராணம்)



மகாராஜா ஸ்ரீ க.து.
**ஷண்முகநாதக்குருக்கள்**
ஆதீனகர்த்தா - பிரதமகுரு
மாவையாதீனம்

### சிருஷ்டியின் இரண்டாவது அறக்கொடை தமிழே

உத்தராயண புண்ணியகால சங்கிராந்திதினத்தில் முருகப்பெருமான் எமக்களித்த அறக்கொடை, ''தமிழ்'' ஆக எமக்கு கிடைத்தது. இக்கொடையைத் தந்த முருகப்பெருமானுக்கும் அகத்தியனாருக்கும் தமிழ் உலகம் என்ன செய்தது. இந்த உத்தராயணகால தினத்தன்று 'தமிழுக்கு' ஓர் உற்சவம் எடுக்கிறோமோ? ஆராதனைதான் செய்கிறோமோ? ''இல்லை''. அன்றைய தினத்தில் தமிழால் பாரெங்கும் இறைவனைச் சிந்தித்துப் பாடுகின்றோமா? ''இல்லை'' ஆலயங்களில் தானும் தமிழ், அரசோச்சுகிறதா? இதனாற்தான் இந்த அறங்கொடையான தமிழ் இன்று எங்கும் தத்தளித்துனின்று வாழ்கிறது. சிருஷ்டியில் இரண்டாவது அறக்கொடை இதுவேயாம்.

ஓர் தமிழரசன் தனது பிறந்ததினத்தன்று கொடுத்த அறக்கொடையொன்றுண்டு.இக்கொடையைப்பெற்ற பரம்பரையினர் அதனையும் மறந்தனர். மாருதப்புரவல்லி உக்கிரசிங்கனின் பேரன் ஜெயத்துங்கவரராசன் பிறந்த தினம், சித்திரைப்பரணி நட்சத்திரம். இவனது கொடைத்திறனை அறிந்து, சோழநாட்டிலிருந்து இங்குவந்திருந்த கவிவீரராகவன் எனும் ஏழைக்குருடன் இவ்வரசன்பேரில் ஓர் பிரபந்தம் பாடி யாழ் மூலம் இசைத்து அரசனை மகிழ்வித்தான். மகிழ்வித்தமைக்காக அரசனது பிறந்ததினக்கொடையாக ''மணல் திடல்'' என்ற பிரதேசத்தை இவன் அறக்கொடையாகப் பெற்றான். அன்றிலிருந்து இப்பிரதேசம் யாழ்ப்பாணமாயிற்று. இந்த பிறந்தநாள் அறக்கொடையின் சார்பாகத் தமிழர்கள் இங்கு பரந்து வாழவழிகண்ட இவ்வரசனையும் கவிவீரராகவனையும் யாம் நினைப்பதுண்டா?

வேதகாலங்களில் அறங்கொடை புரிந்தவர்களது விபரங்கள் யசுர் வேதத்தில் ஏராளமுண்டு. வேதகாலத்தில் இவ்வாறு தர்மவழிகளில் தமக்குச் சேர்ந்த செல்வங்களை, அறக்கொடையாக அனைவருக்கும் கையளித்ததால் , ''சுபா ஜீவ கம்பவதனிதா'' என்ற ரிஷிபத்தினி முதலிடம் பெறுகிறாள். இதேபோன்று ஆரண்யவாசிகள் சுகமாக தமது தபஸ்களை இயற்ற அவர்கட்கு வேண்டப்படும் உணவை அலைந்து திரிந்து சேகரித்து கொடையளித்தவர்களது வரிசையில் ''சுமேதா'' என்பவள் தலைசிறந்த ரிஷிபத்தினியாவாள். வேதகாலத்து அஸ்வமேதம் , இராஜசூயம், வானபிரஸ்தம், வாசஸநேயம் போன்ற தலைசிறந்த யாகங்களுக்கு வேண்டிய சகல வஸ்துகளையும் ரிஷிபத்தினிகள் தான் யாசித்துக் கொடை செய்தனர் என்ற வரலாறுகள் யசுர் வேதத்திலும் உண்டு. இதில் ரிஷிபத்தினிகளான சத்யபாமா, ஜபாலா, மைத்ரேயி, கார்க்கி என்போர் தலைசிறந்த கொடையாளிகளாகக் காணப்படுகின்றனர். மகா பாரதத்தில்முனிபுங்கவர்கட்கு அறக் கொடையாகத் திரௌபதி சூரியபகவானிடமிருந்து அட்ஷயபாத்திரம் பெற்றிருந்த வரலாறு உண்டு.

குமாரசம்பவத்தில் காளிதாசர், முருகப்பெருமான் பெற்ற அறக்கொடைகள் பற்றியும், எம்பெரு மான் உதவிய அறக்கொடைகள் பற்றியும் உண்டு. ''ரஸ கங்காதரம்'' எனும் நூலிலும் அறக்கொடைகள் பற்றிய தகவல்களுண்டு. பண்டிதர் ஜகன்னாதர் இந்நூலில் அறக் கொடைகளை நான்காகக் காட்டி, அதனை எவ் வாறு இயற்றவேண்டுமெனவும் தரவுகள் தந்துள்ளார்.

கர்ணனது கொடையை- வீரன் கொடையென்றும்;

சிபிச்சக்கரவர்த்தியின் கொடையை - தயாகொடையென்றும்;

இராமபிரானது கொடையை - யுத்தவீரக் கொடையென்றும்;

தர்மரின் கொடையை - தர்மத்தினின்றும்வழுவா கொடையென்றும்;

வேட்ன் கண்ணப்பனது கொடையை - திருவருட்கொடையென்றும்;

சிறப்பித்துக் காட்டியுள்ளார். இவ்விதமான அறக்கொடைகளும் உலகிற்கு வேண்டியிருந்தது.

### சிறப்புக் கட்டுரை

அறக்கொடைகள் வழங்குபவர்கள், வேண்டிய வஸ்துகளை, ஓர் சங்கல்பத்தை முன்வைத்து, அவற்றைச் சேகரித்தே கொடுக்க வேண்டுமென்பதுவும் நியதி. வர்ணாச்சிரம தர்மவாழ்வியல்களில், அறக்கொடை மிகுந்த அவசியமான அம்சமாகவும் அமைந்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அறக்கொடை வழங்குவதற்கும் தகுதிவேண்டும். சகல நிதி சாஸ்திரங்களும் , வேதோபநிஷதங்களும் அத்தகுதி பற்றி பேசி நிற்கின்றன.

## தாய் தந்தையரின் பிதிர்க்கடன்களை ஆற்றுவோர் இலகுவில் அறக் கொடைகளுக்கு ஆளாகுவர்

எவன் தனது தாய்தந்தையரை காலை மாலை நேரங்களில் ஒருவினாடி மனதாற சிந்தித்து உமாமகேஸ்வரனாக ஆராதிக்கிறானோ அவனே அத்தகுதிக்கு உரியவனாகுவான். எவன் தனது தந்தையார்க்குரிய பிதிர்க்கடன்களை ஆற்றுகிறானோ அவனே அறக்கொடைக்கு ஆளாகுவான். எவன் தனது பிறந்த தினத்தை நினைக்கிறானோ அவனே அறக்கொடை வழங்குவதற்கும் தகுதியாவான்.

இவ்வாறு அனேக தரவுகளை சுக்கிரநிதி, வைத்தியாத தீக்ஷிதம், அர்த்த சாஸ்திரம் எனும் நூல்களின் தரவுகள் தந்து நிற்கின்றன. புராணங்களிலும் சிவபுராணம், கந்தபுராணம் மூலம் தரப்படும் அறக்கொடைகள் சித்திவதி அஸ்து - (சித்திகள் பல தரும்). புண்யம் சிந்ததி-(புண்யங்கள் பன்மடங்காக வந்து சேரும்) ஸோகாகுலம் சாந்துவயதி- (துன்பங்களினால் கலங்குபர்களை தேற்றிவிடும்) தர்மவரணம் திரவியம் அஸ்மாபிஹி லப்தே- (எம்பொருட்டு தர்மமாக பெறப்படும் திரவியங்கள் உரியவர்கட்கு வழங்கப்படுகிறது என சங்கல்பிக்கவும் வேண்டும்) அப்போது தான் தர்மமும் தழைக்கிறது.

சிவத்தமிழ் வாழ தமிழ்மொழிமூலம் வழிவகுத்த கார்த்திகைக்குமரனை யாமனைவரும் தினமும் நினைத்து வழிபடுவோமாக. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் இந்து முன்பள்ளி மெய்வல்லுநர் விழா - 2008

காலம்: இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 1.30 மணிக்கு
இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்
பிரதம விருந்தினர்: திரு.சு.வே.மகேந்திரன்
[உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்]
சிறப்பு விருந்தினர்: திரு.மேரிஜோசப் சாந்தசீலன்
[செயலாளர், நல்லூர் பிரதேசசபை]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்.**
(K.C.C.C)

(சி/553901)

## 36ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
**காசிப்பிள்ளை பஞ்சாட்சரம்**
மலர்வு:01.05.1927
உதிர்வு:22.06.2008

கார்த்திகைக் குமரா - நல்லைக்
கந்தா! நல்லிணுவை வேலா!
காத்திடும் பருத்தி ஐயா! - நாம்
கைதொழும் விளாத்தியடியானே!
சேர்ந்தீர் உம்பாதம் - எங்கள்
திருவைந்து எழுத்தாம் நாமம்
மாற்றம் என்றறியோம் -என்றும்
எம்மனதுளே வாழ்வீர் ஐயா!
ஓம் சாந்தி!

கடந்த 22.06.2008 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் காசிப்பிள்ளை பஞ்சாட்சரம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"செல்வபதி"
பாற்சங்க ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

**குடும்பத்தினர்.**
(சி/553900)

## ஆடு (கடா) விற்பனைக்கு

எம்மிடம் ஒரு வருடம் நிரம்பிய இரண்டு ஆட்டுக்கடாக்கள் கறுப்பு/ சிவப்பு நிறங்கள் கொண்டவை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
**வே.சண்முகலிங்கம்**
சேச்லேன், திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். 077 9116373

## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவு முறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர் கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர்.

## சிக்கன மின்குமிழ்

60%-80% வரையான மின்சார சிக்கனத்தை ஏற்படுத்தும் உத்தரவாதத்துடன் கூடிய மின் குமிழ்களை (Energy Saving Bulbs) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
**Digital Electronics**
205/7 Raja Theatre Complex
Kasthuriar Road, Jaffna.

## மணமகள் தேவை

பட்டதாரி ஆசிரியர், வயது 43, கத்தோலிக்க மணமகனுக்கு ஆசிரியர் மற்றும் அரச தொழில் புரியும் மணமகள் தேவை. மதம் மாற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
**R.திருமகள்**
தும்பளை றோட், பருத்தித்துறை
021 226 3467

## வேலை ஆள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு சகல விதமான சிற்றுண்டி வகைகள், உணவு தயாரிக்கக் கூடிய சமையல் ஆள், சிற்றுண்டி சப்பிளையர் (பையன்கள்) உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, சிற்றுண்டி தயாரிப்பவர்களுக்கு விசேட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
**ஆல் நியு அருண் ஐஸ்கிறீம்**
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (சி/557894)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை27

சங்குவேலி வடக்கு முத்துமாரியம்மன் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக மாட்டு வண்டில் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கந்தரோடை சவாரித் திடலில் நடைபெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படவுள்ளது. (202)


## அறிவித்தல்

பரம்பரை வைத்தியர்களின் மேம்பாட்டிற்காக யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவுசெய்த, பதிவுசெய்யாத ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்கள் தமது சுயவிவரக்கோவையை 05.08.2008 இற்கு முன்பு நேரிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றேன்.

**Dr.G.Sritharan**
(1207) 651, K.K.S.Road, Jaffna.
T.P.- 021 222 2537
(76658)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **முருகேசு ராஜ்கண்ணன்** (கண்ணன்)
(தவில் வித்துவான்)
திதி: 27.07.2008



தாயவள் கையில் 27.11.1977
காலனவன் கையில் 08.08.2007

பாசத்தை எமக்களித்து
பாதியிலே பிரிந்தாயே கண்ணன்
பதறியே துடிக்கின்றோம்
உன்னைத் தினம் எண்ணியே!
பாரினில் வந்திடுவாயா?

கைதடி தெற்கு,
கைதடி.

உன்பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**



எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி பத்மினி ஸ்ரீகாந்தன்
அவர்களின் தாய்
**திருமதி ஞானேஸ்வரி அப்புத்துரை**
அவர்கள் 27.06.2008 அன்று காலமானதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ தொண்டைமானாறு வீ.ம.வி. தொண்டைமானாறு

## அண்டவேல்ப் பிள்ளையார் கோயில்

தங்கோடை, காரைநகர்

### முக்கிய அறிவித்தல்

பிள்ளையார் அடியார்களே,

கடந்த பல வருடங்களாக மேற்படி ஆலயத்தை நிர்வகித்து வந்த நான், தற்போதுநிர்வகிக்க முடியாத சந்தர்ப்ப சூழ் நிலைகளால் மீண்டும் ஆலயத்தை 31.07.2008 ஆம் திகதியுடன் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து, அன்றிலிருந்து ஆலயத்தின் சகல பொறுப்புக்களிலிருந்தும் நான் விலகிக் கொள்கின்றேன்.

தம்பிப்பிள்ளை சண்முகராஜா
குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழில் விற்பனை முகவராக இருக்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு சிங்களமொழி சரளமாகப் பேசக்கூடிய, கணனி அறிவுடைய 28 வயதுக்குட்பட்ட விற்பனை பிரதிநிதி தேவை. ஆங்கில மொழியில் சுமாரான அறிவு உடையோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விள.இல.3119. மே/பா, உதயன்.**

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



காஸ்யப கோத்திரம்
அமரர்
**சிவஸ்வாமிக்குருக்கள் பரமேஸ்வரசர்மா** (அராலி)

பூவுலகில்:
11.08.1929

ஆத்மாவாக:
14.08.2001

திதி.ஆடி அபரதசமி (27.07.2008)

அன்புள்ள அப்பாவே!
ஏழு வருடங்கள் ஓடிவிட்டன நீங்கள் பிரிந்து
இருந்தாலும் எம்முடன் வாழ்வது போல் நிழலாய்
நிஜமாக இருக்காதா என ஓர் ஏக்கம்
நிழலாக நீங்கள் இருந்தாலும் ஆறுதலடைகிறோம்
நிஜமென உங்கள் படத்தைப் பார்த்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்யும்

"பரணிவாசம்"
கந்தரோடை.

**குடும்பத்தினர்.**

**இலங்கை ஜனநாயக குடியரசின் வைத்தியச் சபையின் அனுமதி பெற்றதும், 70க்கு மேற்பட்ட நாடுகளில் அங்கிகரிக்கப்பட்டதுமான கிழக்கு ஐரோப்பாவின்**



சர்வதேசக் கல்வி பெற்று
# வைத்தியர் ஆகுங்கள்.

- கடந்த 17 வருடங்களுள் பட்டம்பெற்ற வைத்தியர்கள் பிரதான வைத்தியசாலைகளில் சேவை புரிகிறார்கள்
- பட்டம்பெற்ற வைத்தியர்களுக்கு EPRM / ACT 16 பரீட்சை ஒரு வருடத்தினுள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.




விசா படிவம் பூரணப்படுத்துதல்.
தூதுவராலயங்களுக்கு செல்லுதல்.
வங்கிகளில் பணம் காட்டுதல்.
சொத்துக்களை காட்டுதல்.
தேவையில்லை.
**VISA 100%**
உத்தரவாதமளிக்கப்படுகிறது;

**கடந்த வாரத்தில் விமானமேறிய முதலாவது மாணவர் குழு**



உதய சங்கர் வவுனியா | பிரியா வின்சென்ட் வித்தியாலயம் மட்டக்களப்பு | மொகிதீன் சம்மாந்துறை | இனுஷியா வின்சன்ட் வித்தியாலயம் மட்டக்களப்பு | சடாட்சரம் மயூரன் சாவகச்சேரி யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தினால் கடந்த 10வருடங்களில் வெளியே அனுப்பட்ட மாணவர்களில் கடந்த இரண்டு வருடங்களில் அனுப்பியவர்களின் பெயர்பட்டியலையும் தொலைபேசி இலக்கங்களையும் எங்களிடம் பார்வையிடலாம்

- விண்ணப்பிக்கத் தேவையான ஆகக்குறைந்த தகமை க.பொ.த. (சா/த) சித்தி
- 2008 க.பொ.த (உ/த) தோற்றியவர்கள் அதிபரின் கடிதம் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.
- உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட விருப்பமான பல்கலைக்கழகங்களுக்கிடையே மாறலாம்.

கணனிப் பொறியியல்/ பொருளியல் / கணக்கியல் / முகாமைத்துவம் / கட்டிடக்கலை/ இலத்திரனியல் / மோட்டார் தொழில்நுட்பம் / விவசாயம் மற்றும் விசேட பாடநெறிகள்

**அனுமதிக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடர்பு கொள்ளவும் 077 3017883**

விண்ணப்பம் ஏற்கும் இறுதித் தினம் 2008 ஆகஸ்ட் 11ம் திகதியாகும் .

**PATHE ACADEMY**
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane (Entrance from Duplication Rd) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271

Overseas Student Placement Department

www.patheacademy.org

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை27

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-325)

* * *

சுழிபுரம், ஜூலை27

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய வீதியிலுள்ள பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-28)

## கருத்தரங்கு

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமைகாலை 9 மணிக்கு ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான தமிழ்ப் பாடக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான் வாழ்க!



எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்து
ஏட்டைப் படிக்க வைத்தவர்;
கண்ணைப் போன்ற கல்வி தன்னைக்
கருத்தில் பதிய வைத்தவர்
பெற்ற தாயைப் போல நம்மைப்
பேணிக் காத்த பெரியவர்;
உற்ற நண்பன் போல நம்மை
ஊக்குவித்த உத்தமர்
பள்ளி என்னும் கோயில் தன்னில்
வீற்றிருக்கும் தெய்வமாம்
பாரில் நாமும் மேன்மை அடையப்
பார்த்து மகிழும் உள்ளமாம்!
இருளை நீக்கி அறிவு விளக்கை
ஏற்றிவைத்த தெய்வமாம்!
''அறிவுக்(கு) அழகு அடக்கம்'' அதுவே
ஆசான் சொன்ன விளக்கமாம்!
விண்ணில் வீரச் செயல்கள் செய்தோம்!
வெற்றி வாகை சூடினோம்!
மண்ணில் நமது அறிவை வளர்த்த
மனிதத் தெய்வம் வாழ்கவே!
அகிலம் போற்றும் பதவி பெற்று
அடைந்தோம் வெற்றி ஆயிரம்
அறிவைப் பெருக்கி ஆற்றல் தந்த
ஆசான் என்றும் வாழ்கவே.

தே.சாருஜன், தரம் - 6, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# உண்மையே பாராட்டுப் பெறும்

பகீதரன், லட்சுமணன், நிஷான் ஆகிய மூவரும் ஒரே பாடசாலையில் கற்கும் மாணவர்கள். மூவரும் பிரியமாட்டார்கள். எங்கு சென்றாலும் மூவரும் சேர்ந்தே செல்வர். பகீதரன் எப்பொழுதும் உண்மை பேச வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடையவன். லட்சுமணன் பொய் சொல்லத் தயங்க மாட்டான். நிஷான் சந்தர்ப்பத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப பொய்யும் சொல்லுவான்; மெய்யும் சொல்லுவான். என்றாலும் நண்பர்களிடத்தே மிகுந்த மதிப்புடையவன். அவர்களின் ஆலோசனைப் படியே நடப்பவன்.

ஒரு நாள் மூவரும் புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது லட்சுமணனின் காலின் கீழே மழமழவென்று ஏதோ ஒன்று நெளிவது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவன் திடுக்குற்றுக் காலை எடுத்தான். அங்கே கிடந்தது ஒரு தங்கச் சங்கிலி.



லட்சுமணன் தன்னையாரும் கவனிக்கிறார்களா? என்று சுற்றும் முற்றும் பார்த்தான். ஒவ்வொருவரும் தமக்குள்ளே கதைத்துக்கொண்டும் வெளியிற் புதினம்பார்த்துக் கொண்டும் இருந்தனர். அவனை யாரும் கவனிக்கவில்லை. பகீதரன் ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தான். நிஷான் தூங்கி வழிந்துகொண்டிருந்தான். லட்சுமணன் பதற்றம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. குனிந்து சங்கிலியை எடுத்துத் தன் சட்டைப்பைக்குள் வைத்துக் கொண்டான். இறங்க வேண்டிய புகையிரத நிலையம் வந்தது. மூவரும் இறங்கினார்கள். லட்சுமணனின் மனதில் பெரும் போராட்டம். தான் சங்கிலியை எடுத்ததை நண்பர்களுக்கு சொல்வதா, விடுவதா என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

ஆனால் அவனுக்கு அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்றும் விளங்க வில்லை. வீட்டுக்கு கொண்டு செல்ல முடியாது. பெற்றோர் சண்டைக்கு வருவார்கள். இந்த விடயத்தில் அப்பா நெருப்பு. யாருக்கும் தெரியாமல் கடையில் விற்கலாம் என்றால் சிறுவனாகிய அவன் மீது கடைக்காரர்கள் சந்தேகப்படுவார்கள்.

இவ்வாறு சிந்தித்த லட்சுமணன் தன் நண்பர்களுக்கு சங்கிலி கிடைத்ததை எடுத்துச் சொன்னான். நிஷான் முகத்தில் மட்டற்ற மகிழ்ச்சி. ''எனக்குத் தெரிந்த நகைக்கடைக்காரர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கொடுத்தால் நகையின் பாதி விலையை எமக்குத் தருவார். நாம் அப்பணத்தைப் பங்கிடுவோம்'' என்று கூறினான். லட்சுமணனுக்கு இந்த ஆலோசனை திருப்தி அளித்தது. ஆனால் பகீரதன் ''நாம் உரியவரிடமோ, புகையிரத நிலையத்திலோ இச் சங்கிலியை ஒப்படைப்போம். இதற்கு நீங்கள் ஒத்துழைக்காதுவிட்டால் உங்கள் முகத்தில் நான் விழிக்கமாட்டேன்'' என்றான். பின் மூவரும் சேர்ந்து அச்சங்கிலியைப் புகையிரத நிலையத்தில் ஒப்படைத்தனர். சங்கிலியைப் பறிகொடுத்த பெண்மணியும் அப்போது அங்கே வந்தாள். இம் மூவரினதும் உண்மையையும், நேர்மையையும் அப் பெண்மணி பாராட்டினாள்.

த.சயந்தன், தரம் 10 B, யா/கனகரத்தினம் ம.ம.வி.

# அன்பு



பாசத்தைப் பிணைப்பது அன்பு - என்றும்
ஆறாய் பாய்வது அன்பு
இடர்களைத் துடைப்பது அன்பு - என்றும்
ஒற்றுமையை வளர்ப்பது அன்பு
அனைத்தையும் வெல்வது அன்பு - என்றும்
நிழலாய் வருவது அன்பு
ஆணவத்தை அழிப்பது அன்பு - என்றும்
நட்பை உருவாக்குவது அன்பு
பிரிக்க முடியாதது அன்பு - என்றும்
பலம் தருவது அன்பு
சமாதானத்தைக் கொடுப்பது அன்பு - என்றும்
தீயவரை அழிப்பது அன்பு

கணேசலிங்கம் விஸ்ணுகா, தரம் 7C, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

# முதன் முதலாக....

- ★ முதல் பத்திரிகை 1621 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் 'வாரச் செய்தி' என்னும் பெயரில் வெளியிடப்பட்டது.
- ★ தீயணைக்கும் படை முதன்முதலாக உருவாக்கப்பட்டது 1852 ஆம் ஆண்டு.
- ★ உலகில் முதலாவது தபால் துறை 1516 ஆம் ஆண்டு உருவானது.
- ★ கிரிக்கெட் 1550 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தோன்றியது.
- ★ பெண்களுக்கு முதன்முதலில் வாக்குரிமை அளித்த நாடு நியூசிலாந்து.
- ★ உலகின் முதல் வங்கியின் பெயர் 'பாங்கோ பிரிவால்டா'. 1587 இல் வெனிஸ் நகரில் தொடங்கியது.
- ★ முதல் கலங்கரை விளக்கம் எகிப்தின் அலெக்ஸாண்டிரியாவில் உருவாக்கப்பட்டது.
- ★ உலகின் முதல் அச்சடிக்கப்பட்ட புத்தகம் பைபிள். 1455 ஆம் ஆண்டு ஜேர்மனியில் அச்சடிக்கப்பட்டது.

# விடுகதை சொல்லப்போறோம்...



1. காட்டிலே பச்சை; கடையிலே கறுப்பு; வீட்டிலே சிவப்பு. அவை என்ன?
2. ஆடச்சொல்லி சட்டை போடுவாள்; ஆடும் முன்பே கழற்றி விடுவாள். அது என்ன?
3. கழனியில் விளைந்த கதிரினை கத்தரி போட்டு வெட்டிடுவார். அது என்ன?
4. கையும் காலும் இல்லாதவன் முகட்டைத் தாண்டி மேலே போவான். அவன் யார்?
5. ஆற்றைக் கலக்கும், அக்கரை போகும். தண்ணீரில் கலக்காது, தானும் நனையாது. அது என்ன?
6. வெள்ளைச் சீமாட்டிக்கு தலைக்கு மேலே விளக்கு. அது என்ன?
7. உடையவர் அளந்தால் ஒரு சாண் நீளம். அது என்ன?
8. நடமாடும் வீட்டுக்குச் சொந்தக்காரர். நடந்து போனால் ஆமைக்கும் குறைந்த வேகம். அவர் யார்?
9. அண்ணன் ஒரு மைல் போவதும் சரி, தம்பி 12 மைல் போவதும் சரி. அவர்கள் யார்?
10. பளிங்கை உடைத்தால் வெள்ளி; வெள்ளியை உடைத்தால் தங்கம். அது என்ன?

**விடைகள்**

1. மரம் - கரி - நெருப்பு
2. பம்பரம் 3. தலைமுடி
4. புகை 5. நூல் 6. மெழுகுவர்த்தி
7. செருப்பு 8. நத்தை
9. கடிகாரத்தில் பெரிய முள் - சின்ன முள்
10. முட்டை

# வாழ்வியற் பொன் மொழிகள்

- ★ மன்னிப்புத்தான் நம்மைத் தேவர்களுக்கு நிகராக்குகின்றது.
- ★ மன்னிப்பது நல்லது. அதைவிட நல்லது மறந்து விடுவது.
- ★ பெரிய கடலிலிருந்து உப்புநீரைப் பருகுவதைவிட, சிறு ஓடையிலிருந்து நல்ல நீரைப் பருகுதல் மேல்.
- ★ முயற்சி இல்லாத நம்பிக்கை, கப்பலில்லாத கடற்பயணம் போன்றது.
- ★ எப்பொழுது தொடங்கலாம் என்று நாம் ஆலோசிக்கும் பொழுதே காலம் கடந்து விடுகின்றது.
- ★ இதயம் உறுதியாயிருந்தால், சுண்டெலி கூட யானையைத் தூக்கிவிடும்.
- ★ கடன்காரர்களை விடவும், கடன்கொடுத்தவர்களுக்கே நினைவு அதிகம்.
- ★ ஏழைகள் உணவைத் தேடுகின்றனர். செல்வர்கள் பசியைத் தேடுகின்றனர்.
- ★ பட்டினியாயிருக்க வேண்டிய நேரத்தில் உணவுண்டால், உண்ணவேண்டிய நேரத்தில் பட்டினியாய் இருக்கவேண்டிவரும்.
- ★ போரில் நல்லதும், அமைதியில் கெட்டதும் ஒருபோதும் இருப்பதில்லை.

அ.தனுசன், தரம் - 6, யாழ்.மத்திய கல்லூரி.

# கணனியில் செய்யக் கூடாதவை



1. கணனி அறை அழுக்காக இருக்கக்கூடாது.
2. கணனியை பாதுகாப்பாக மூடிவைக்காது அறையைக் கூட்டுதல், தூசுதட்டல் ஆகாது.
3. கணனி இயங்கும்போது வயர்களையோ கேபிள்களையோ தொடக்கூடாது.
4. கணனிக்கு அருகில் நீர், தேநீர் முதலிய பதார்த்தங்களை வைக்கக்கூடாது.
5. கணனியைச் சூழ பெருந்தொகையானோர் நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.
6. கணனியறையில் புகைத்தல், ஊதுபத்தி ஏற்றுதல், சாம்பிராணி புகைத்தலை தவிர்க்க வேண்டும்.
7. தூசு பற்றும் அழுக்குடன் கூடிய பாதணிகளுடன் கணனி அறையினுள் செல்லக்கூடாது.
8. கணனியின் விசைப்பலகையில் (key board) பொத்தான்களைக் கடுமையாக அழுத்தக் கூடாது.
9. காந்தப் பொருள்களை கணனி மீது அல்லது அதற்கு அருகில் வைக்கக்கூடாது.
10. திரைக்கு மிக அருகில், அதாவது 60 செ.மீ. தூரத்துக்குள் கண்களை வைத்துப் பார்ப்பதை தவிர்க்க வேண்டும்.
11. நெகிழ்வட்டை (Floppy disk) கணனி மீது வைக்கக் கூடாது.
12. நெகிழ்வட்டை (Floppy disk) வளைக்கக் கூடாது.
13. நெகிழ்வட்டில் (Floppy disk) பாதுகாப்பு உறையினுள் ...

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.




# நீங்களும் எழுதலாம்

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமா கும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... திகதி
.............................. வகுப்பாசிரியர் கையொப்பம்

# மாம்பழம்

நல்ல நல்ல மாம்பழம்
சுவை மிகுந்த மாம்பழம்
அப்பா தந்த மாம்பழம்
இனிமையான மாம்பழம்
மஞ்சள்நிற மாம்பழம்
எல்லோரும் கூடுவோம்
மாம்பழத்தை உண்ணுவோம்!

ம. நிவேதா, தரம் - 03, யா/உடுவில் மகளிர் கல்லூரி.

# மாணவர் தூரிகை



சி.சிவமாறன்
தரம் 07,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு மனித நேய அமைப்புக்களின் கூட்டமைப்பு வழங்கும் உதவிகள்

இடம் பெயர்ந்த குடும்பங்கள், குடும்பத் தலைவர்கள் இல்லாத, தலைவர்களை இழந்த அங்கத்தவர்கள், விதவைகளை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், அங்கக் குறைபாடு மற்றும் பார்வைப் புலன் குறைந்த மாணவர்களுக்கு மனித நேய அமைப்புக்களின்கூட்டமைப்பு (CONSORTIUM OF HUMANITARIAN AGENCIES) நிறுவனம் பல்வேறுபட்ட உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிறுவனம் வழங்கும் உதவிகள் பயன்தரும் விதத்தில் கையாளப்படுவதுடன் நிலையான ஒரு வருமானத்தை தொடர்ச்சியாக உழைத்துக் கொள்ளும் விதத்தில் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுவே இந்த நிறுவனத்தின் உதவி திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆ.ரஞ்சித் ஷகிலேந்திரகுமார்.

உதயன் பத்திரிகை நிறுவனத்திற்காக அவரை அவரது காரியரலயத்தில் சந்தித்து கலந்துரையாடிய பொழுது அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

நெதர்லாந்து நாட்டின் நிதி உதவியுடன் இயங்கும் இந்த மனிதநேய நிறுவனங்களின் கூட்டமைப்பு (சி.எச்.ஏ) நான்கு நிறுவனங்கள் இணைந்த ஒரு கூட்டமைப்பாகும். நிலையான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதும் போர்க்காலச் சூழ்நிலை, இயற்கை அனர்த்தம், வன்செயல் என்பவற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் விஷேட தேவையுடையவர்களுக்கும் உதவுவதையுமே பிரதான இலக்காக இந்நிறுவனம் கொண் டுள்ளது.

மனிதநேய அமைப்பினால் ஆறு பிரதான உதவித்திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. இவற்றுள் நான்கு திட்டங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தொடர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப் பட்டுவருகின்றன. ஏனையவை வருங்காலத்தில் நடைமுறைக்குட்படுத்தப்படவிருக்கின்றன.

உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழ்பட்ட வருமானம் உடையவர்களது குடும்பங்கள் தற்கால (அண்மைக்கால) அசாதாரண சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், உடல்குறைபாடு உடையவர்கள், விதவைகள், வன்செயல்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்கள் ஆகியோர் எமது உதவித் திட்டத்திற்கு உரியவர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

**வாழ்வாதார திட்டங்கள்**

கோழிவளர்ப்பு, பசுமாடு வளர்த்தல், விவசாயம், தையல் தொழில், சிறு குடிசைக் கைத்தொழில், சிறுகடை அமைத்தல் என்பன வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்துள் அடங்குகின்றன. இந்தத் திட்டத்தில் பயனாளிக்கு அண்ணளவாக (ஒரு குடும்பம்) 25,000 தொடக்கம் 35,000 ரூபாவரைசந்தர்ப்பசூழ்நிலை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது.

கோழி வளர்ப்பிற்கு மாவட்ட ரீதியாக 39 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 20 பயனாளிகளுக்குரியவை நிறைவேற்றப்படவுள்ளன.

ஆடு, மாடு வளர்ப்பிற்கு 21 பயனாளிகள் தெரிவாகியுள்ளனர். பசு - 15, ஆடு - 6 பேர் மாவட்டரீதியாக 7 திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளதுடன் மற்றவைக்கு 14 திட்டங்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டுள்ளன.

**விவசாய உதவி**

விவசாய உதவித்திட்டத்தின் கீழ் விதை, ஸ்பிறேயர், வாளி, மண்வெட்டி, பிளாஸ்ரிக்வாளி என்பன வழங்கப்பட்டுள்ளன. இதனால் சிறுப்பிட்டியில் 30 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

சுயதொழிலை ஊக்குவிக்க தையல் இயந்திரங்கள் 20 கொடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. சில வழங்கப்பட்டுள்ளன. ஏனையவை விரைவில் கொடுக்கப்படவுள்ளன.




பெண்களை தலைவராக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே நோக்கமாகும்.

**சிறுகுடிசை தொழிலில்** :- மிக்சர், ரொபி, முறுக்கு, கடலை, பொரியல் வகை, இனிப்புப் பண்டங்கள் தயாரித் தல் மூலம் வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

**சிறுகடை**:- சூழலின் தேவைக்குரியதும் விற்பனைக்குரியதுமான பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு தலா 20,000 ரூபா வீதம் 16 பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டு, சிறுகடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் வாழ்வாதார பயனாளிகள் 104 பேர் பயனடைந்துள்ளனர். 50 வீட்டுத் தோட்ட செய்கையாளரும் பயனடைந்துள்ளனர்.

மீன் வியாபாரி ஒருவருக்கு 26,650 ரூபா பெறுமதியான லுமாலா சைக்கிள், கத்தி, பெட்டித் தராசு கொடுக்கப்பட்டதுடன் 8000 ரூபா பெறுமதியான மீனும் கொள்வனவு செய்யப்பட்டுத் தொழில் ஆரம்பிக்க உதவப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு உதவிகள்**

பாடசாலையை விட்டுவிலகிய 30 மாணவர்களுக்கு முறைசாராக் கல்விபிரிவூடாக (யாழ்.வலயம்) 4 மாத பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி முடிவில் கருவிப்பொதிகள் வழங்கப்படும்.

போர் அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது. இந் நிறுவனம் எதிர்காலத்திலும் உதவித் திட்டத்தைத் தொடரும்.

கடந்த வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் இராமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் சமூகக்கல்வி பாடநெறிகளில் இந்தப் பயிற்சிச் செயலமர்வுகள் இடம்பெற்றன. தலா 15 பாடசாலை மாணவர்கள் பயனடைந்தனர். மேலும் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த விஷேட தேவையுடைய 160 மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர் பயிற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

விஷேட தேவைக்குட்பட்ட பார்வை குறைந்த 50 மாணவர்களுக்கு அண்மையில் மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. முச்சக்கர கதிரைகள் 3 சிறுவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுச் சூழல் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சேதன விவசாயம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை மூலிகைகளில் இருந்து கிருமி நாசினிகள் தயாரித்தல், இயற்கை பசளை தயாரித்தல், அவற்றின் பாவனை, மூலிகை விவசாயம் என்பன வீட்டுத்தோட்டம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**வீட்டுத் திட்டம்**

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 57 குடிசைவீடுகளை வசதியான முறையில் திருத்தி அமைத்துக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சண்டிலிப்பாய் பிரதேச பிரிவில் உள்ள மூன்று கொட்டில் வீடுகளும் நிறுவனத்தின் நிதி அனுசரனையுடன் திருத்தம் செய்து குடியிருப்பவர்களுக்குக் கொடுக்கப்படவுள்ளன.

இடப்பெயர்வு காரணமாக இடம்மாறி நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கி இருக்கும் குடும்பங்களுக்கு - இதுவரை காலமும் எந்த ஒரு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் இருந்தும் எதுவித உதவியும் கிடைக்காதவர்களுக்கு - அவசர கால உதவித்திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளன.

இந்தவகையில் சண்டிலிப்பாய் சங்

**சந்திப்பு:- கை.பேரின்பநாயகம்**

கானை, கோப்பாய், உடுவில், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுகளில் இடம் பெயர்ந்து வந்து தங்கியிருக்கும் 500 குடும்பங்களுக்கு அவசர நிவாரண உதவிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

**ஆவணப்படுத்தல் உதவித்திட்டம்**

இடம்பெயர்ந்தோர் குடியிருப்புக்களிலும் முகாம்களிலும் பிறப்புப் பதிவுகள், இறப்புப் பதிவுகள், திருமணப் பதிவுகள் மேற்கொள்ளாதவர்கள் பலரது பதிவுகள் அறியப்பட்டுள்ளன. இவர்களுக்கு சொந்தமான காணி உறுதிகளும் தொலைந்து போயுள்ளன.


இந்தப் பதிவுகளையும் காலம் கடந்த பதிவுகளையும் சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

நாவற்குழி தவிர்ந்த ஏனைய குடியிருப்புகளில் சட்ட ஆலோசனையும் சட்ட உதவியும் வழங்கப்படுகின்றன. தயாரிப்புப் பெறுதல் முக்கியமானது.

யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர், பிரிவு உதவிப் பதிவாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், உதவிக் காணிப்பதிவாளர் மற்றும் அதிகாரிகளின் உதவியும் ஒத்துழைப்பும் பதிவுகள், பதிவேடுகளை பெறுவதற்கு உதவியாக இருந்தன.

மன்னார், மட்டக்களப்பு போன்ற வெளி மாவட்டங்களில் பிறந்தவர்களின் பிறப் புச் சான்றிதழ்களைப் பெற இவர்களது மனிதாபிமானப் பணியே காரணம். ******

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா சென்றடைந்த அன்னபூரணி பாய்மரக் கப்பல்



**01.08.1938** அன்று அன்னபூரணி அமெரிக்காவைச் சென்றடைந்தாள். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் வல்வெட்டித் துறையிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவுக்குச் சென்ற கப்பலின் பெயர்தான் அன்னபூரணி.

1936 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கக் கோடீஸ்வரரான அல்பேட் றொபின்சன், வல்வெட்டித்துறை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த அன்ன பூரணி என்ற கப்பலைப் பார்த்ததும் அதை விலை கொடுத்து வாங்கத் தீர்மானித்தார்.

1930 ஆம் ஆண்டு சுந்தரமேஸ்திரி என்பவரால் வேம்பு, இலுப்பை மரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்தக் கப்பலின் நீளம் 89 அடி.

அறுபதாயிரம் ரூபா விலை கொடுத்து அன்னபூரணியை வாங்கிய றொபின்சன், கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு சென்று ஒப்படைக்கும் பொறுப்பை தம்பிப்பிள்ளை என்ற மாலுமியிடம் ஒப்படைத்தார். 27.02.1937 அன்று அன்னபூரணி வல்வெட்டித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பாய் விரித்தாள். அன்னபூரணி ஒரு பாய்க்கப்பல் என்பது குறிப்பிடத்தக்கது.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

04.03.1937 அன்று இதர மாலுமிகளான ஐ.இரத்தினசாமி, தா.சபாரத்தினம், சேதுநவரத்தினராசா, சி.சிதம்பரப்பிள்ளை, பூ.சுப்பிரமணியம், ஐ.தில்லையம்பலம், சாண்டோ சங்கரதாஸ் ஆகியோருடன் கப்பல் உரிமையாளரான றொபின்சன், இங்கிலாந்துப் பிரஜையான குக் என்பவரையும் ஏற்றிக் கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்டாள் அன்னபூரணி.

**'போஸ்டன் குளோப்' பத்திரிகையில் படமும் செய்தியும் வெளியாகின**

இந்து சமுத்திரம், அரபிக் கடல், செங்கடல், சுயஸ்கால்வாய், மத்தியதரைக்கடல், அத்திலாந்திக் சமுத்திரம் என்ப வற்றினூடாக பத்தாயிரம் மைல் பயணம் செய்த அன்னபூரணி ஒன்றரை வருட நீண்ட பயணத் தின் பின் 01.08.1938 அன்று அமெரிக்காவின் மசாசுசெற் மாநிலத்திலுள்ள குளோசெஸ்டர் துறைமுகத்தைச் சென்றடைந்தாள்.

...ின் ஏற்பாட்டில் குளோசெஸ்டர் துறைமுகத்தில் அன்னபூரணியைப் ... அமெரிக்கர்கள் திரண்டனர். போஸ்டன் குளோப் (Boston Globe) என்ற பத்திரிகை அன்னபூரணியின் படத்துடன் செய்தி வெளியிட்டது. - தாண்டவன் -

# அறிவுள்ளவன் விண்ணரசை உரிமையாக்கிக் கொள்வான்

'கேடு இல்லாத விழுமிய செல்வம் கல்வி' என்றார் வள்ளுவர். 'அறிவே ஆற்றல்' என்றார் பேக்கன். 'விடுதலை, சகோதரத்துவம், சமத்துவம்' இது பிரான்ஸ் மக்களின் விருதுவாக்கு. இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சியம் உண்டு.

எனவேதான் புனித மத்தேயு தனது நற்செய்தியின் 13 ஆம் அதிகாரம் முழுவதையும் உண்மையான இறையரசு குறித்து 8 உவமைகள் மூலம் விளக்குகின்றார்.

மத்தேயு 13:44-52 இல் 3 உவமைகள் வழியாக உண்மையான இறையரசைப் பற்றியும் அதன் உயர் தன்மைகள் பற்றியும் அதற்கு ஏதுவாக வாழ்வோர் அதை உரிமையாக்கிக் கொள்வர் என்ற உண்மையையும் இயேசு எடுத்துக் காட்டுகிறார்.




உண்மைக்காகவும், நீதிக்காகவும், அமைதிக்காகவும், சகோதரத்துவத்துக்காகவும் வாழ்வோர் விண்ணரசு என்ற உண்மையைக் கண்டு பிடிக்கிறார்கள். அதற்காக எல்லாவற்றையும் இழக்க முன்வருகிறார்கள்.

"எதற்காகவும் உண்மையை இழக்காது உண்மைக்காக எதையும் இழக்கத் தயாராயிரு என்ற அறிஞர்களின் கூற்றுக்கு ஏற்ப நீதி, அன்பு, இரக்கம், சகோரதத்துவம், சமத்துவம் அனைத்தையும் இறையரசின் புதையல்கள் என்று நாமும் ஏற்று விண்ணரசிற்கு உரிமையளிக்கும் அன்பு செயல்கள், நீதியை நிலைநாட்டும் செயல்கள் முதலியவற்றில் ஈடுபடுவோம். ஏனெனில் விண்ணரசு என்பது ஒரு வருங்கால எதி... அன்றாட வாழ்விலே கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்கு ... அமைத்தல் ஆகும்.

- நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த ஐம்பதாண்டு காலமாகத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கும் ஈழத்துத் தமிழ்ப்பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் ''யாழ்.நங்கை'' என அறியப்பட்ட **அன்னலட்சுமி இராஜதுரை.** இவர் சிறந்த, பல்துறை சார்ந்த ஆக்க இலக்கிய கர்த்தா மட்டுமன்றி மூத்த பத்திரிகையாளராகவும் விளங்குகின்றார்.

இவரது முதலாவது படைப்பு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ''கலைச் செல்வி'' யில் பிரசுரமாகியது.

இலக்கிய உலகில் பெயர் பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான அன்னலட்சுமி இராஜதுரை, யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சிறுகதை, கவிதை, நாவல், குறுநாவல், கட்டுரை, வானொலி நாடகம், நூல் விமரிசனம் எனப் பல்வேறு துறைகளிலும் எழுதிவந்தவர்; இப்போதும் எழுதுபவர்.

"வீரகேசரி" பத்திரிகையில், பத்திரிகையாளராக நீண்டகாலம் பணியாற்றி வரும் இவர், ஜோதி, மித்திரன் வாரமலர், மங்கையர்கேசரி, கலைக்கேசரி ஆகியவற்றின் பொறுப்பாசிரியராகவும் கடமை புரிந்தவர். சுமார் ஐந்து தசாப்தங்களாக ஒரே தொடர்ச்சியாக, திறமைமிக்க பத்திரிகை யாளராக ஒரே நிறுவனத்தில் அவர் இப்போது பணியாற்றி வருவதும் அவரது சாதனைகளில் ஒன்று.

விழிச்சுடர் (இருகுறுநாவல்கள்) உள்ளத்தின் கதவுகள் (நாவல்) நெருப்பு வெளிச்சம் (சிறுகதைத் தொகுப்பு) இரு பக்கங்கள் (கவிதைத் தொகுப்பு) ஆகியவை இவர் வெளியிட்ட நூல்களாகும். உலகச் சிறுகதைகள் பலவற்றை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

1992 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு இவருக்கு 'தமிழ்மணி' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. நீண்டகாலம் சிறந்த பத்திரிகைச் சேவை புரிந்தவர் என 2003 ஆம் ஆண்டில் இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் இவருக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்ததையும் குறிப்பிடலாம்.

சமுதாய ஒழுங்கீனங்கள், பண்பாட்டு தடுமாறல்கள் என்பவற்றை சாடும் தன்மை அவரது சிறு கதைகளில் ஊடறுத்து நிற்பதுண்டு.

# மண்ணில் வீழ்ந்த சோற்றுப் பருக்கைகள் (சிறுகதை)



**அவன் அவனே தான்.** ஆனால் அவனை யார் அடையாளம் காணப்போகிறார்கள்? அடையாளம் காண அல்லது கவனிக்க அவன் ஒரு சாதாரண மனிதனின் தரா தரத்தில் கூட இல்லையே!

அவன் இப்போது ஒரு பிச்சைக்காரன். பரதேசி. போதும் போதாதற்கு ஒரு கண்ணும் இல்லை. ஒரு கையில் முழங்கைக்கு கீழே இல்லை.

கறுப்பு மயிரை எண்ணிவிடலாம் என்பது போல் நரைத்துவிட்ட தலை. முகத்தில் காலதேவன் இரக்கமின்றி வரைந்துவிட்ட கோடுகள். மெலிந்த உடலில் சுருங்கித் தொங்கும் தோல். திட்டுத் திட்டாய்த் தெரியும் எலும்புகள்.

அழுக்கில் மொரமொரப்பாய்க் காட்சி தரும் கந்தல் உடை. போதும் போதாதற்கு நெஞ்சைக் குடைந்து வரும் இருமல். அவலட்சணமான உருவந் தான். அவலட்சணங்களை யாரும் வேலை மினக் கெட்டுப் பார்ப் பதில்லை. தமது கண்களில் படுவதனைத்தானும் யாரும் விரும்பு வதில்லையே!

அவன் ஒரு காலத்தில் நெஞ்சை நிமிர்த்தி, கைகளை வீசி மிடுக்கோடு நடந்த வீதிகள் தாம் அவை. ஆனால் இன்று இந்த வீதியில் நடக்கத் திராணி இல்லை. 'சர்சர்' என்று பறந்து கொண் டிருக்கும் கார் களும், பஸ்களும், மோட்டார் சைக்கிள்களும் ஆக்கிரமித்துள்ள வீதிகளில் இறங்கவே அவனுக்கு நடுக்கம்!

எவனாவது தன் வாகனத்தினால் பந்தாடி உடனேயே எமலோகத்திற்கு அனுப்பிவிடுவான் என்ற அச்சந்தான். இந்த நிலையிலும் உயிருக்குப் பயப்படுகின்றேனே! என்று நினைக்க அவனுக்கு ஒருநேர நகைப்பும் உண்டாகிறது. நடைபாதை ஓரமாக அவன் ஒதுங்கி ஒதுங்கி, ஒருகையில் தடியோடும் மற்றக்கையின் இடுக்கில் ஒரு தகரப்பேணியோடும் நடக்கின்றான். பரதேசி என்ன பசி? ஆனால் எந்த நேரமும் பசிப் பேயின் கொடுமை! சிறு குடல் பெருங்குடல் எல்லாம் ஒன்று சேர்ந்து பிணைந்து பற்றி எரிவதை போல..... அகோரப் பசி! அந்த ஹோட்டல் வெளிமூலையில் உள்ள குப்பைத் தொட்டியை நோக்கி அவன் நடக்க முயற்சிக்கிறான். ''ஏய் கிழட் டுப் பிச்சைக்கார நாயே! குருடா! பார்த்துப் போகத் தெரியாமல் ஆளிலை மோதிறியே ராஸ்கல்! என் உடுப்பும் உன்னால் ஊத்தை யாயிட்டுது!......

ஒரு நாகரீக இளைஞன் அவனைத் தாறுமாறாய் ஏசி கனல்கக்கும் ஒரு பார்வையையும் வீசிவிட்டுப் போகிறான். அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்து குழைகின்றான். முன் பின் தெரியாதவர்களிடம் எல்லாம் அவன் இப்போதெல்லாம் ஏச்சு வாங்காத நாட்கள் குறைவு. தன்மானம், கோபம் என்பதெல்லாம் இப்போது அவனுக்கு ஏற்படுவதில்லை.ஏற்பட்டாலும் அதனைப் பொருட்படுத்தியவர் யாருமில்லை. ஆனால் ஒரு காலத்தில்....?

அவன் நீண்ட பெருமூச்சினை விட்டுக் கொண்டு விரைகின்றான். அவனது கவனமெல்லாம், கருத்தெல்லாம் அந்தக் குப்பைத்தொட்டியில் தான் இருக்கிறது.

குப்பைத் தொட்டியை எட்டிப் பார்க்கிறான். இலுப்பைப் பூவைக் கொட்டி வைத்தாற்போல், சோறு பளிச்சிடுகிறது. இந்தப் பஞ்ச காலத்திலும், நாளுக்கு நாள் உணவின் விலை ஏறிவரும் இந்தக் காலத்திலும் ஒருவன் இவ்வளவு சோற்றினை மிச்சமாக எறிந்திருக்கிறானே! போட்டிக்கு அப்போது அங்கே மனிதனும் இல்லை! நாய்களும் இல்லை! அதில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! இல்லா விட்டால் அடிக்கடி போட் டிதானே!

கடவுளே! மூன்று நாளாய் வயிறு வாய்க்கு ஒன்றுமில்லாமல் தவிக்கிறேன். இன்றைக்குக் கருணை காட்டி விட்டாய். அவன் கடவுளை நெஞ்சார வாழ்த்தி அந்த எச்சில் இலைச் சோற்றினை ஒரு கையால் அள்ளி எடுக்கும் வேளை....... பிடரியில் ஓர் அடி விழுகிறது! அவன் சுதாகரிப்பதற்கு முன்பே ஒருவன் அந்த இலைச் சோற்றைப் பறித் துக் கொண்டு ஓடுகிறான்.

வழியெல்லாம் சோற்றுப் பருக்கைகள்!

ஆண்டவனே! இரத்தத் திமிரில், ஆணவத்தில், அகங்காரத்தில் நான் முன்பு செய்த அக்கிரமங்களாலேயே என்னைச் சித்திரவதை செய்கிறாயா?

நெஞ்சை முட்டுகிறது துக்கம். கண்களை முட்டுகிறது கண்ணீர். சளி தொண்டைக் குழிக்குள் வந்து கற கறக்கிறது. முத்துக்குவியல் போல் தோன்றும் அந்த வெள்ளைச் சோறு.

அவன் சோர்ந்து போய், அந்த நடைபாதை ஓரத்தில் ஒரு கடையின் சுவரோடு சாய்ந்து கீழே உட்கார்ந்து கொள்ளுகிறான். மண்ணிலை விழுந்த சோற்றுப் பருக்கைகள்!

தொண்டைக் குழியை விட்டு இறங்காத சோற்று உருண்டை ஏற்படுத்தும் அவதி போல, அவன் திணறுகின்றான். அவன் கடந்த காலத்தில் புரிந்த அக்கிரமங்கள் நினைவில் விரிந்து வேதனை செய்கிறது.

* * *

அவன் பார்வைக்கு ஒரு குத்துச் சண்டை வீரன்போல் தோன்றுவான்; கரிய உருவம். உருண்டு திரண்டு அங்கங்கள். அகன்ற முகம். மீசை, உயரம், மிடுக்கான நடை. அவனைப் பார்ப்பவர்கள் ஒரு கணம் தயக்கம் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்று! அதையிட்டு அவனுக்கு எப்போதுமே ஒரு பெருமை. மமதை என்று கூடச் சொல்லலாம். மற்றவர்கள் தனக்குப் பயப்பட வேண்டும். அடிபணிய வேண்டும் என்ற ஆசை எந்த மனிதனுக்குத் தான் இல்லை? அத்தோடு உருவப் பொருத்தமும் சேர்ந்து கொண்டால் சொல்லவே வேண்டாம்.

மனிதனுக்கு அந்த ஆசை வெளிப்படையாகவே புலப்பட்டு விடுகின்றது. தன்னைக் கண்டால் மற்றவர்கள் குழைந்து மரியாதை செய்ய வேண்டும் என அவாக் கொண்டு அவன் வெளியில் பெரிய மனித தோரணையில் நடந்து கொள்வான். பேசுவான் எல்லாம் வாயோடுதான்! உள்ளத்தில் அவன் ஒரு கோழை என்பது யாருக்குந் தெரியாது!

இது நாள் வரைக்கும் அவன் யாரோடும் சண்டைக்குப் போனதில்லை. கைநீட்டியதுமில்லை. அதற்கு மாறாக அவனுக்கு வாய நீளுவதும், கைநீளுவதும் தன் மனைவி மக்களோடு தான்!

பெண்கள் என்றாலே மட்டமான மதிப்பு அவனுக்கு. ஆண்களின் ஆதிக்கத்திலும், வழிநடத்தலிலும், கட்டுப்பாட்டிலும் வாழ வேண்டிய பிறவிகள் பெண்கள். அவர்களுக்கு என்ன தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் என்ற அசைக்க முடியாத எண்ணம் அவனுக்கு!.

அவனுடைய எண் ணத்துக்கு ஏற்றாற் போல் பிறந்ததெல்லாம் பெண் பிள் ளைகள். ஒன்றல்ல இரண்டல்ல, ஐந்துபேர்!

கொழும்பு நகைக்கடை ஒன்றில் உதவியாளனாக வேலைபார்த்தான் அவன். திடகாத்திரமான பேர்வழி. கப்பங்காரன், தண்டல்காரன் என்று யாராவது வந்து கலாட்டா செய்தால் முன்னுக்கு நின்று பேசிச் சமாளித்து அனுப்புவான் என்ற நம்பிக்கையில், முதலாளி அவனுக்கு மற்ற உதவியாளர்களிலும் பார்க்க கொஞ்சம் கூடுதலாகவே சம்பளம் கொடுத்து வைத்திருந்தார். தேவையானால் கேட்டாலும் பலவும் கொடுப்பார்.

முதலாளி கடையில் இல்லாத வேளைகளில் அவன் தான் முதலாளி. பிறகு கேட்கவா வேண்டும் மிடுக்கிற்கு? மதுப் பழக் கம் அவனுக்கு ஏற்கனவே உண்டு. காசு புழங்கும் போது சொல்லவும் வேண்டுமா?

கூடவே சில குடிகார நண்பர்களும் சேர்ந்து கொள்வதினால் வருமானத்தில் கணிசமான பகுதியை குடியில் கரைப்பது அவனுக்கு ஒன்றும் பாரதூரமாகத் தோன்றாது. அவன் பசுப்போல சாதுவாகத் தோன்றுவான். மதுவரக்கன் கும்மாளமிடுகின்ற போது, அவனுடைய மிருகக் குணங்கள் கூத்தாட ஆரம்பித்துவிடும். சிறிய விஷயத்திற்கும் கோபம் பொத்துக் கொண்டு வரும். அதனை அவனால் அடக்கிக் கொள்ள முடியாது.

அதற்குப் பதிலளிக்க வேண்டிய பொறுப்பு அவனது மனைவி கமலாட்சிக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்பட்டுவிடும். அவனுடைய 18 வருட குடும்ப வாழ்வில், அவன் கமலாட்சியுடன் மோதிக்கொள்ளாத நாட்களை எண்ணிவிடலாம். பார்க்க பதின்நான்கு பதினைந்து வயது இளையவள். சுமாரான அழகியும் கூட. யாருடனும் சகஜமாகப் பேசிப் பழகும் தன்மையும் கொண்டவள். இதனாலேயும் அவனுக்கு அவள் மீது சந்தேகம் உண்டு. அவன் எதனையும் நிதானமாகச் சிந்திப்பதோ அல்லது வெளிப்படையாக பேசுவதோ குறைவு.

ஏழு பேர் கொண்ட குடும்பத்தினைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு லேசானதல்ல. பிள்ளைகளின் உடுபுடவைகள், உணவு, படிப்பு, போக்குவரத்துச் செலவு.... இத்தனையையும் அவன் தனியொருவனாகவே தனது உழைப்பில் கவனிக்க வேண்டுமே! பலகாரம் செய்து விற்று சிறிது பணம் சம்பாதிக்கிறேன் என்று முனைந்தாள் கமலாட்சி. 'சும்மாபோடி' என்னுடைய மரி யாதை என்ன ஆகிறது? என்று சண்டை யிட்டு அதனையும் தடுத்து விட்டான். தவறணை செல்வதை கவனித்த பின்னர் தானே வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

இரண்டு ரூபாவை அல்லது மூன்று ரூபாவைத்தான் அவன் வீட்டுச் செலவுக்கு தினமும் கொடுப்பான். சில வேளைகளில் அதுவும் இல்லை.

'இது எதற்குப் போதும்? பாணும், அரிசியும் வாங்கத்தானே சரி. மிச்சச் செலவுகளுக்கு என்ன செய்கிறது?' என்று கமலாட்சி கேட்டால் போதும், பற்றிக் கொண்டு வரும் அவனுக்கு. அவன் செய்வதனைத் தட்டிக் கேட்க அவள் யார்? என்பது அவனது எண்ணமாகும்.

'எதையாவது செய்யடி' என்று கத்திவிட்டுப் போவான்.

இரவுச் சாப்பாட்டுக்கு வந்தால் சாப் பாடு தரமானதாயும், சுவையுள்ளதாயும் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பான். முக்கியமாக மீன்குழம்பு, ஒரு பொரியல், ஒரு துவையல் ரசம் என்று இல்லாது போனால் சுருக்கென்று கோபம் வரும்.

(10 பக்கம் பார்க்க...)

## மயிலர்

வட்டாம் வதப்பில்
செவ்வாயும் வியாழனும்
கடைசிப் பாடம்
எங்களுக்கு உடற்பயிற்சி
மயிலர் எங்களை
மைதானத்திலை
பாட்டு வெயிலிலை
நிறுத்துவார்
விசில் ஊதியே
எங்களை
குனிய
நிமிர
வளைய
துள்ள
பாய
ஓடப்பண்ணுவார்!

மனிஷனை
மனசுக்குள்
திட்டித் திட்டி
உடற்பயிற்சி செய்தோம்
ஐம்பது வருஷத்துக்கு முந்தி

மயிலர் தீர்க்கதரிசி
செத்து தெய்வமாய்ப் போனார்
இப்ப
ஒவ்வொரு நாளும்
அவரை நினைக்கிறன்
விசில் சத்தம்
காதில் விழும் போதெல்லாம்
நிக்கிறன்
நடக்கிறன்
ஓடுறன்
காக்கிறன்
குனியிறன்
சகிக்கிறன்!

அறுபது தாண்டியும்
எப்பிடி உங்களாலை
குனிஞ்சு
வளைஞ்சு
நெளிஞ்சு
நுழைஞ்சு
போக வர முடியுது?

என்னைவிட
பத்து வயது குறைந்த
சூரி கேட்கிறான்
பாவம்
அவனுக்கு
மயிலரைப் போல
ஒரு
மாஸ்டர் வாய்க்கேல்லை.

-சோ.பத்மநாதன்-

(நன்றி: மாநதர் சஞ்சிகை)

# ஆடவனை அவன் மார்பின் பூணூல் அடையாளம் காட்டியது சங்கடத்தான் படலையடியில் இருந்தவருக்கு விருந்தும் கிடைத்தது

**பெண்**ணொருத்தி வீட்டிற் தனித்து இருக்கின்றாள். அந்நிய ஆடவனொருவன் படலைத் திண்ணையில் (சங்கடத்தான் படலைக் கொட்டிலில்) இளைப்பாறிக் கொண்டிருக்கின்றவன், வேற்றூரான் என்பதும் நன்றாகத் தெரிகின்றது. எனினும் என்செய்வது, யாருக்கேனும் கொடுத்துண்ணப் பழக்கப் பட்டவளான அவள், அப்பெண் அந்நிய வேற்றூரானை உள்ளே அழைத்து உவப்பாகப்பேசி உணர்வு பூர்வமாக ஆதரித்து, உணவு கொடுக்க வேண்டிய மனோ நிலைக்கு உள்ளாகின்றாள். உணவுங் கொடுக்கின்றாள் இது உகந்ததா?

பண்பாட்டுக்கும் பெருமைக்கும் உரிய விருந்தானது தெரிந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் மட்டுங் கொடுக்கப்படுவதல்ல. இன்னார் இனியார் எனப் பார்க்காது தெரியாதவர்க்கும் அளிப்பதாகும். இவ் வழக்கம் பண்டை நாளில் வட்டில்லாக் கடனாகவும் கருதக் கூடியதாக இருந்தது. ஏன்?. விருந்து கொடுத்தாரும் வெளியூர் செல்ல வேண்டியதாக வரும்போது, இவர்களுக்கும் யாரோ ஒருவர் இம்மாதிரி விருந்து செய்வர்.

படலைக் கொட்டிலில் இருப்பவனின் சுபாவம் நடத்தை இயல்புகள் எதுவும் தெரியாத இவள், வீட்டிலே கணவனும் இல்லாத வேளையில் ஆடவனை உள்ளே அழைத்து உணவு கொடுத்தல் சங்கடமான தொன்று-வாலிபத் தொல்லையால் துன்பங்கள் நேர்ந்தாலும் நேரலாம். எனினும் உபசாரம் செய்யாது விடவில்லை. உபசரித்தாள். சங்கடங்கள் வராதிருக்கத் துணை

## கலாசாரக் கலப்புகள் பண்டைய பண்பாடுகளை மறைத்துவிட்ட கோலம்!

புரிந்தது பூணூல் அணியும் வழக்கமே!

அந்நாளில் 'ஒட்டல்' கிடையாது என்பதால் சங்கடத்தான் படலையடிக்கு வந்து எட்டிப் பார்த்து விருந்தளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர் நமது மக்கள்.

விருந்து புறந்தாரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான் - பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள்

(அறநெறிச்சாரம்)

வாழ்வது விருந்துக்காகவே. வேளாண்மையும் விருந்துக்காகவே. கற்பதெல்லாம் விருந்தாற்றுவதற்கே. இவையெல்லாம் இல்லையேல் வாழ்வு இருளன்றோ! இவ்வாறாக, விருந்து பேணும் உயர்பண்பை இலக்கியங்கள் நமக்கு உணர்த்தின.

இளையான்குடிமாற நாயனார் கதையில் இருந்தும் இதனை அறியலாம். யாருக்கேனும் விருந்து கொடுத்த பின்னரே உண்ணும் பழக்கமுடையவர் அவர். இல்லாளோடிணைந்து விருந்தாற்றுவதே சிறப்பெனக் கருதியவர். தலைவன் வீட்டில் இல்லையென்றாலும் தலைவி விருந்து கொடுக்கத் தயங்குவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் விருந்து கொடுக்கும் முறை வேறு. தயக்கத்தைப் போக்கப் பூணூல் அணியும் பழக்கம் உதவியது.

**பூணூல் மார்பில் அணிவது ஓர் அழகே**

மார்பின் குறுக்காக இடத்தோளிலிருந்து வலப்பக்கமாகப் பூணூல் அணிந்திருப்பர்.

**காப்பியதாசன்**

பூணூல் ஆண்களுக்குரியது. அற்றை நாளில் எல்லா ஆடவரும் இதனை அணிவர். இற்றை நாளில் கன்னார், பொன்னணி செய்வோர், ஆசாரியார் (சிற்பிகள்), பார்ப்பார் (அந்தணர்), கம்மாளர் எனவரும் பஞ்சகம்மியர் பூணூல் அணிதலைக் காணலாம். இன்னும் சொல்லப்போனால் ஐயர் என்று பார்ப்பனருக்கு பூணூல் உரியதொன்றாகிவிட்டது. பூணூல் அணிந்திருப்பவனைக் கண்டால் அவன் பார்ப்பனன் என்றே எண்ணத் தோன்றும். (00 பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் வீழ்ந்த...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு நாள் இரவு, உணவு அவன் எதிர் பார்த்தவாறு இருக்கவில்லை. சோறும் வட்டுக் கத்தரிக்காய் குழம்பும் கீரையும் ஆக்கியிருந் தாள் கமலாட்சி. பிள்ளை களுக்கும் பசி. 'அப்பா சாப்பிட்டு முடியட் டும் பொறுங்கோ' என்று கமலாட்சி அவர்களிடம் சொல்லியிருந்தாள்.

தந்தை உணவு அருந்தும் சடங்கு எப்போது முடியுமோ என்று பிள்ளைகள் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார்கள்.

வழமைபோல் அவன் அன்றும் நன்றாய் குடித்திருந்தான். போதை தலைக்குமேலேறி அவன் பிதற்றிக் கொண்டிருந்தான். இரவு ஒன்பதரை மணியாகிவிட்டது. அவன் சாப்பிட எழும்புவதாகக் காணோம்.

கடைசி இரண்டு பிள்ளைகளும் பசியோடு படுத்து விட்டார்கள். மற்ற மூவரும் காத்திருந்தார் கள். அவர்களும் படிக்கும் பிள்ளைகள்தான்.

'சாப்பிட வாங்கோ!. கம்லாட்சி பல தடவை பணிவாகவும், பயபக்தியோடும் அழைத்துப் பார்த்துவிட்டாள். அவன் காதில் அது விழுந் ததாக இல்லை.

'அப்பா சாப்பிட வாங்கோப்பா, எங்களுக் கும் பசிக்குது' மூத்தவள் வினயமாகக் கூறினாள்.

அவன் மெதுவாக எழுந்து வந்து சாப்பிட அமர்ந்தான். கமலாட்சி உணவைக் கோப்பை யில் வைத்தாள். சோறும் அந்தக் கறிகள் இரண் டும் அவனைப் பரிதாபமாகப் பார்த்தன. கையில் போதுமான பணத்தைக் கொடுத்தால்தானே வாய்க் குச் சுவையான உணவு தயாரிக்க முடியும்.

என்ன இது?

அவள் பேசவில்லை.

'வேறை கறியில்லையா?'

'இல்லை' அவள் முனகினாள்.

'இதை மனிதன் சாப்பிடுவானாடி? கொண்டு போய் நாய்க்குப் போடடி' சோற்றுக் கோப்பையை 'விசுக்' கென்று தட்டினான். கோப்பை சுழன்றுகொண்டு பறந்தது. குசினித் தளமெல்லாம் சோற்றுப் பருக்கைகள்.

'அப்பா'

இரண்டாவது மகள் மாலா பாய்ந்து முன்னே வந்தாள். பின்னர் செய்வதறியாது திகைத்துப் பின்வாங்கினாள்.

'திமிர் பிடித்த நாய்கள்! துலையுங்கடி எல்லாரும்! பாருங்க உங்களுடைய கொழுப்பு அடங்கச் செய்யிறன் வேலை! என்றவன், அவர்கள் யாரும் எதிர்பார்க்காத வகையில், அந்த சீவன்களின் பசிக்கு ஆதரவாக இருந்த சோற்றுப் பானையையும் தூக்கித் தலைக்கு மேலே உயர்த்தி, 'படீர்' என்று நிலத்தில் போட்டு உடைத்தான்.

பானை ஓடுகள் சில்லுச் சில்லாக நாலா புறத்திலும் பறந்தன. சோறு சிதறிக் கிடந்தது.

'பாவீ! பிள்ளைகள் பசியிலை துடிக்குது. இப்படி ஒரு தகப்பன் செய்வானா? கமலாட்சி ஆத் திரத்தோடும், ஆவேசத்தோடும் கத்தினாள்.

'என்னடி? என்னை எதிர்த்துப் பேசுறாயா? ராஸ்கல். உங்களைப் பத்து நாளைக்கு பட் டினி போட வேணும்.........! என்றவன், பாய்ந்து அவளது தலைமயிரைப் பிடித்து அடிக்க... பிள் ளைகள் குறுக்கே வர.... அவர்களுக்கும் அடிக்க....

* * *

கடவுளே இப்படி அக்கிரமங்களை குடிவெறி யில் ஒரு தடவையா இரண்டு தடவைகளா செய்து அச்சீவன்களை வதைத்தேன்?

எனக்கு எப்படி இன்று வயிற்றுப் பசிக்கு உணவு கிடைக்கும்? கொடுத்து வைத்தவன் தானே வாங்க முடியும்? நான் என்னை நம்பியிருந்த பொஞ்சாதி பிள்ளைகளுக்கே கொடுக்க வேண்டியதை உரிய முறையில் கொடுக்க வில்லையே! ஒரு குடும்பத் தலைவனாக இருக்க எனக்கு என்ன தகுதி? நெஞ்சு வேதனை செய்கிறது. கண்களில் இருந்து நீர் வழிந்து ஓடுகிறது. ஜனசத்தடி மிக்க அந்த வீதியை அவன் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

யாரோ ஒரு புண்ணியவான். ஒரு முழு ரூபாய் நாணயத்தை மடியில் எறிந்து விட்டுப் போனான். அவனுக்கு என்ன மனசு! பாவிகள் வாழும் உலகத்தில் புண்ணியவான்களும் இருக்கவே செய்கின்றனர். இல்லாது விடின் இவ்வுலகம் எப்படி நிலைத்திருக்கிறது.?

அந்த மனிதன் போட்டுச் சென்ற ஒரு ரூபாவை விட இருபது சதச்சில்லறைகள் அவனு டைய கிழிந்த பைக்குள் இருக்கிறது. அறை யிறாத்தல் பாண் வாங்கவே ஒரு ரூபா பதி னைந்துசதம் வேண்டும். பிச்சை கேட்டால் ஐந்துசதமோ பத்துச்சதமோதான் தருவார்கள். இல் லாது போனால் தர்ரமலே போவார்கள். பிச்சை தந்த பெருமகனை நினைத்துக் கொண்ட அவன் பாண் வாங்கக் கடைக்குப் போனான்.

* * *

அவனுடைய முதலாளி சொந்த ஊரான தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். அவர் தனது சொந்த நாட்டுக்குப் போய்ச்சேர புதிய ஒருவர் கடையை வாங்கினார். புதியவர்கள் வர அவனுடைய சில கால வேலையும் பறிபோய் விடுகிறது. சில காலம் வேலை இல்லாமல் அலைந்த அவனுக்கு நண்பன் ஒருவனின் உதவியால் மதுச்சாலை ஒன்றில் வேலை கிடைக்கிறது. சம்பளம் குறைவுதான். ஆனால் தினமும் வயிறு நிறைய மது அருந்தக் கிடைப்பதை இட்டு அவனுக்கு பரம திருப்தி.

வீட்டிலே அட்டகாசமும் அதிகரித்தது. வறு மையும் தலைவிரித்தாடியது. பெண்களும் பரு வச் சிட்டுக்களாகினார்கள். பிரச்சினைகளும் கூடின. அவர்களது பள்ளிப்படிப்புக்கும் முற் றுப் புள்ளி விழுந்தது. அவனுடைய அட்டகா சம் அவர்களைப் பட்டினி போட்டு வாட்டு வதில் மட்டுமா இருந்தது?

மூத்த மகளுக்கு ஒரு காதலனாம். அவர் கள் இருவரையும் ஒரு நாள் ஒரு சினிமாப் பட மாளிகையில் இருந்து வெளியே வரும் போது அவன் தற்செயலாய் கண்டு விட்டான். ஆனால் அவர்கள் அவ னைக் காணவில்லை. வழமைபோல் கோபம் தலைக்கு ஏறியது: வஞ்சக எண்ணங்கள் நெஞ்சில் அலை மோதின. எனக்குத் தெரி யாமல் இவள் எப்படி காதல் செய்வாள் என்பது அவனது ஆத்திரம்.

ஆத்திர உணர்வுகள் கொப்பளிக்க சாராயத்தை உள்ளே தள்ளி, வெறி தலைக்கேறச் சென்ற வன் வீட்டில் அட்டகாசம் புரிந்தான் என்ப தைக் கூறவேண்டியதில்லை.

'எங்கேடி போனாய் இன்டைக்கு? உன் னோடு வந்தவன் ஆரடி? என்று மூத்த மகளி டம் கர்ச்சித்த போது அவள் தன் குட்டு வெளிப் பட்டுவிட்டதே என்று விழித்தாள். நடுங்கினாள்.

'ஆட்டக்காரிக்கு விதவிதமான உடுப்பு வேறை! நான் கஷ்டப்பட்டு உழைத்துப் போடு கிறேன். நீங்கள் தின்றுவிட்டு றோட்டில் ஆடுகிறீர்களா? என்று கேட்டவன்,'பார் செய் கிறன் வேலை! என்று கூறி கண்ணில் பட்ட ஆடைகள் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டு தீக்கிரையாக்கினான்.

'ஐயோ! உ[illegible]களுக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. [illegible]களை ஒற்றைத் துணியோடை நிக்க வைக்கிறங்களே! என்று கத்தினாள் கம லாட்சி. அவளுக்கு ஆத்திரம் பொறுக்க வில்லை. எத்தனை நாள்கள் தான் அக்கிர மங்களை சகிப்பது? பிள்ளைகள் ஆத்திரம் தாங்காமல் சீ, நீங்களும் ஒரு மனிதனா? என்று ஏசினார்கள்.

அவன் அவர்கள் எல்லோருக்கும் அடியடியென்று அடித்தான். ஒரே கூக்குரல். பாவீ துலைச்சுப்போ நீ உன்னால் எப்பவும் தரித்திரம். உன்னை இனி எங்களுக்குத் தேவையில்லை. இனிமேல் என்னாலும் பிள்ளைகளாலும் உன்ரை கொடுமைகளைச் சகிக்க ஏலாது! நீ போகாட்டி நாங்கள் போறம்! எங்கையென்டாலும் போறோம். எப்படி என்டா லும் சீவிக்கிறோம். ஆனால் நீ நாசமாகத்தான் போவாய், நீ வேண்டுமென்றால் இருந்து பார்' கமலாட்சி நெருப்பாக கத்தினாள்.

'ஹா! ஹா' இவ ஒரு கற்பாஸ்திரீ, கண்ணகி, சபதம் போட்டு உடனே பலிச்சிடப்போகுது. தன்னிலை விளங்காமல் நின்ற அவன் எக்காள மிட்டுச் சிரித்தான்.

அவர்கள் போய்விட்டார்கள். அவன் தேட வில்லை. எப்படியும் போனால் வரத்தானே வேண்டும். தன்னைவிட்டால் அவர்களுக்கு கதியில்லை எப்படியும் வருவார்கள் என்று சில நாள் அவன் எண்ணினான். பல நாள் ஆகி யும் அவர்கள் வரவில்லை. எங்கு போனார்கள்? 'போங்கடி' என்றவன் தான் இருந்த அந்த வாடகை வீட்டையும் சொந்தக்காரனிடம் விட்டுவிட்டு தேசாந்திரியாக புறப்பட்டுவிட் டான். இலங்கை முழுவதும் சுற்றினான். விரும் பிய ஊர்களில் தங்கிதங்கி பல வருடங்களைக் கழித்தான்.

எந்தக் கர்மத்திற்கும், அது நன்மையானால் நன்மையான பலன்களும், தீமையானால் தீய பலன்களும் ஏற்படவே செய்கின்றன.

அவன் தன்னை நம்பிய மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் மது மயக்கத்தில் புரிந்த ஆக்கிரமங்கள் காலச் சுழற்சியோடு சூழ்ந்து பிடித்தன.

வெளியூரில் ஒரு நாள் அலட்சியமாக வீதி யில் நடந்து கொண்டிருக்கும் வேளையில் வேக மாக வந்த பஸ் ஒன்று மோதிவிட்டுச் சென்று விட்டது. அவனது வலது காலும், வலது கையின் முழங்கைக்கு கீழ்ப்பக்கமும் போய் விட்டது. இப்போது அவனைக் கவனிப்பவர் யார்? செலவு செய்வதுயார்? வறுமையும் வேதனையும் அவனது சொத்துக்களாகின.

பல வருடங்களாக வெளியூர்களில் அனா தையாக அலைந்து திரிந்தவன் மீண்டும் தட்டுத் தடுமாறி கொழும்புக்கு வந்து சேர்ந்தான். வீதி களில் பிச்சையெடுத்தான். கடந்த காலத்துக் காக அழுதான். அவனை ஒருவராலும் அடை யாளம் காண முடியவில்லை. ஒரிருவருக்குத் தன்னும் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள அவனும் தயாரில்லை. தன்மானம் என்ற ஒன்று இப்போது இருப்பதையிட்டு அவனுக்கு சிரிப் பும் வருவதுண்டு.

இப்போதெல்லாம் அவனுக்கு ஒரு அற்ப ஆசை. தன் புத்திரிகளில் ஒருத்தியைத் தானும் கண்ணால் பார்த்துவிட்டுச் சாக வேண்டும் என் பதுதான் அந்த அவா. ஓகோ! பெற்ற பாசம் போலும்.

அவர்கள் எங்கே எங்கே வாழ்கிறார்களோ? எப்படியான நிலையில் இருக்கிறார்களோ ஒரு காலம், ஒரு கணமாவது வீதியில் தானும் ஒருத்தி யையாவது காணும் பாக்கியம் கிடைத்தால் அவன் எவ்வளவு பெரும் அதிஷ்டசாலி, அவன் பெருமூச்சுவிட்டுக் கொண்டான்.

பொரல்லை வீதிகளில் கனகாலம் பிச்சை எடுத்து நாட்களைக் கடத்தியவன். கொட் டாஞ்சேனைப் பக்கம் போனான்.

ஒரு மாலை. ஏதோ விசேஷநாள். அம்மன் பக்த கோடிகள் புடைசூழ வீதிவலம் வந்து கொண்டிருந்தாள். சுவாமிக்குப் பின்னே வந்த பெண்கள் கோஷ்டியில் வந்து கொண்டிருப் பவர்களில் அந்த இருவரும்?

வீதிச் சுவரோடு இருமல் அவஸ்தை தாங்கா மல் நெஞ்சைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் ஏதோ உணர்வு வந்தவனாய் தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான்.

அவனது கண்களால் ஐம்பது வயது மதிக்கத் தக்க அந்தப் பெண்ணையும் அவளுக்குப் பக் கத்தில் சிரித்துப் பேசியபடி வரும் இளம் பெண் ணையும் வெறித்துப் பார்க்கின்றான்.

அந்தப் பெண் கமலாட்சிதான். அவனுக்கு அதில் எவ்வித சந்தேகமும் தோன்றவில்லை. அந்த இளம் பெண் அவனுடைய இரண்டா வது புத்திரி மாலா அல்லவா?

ஓ! என்ன அழகாய் அவள் வளர்ந்திருக் கிறாள். பன்னிரண்டோ பதின்மூன்றோ வய தில் சிறுமியாக அவன் அவளைக் கடைசியா கப் பார்த்திருக்கிறான். அதற்குள் இடைவெளி. பதினைந்தோ பதினாறோ ஆகிவிட்டனவே!

கல்யாணம் கட்டி குழந்தை குட்டிகளோடு தான் வாழ்கிறாள் போல இருக்கிறது. எப் படியோ நன்றாகத்தான் வாழ்கிறார்கள். சந் தோஷம்தான். இந்தப் பாவியை அவர்கள் அடையாளம் காண்பார்களா? ஒரு அன்புப் பார்வை பார்ப்பார்களா? நெஞ்சு படபடவென்று அடிக்கிறது. சளி நெஞ்சை வந்தடைக்கிறது.

அவன் தடுமாறிக் கொண்டு வந்துகொண் டிருக்கும் அவர்களைப் பார்த்துப் பேசினான்.

'கமலா...ட்சி'

'மா.....லா'


அவன் உரக்கத்தான் கூப்பிடுகிறான். ஆனால் குரல் நெஞ்சக் கூட்டுக்குள்ளேயே அடங்கியிருந்தது. வெளியில் சத்தம் வர வில்லையே! எவ்வளவும் முயன்றும் சொற் கள் வெளியே வர முடியாமல். தொண்டைக் குள்ளேயே சளி அழுத்தியது. அவன் அவர் களை விழுங்கி விடுவது போல் பார்த்தான்.

'ஐயோ! ஆரோ பிச்சைக்காரன், பைத்தியம் போல் இருக்கிறது: இருந்தும் கிட்ட வருகுது என்று அருவருத்துக் கொண்டே அவள் தாயை யும் தள்ளிக் கொண்டு சாமிக்குப் பின்னால் ஓடி கூட்டத்திற்குள் போய்ச் சேர்ந்து விட்டாள்.

அவனால் நிற்க முடியாமல் உடல் நடுங் கியது. இல்லை தலை சுற்றியது. இந்த அக் கிரமக்காரனுக்கு வேண்டியது தான், என்று தன்னைத்தானே சபித்துக் கொண்டு வீதியில் உட்கார்ந்து கொண்டான். * * * * * * * * * *

*('தெருப்பு வெளிச்சம்' சிறுகதைத் தொகுப்பில் இருந்து)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 20



அனுப்புபவர் பெயர்:.................................

விலாசம்:.................................

.................................

கையொப்பம்:.................................

### மேலிருந்து கீழ்

1. கால்.
2. சேலை.
3. தூக்கிச் செல்லுதல்.
4. உலகம்.
5. என்று...
6. சுவாசத்தொகுதியில் அழற்சி ஏற்பட்டால் இது வரும்: இதனைச் சகுனப் பிழையாகவும் கருதுவர்.
9. மறைவில் மறைத்துப் புகைத்தலை இதை அடிப்பது என்பர்.
11. துக்கம்.
12. கௌரவிக்க வழங்கும் பரிசில்.
13. துன்பம்.
14. ஒரு பறை வகை. இதை அடிப்பதன் மூலம் செய்தி பரப்புவது பழங்காலத்து முறை.
15. முகத்தில் வரும்; இளைமை யைக் காட்ட.
17. கழிவு அகற்றும் உறுப்பு.
18. நெல்லில் அரிசியைப் பிரித்த பின் எஞ்சுவது.
19. வெடித்துச் சேதத்தை ஏற்படுத்துவது-பருமனையும் குறிக்கும்.
21. சாபம் கொடு.

### இடமிருந்து வலம்

1. பந்தோபஸ்து.
5. யாது.
7. குறைவு (சூடு குறைதல்).
8. முகம்.
10. எரிதல்.
12. இந்துக்கள் இதன் இலையை பூஜைக்குப் பயன்படுத்துவர் .
13. வீடு/மனை.
14. மரம்.
15. தூங்கு.
16. உடம்பின் பின்புறம் உள்ளது.
18. வலுவான உலோகம்.
20. பத்தாம் திதி.
22. விழி.
23. காதினுள் சேரும் கழிவு இது. சிலவேளை தொல்லை கொடுக்கும்.
24. மரத்தின் பாகம்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 20**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு-அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (06.08.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.20இல் வெற்றிபெற்றோர் விவரம் 10.08.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 18இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) முதலாவது. (5) இசை. (6) கரு. (7) தணிதல். (9) தாமதம். (11) கலம். (12) திரு. (13) அரம். (15) மதுவம். (17) நுகம். (19) ஆடி. (20) பரு. (21) சரணாகதி. (22) விவிலியம். (23) வேல்.

**மேலிருந்து கீழ்**

(1) முகதா. (2) தருமதி. (3) வதம். (4) துணி. (5) இல்லம். (8) தகரம். (10) தருமம். (13) அவதாரம். (14) அனுபவி. (16) கடிதில். (18) கருவி. (19) ஆகவே. (21) சய.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 18 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — **லோகப்பிரியா கணேசநாயகம்,** *மாணிக்க வைரவர் கோயிலடி, சுழிபுரம் கிழக்கு சுழிபுரம்*

**2 ஆம் பரிசு** — **திருமதி.ச.கனகேஸ்வரன்,** *7 ஆம் கட்டையடி, மல்லாகம்.*

**3 ஆம் பரிசு** — **திருமதி சிவபாலேஸ்வரி பத்மயோகன்,** *இல:16, விதானையார் வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ப.சின்னத்துரை,** இல; 168/1 கார்த்திகேசு வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.

(2) **திருமதி பி.ஜெரிமயா,** இல: 42/2 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(3) **செல்வி ஜெனிஸ்ரெலா செல்லத்துரை** 'ஜெயகிரி' [illegible], உடுவில், [illegible]

(4) **அ.பஞ்சாட்சரன்,** இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு.

(5) **உ.ஆர்த்திகன்,** தில்லையப்புலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கை விவசாய முறையினால் சூழலைப் பேணலாம்; உயிரியல் பன்முகத் தன்மையையும் அது பாதுகாக்கும்

**சூழலைப்** பேணுவதற்குரிய புதுப் பொருளாதார ஒழுங்கினை உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்க வேண்டுமென்பது அண்மைக் காலத்தில் சூழலியலாளர்கள் வலியுறுத்தும் சிந்தனையாக உள்ளது. இச் சிந்தனைக்கான அடிப்படைக் காரணிகளையும், புதுப் பொருளாதார ஒழுங்கமைப்பில் விவசாயத்துறையிலே இயற்கை வேளாண்மை முறையைப் பின்பற்றக்கூடிய சாத்தியப்பாட்டையும் எமது பிரதேச சூழலில் இதனைப் பின்பற்றும் ஏதுநிலை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

உலக சூழல் பிரச்சினைகள் எனும் போது பொதுவாக சுற்றுப்புறம் பற்றியும் சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றியும் பலர் பேசுவதுண்டு. ஆனால், சூழல் பிரச்சனைகளை புவிக்கோளம் சார்ந்த ரீதியில் அணுகுதல் வேண்டும். இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு புவிக்கோளம் சார்ந்த சூழல் அம்சங்கள் பற்றிய தெளிவு முதற்கண் அவசியம்.

**1. சூழற்பாகுபாடும் பிரச்சினைகளும்**

1.1. புவிச்சூழலைக் கற்கும் வசதி கருதி நான்கு பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். I. நில மண்டலம் (Lithosphere), II. நீர் மண்டலம் (Hydrosphere), III. வளி மண்டலம் (Atomosphere), IV. உயிரியல் மண்டலம் (Biosphere) என்பன அவையாகும். இவை ஒவ்வொன்றும் சில் துணைப் பிரிவுகளையும்

## உழாமலே பயிர் செய்து மண்வளம் காக்கலாம்

கொண்டுள்ளன. நிலமண்டலத்தினுள் புவிச்சரிதம் (Geology), தரைத்தோற்றம் (Relief), மண் (Soil) ஆகியனவும், நீர் மண்டலத்தில் மேற்பரப்பு நீர் (Surface water), தரைக்கீழ் நீர் (Underground water), சமுத்திரங்கள் (Oceans) ஆகியனவும் அடங்கும். வளிமண்டலமெனும்போது அதனுள் வானிலைக் காரணிகளும் (Weather), காலநிலைக்காரணிகளும் (Climate) அடங்கும். உயிரியல் மண்டலத்தினுள் இயற்கைத்தாவரம் (Vegetation), விலங்கினங்கள், பறவையினங்களின் வாழ்க்கை (Animals Life) ஆகியனவும் மனிதனின் வாழ்வும் (Human Life) அடங்கும்.

1.2. உயிரினப் பாரம்பரியத்தின் பரிணாமத்தில் இன்றைய நிலையில் உள்ள மனிதன் தோற்றம்பெற்று மனித வாழ்வை ஆரம்பித்ததிலிருந்து புவித்தொகுதியின் சகல கூறுகளின் மேலும் அவன் தன் ஆதிக்கத்தைச் செலுத்திவந்துள்ளான். மனித வாழ்வின் வரலாற்றுப் போக்கில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவன் வெவ்வேறுபட்ட தொழில் நுட்பதைப்பயன்படுத்தியே புவித்தொகுதிக் கூறுகளைத் தன் தேவைக்குரிய வளங்களாக மாற்றிப் பயன்படுத்தி வந்தமையை அறிய முடிகினறது. புவித்தொகுதியும் மனித தேவைக்குரிய வளங்களை நீண்ட நெடுங்காலமாக அவனது வாழ்வுக்காக எப்பிரச்சினையுமின்றி வழங்கி வந்தது. மனித குலத்தின் இயற்கைக்கு மாறான அதிகரிப்பும் அவனது பேராசைக்குரிய தொழில்நுட்ப வளர்ச்சியும் புவித்தொகுதி வளங்களைப் பெருமளவு சுரண்டின- வீண் விரயமாக்கின. இதனால் வளங்கள் அழிந்தன. தேவைக்கு அதிகமாக வளங்கள் பயன்படுத்தப்பட்டதால் வளப்பற்றாக்குறை ஏற்பட்டது. முறையற்ற வளப்பாவனையும் வீண்விரயமும் புவித்தொகுதிகளின் சகல கூறுகளையும் சிறிது சிறிதாகப் பாதித்து புவித்தொகுதிச் சூழல் மாசடையும் நிலையைத் தோற்றுவித்தது. இம்மாசடையும் நிலை கி.பி. 1700 முதல் கி.பி. 1900 வரை மேற்குலகில் எற்பட்ட கைத்தொழில் புரட்சிக்காலத்தே துரித கதியில் அதிகரித்தது. நவீன யுகத்தின் ஆரம்பமெனப் பலராலும் கூறப்படும் கைத்தொழில் புரட்சிக்காலத்திலேதான் சூழல் மாசடைதல் மனித வரலாற்றில் என்றுமில்லாத வகையில துரிதப்பட்டது. என்பதிலிருந்து நவீனயுகத்

## சூழல் பிரச்சினைகளைப் பூமிசார்ந்த ரீதியில் அணுகும் நோக்கு அவசியம்

தொழில் நுட்பத்தின் பல்வேறு கூறுகள் சூழலின் எதிரி என்பது தெளிவாகும். இதனால் அண்மைய சூழலியல்வாதிகள் சூழலுக்கு ஊறுவிளைவிக்காத சூழல் நட்பார்த்த தொழில்நுட்பமே எதிர்கால உலகிற்கு அவசியம் என வலியுறுத்தி வருகின்றார்கள். குறிப்பாக மனித வாழ்வை மாத்திரமல்ல, உயிரின வாழ்வையே நிலை நிறுத்துவதற்கான 21 ஆம் நூற்றாண்டிற்கான தொழில்நுட்பம் சூழலைப் பேணுகின்ற அதனைப் பெருமளவு பாதிக்காத தொழில்நுட்பமாக விளங்கவேண்டுமென உலக சமூகத்திட்டம் விண்ணப்பித்து வருகின்றது. இக்கோரிக்கைகள் உலக சூழல மகாநாடுகள் ஊடாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**2. புவி உச்சி மாநாடு**

2.1. சூழல்பற்றிய பன்முகப்பார்வையை ஐ.நா.வின் கிளை நிறுவனங்கள் பல உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தி வருகின்றன. இந்த வகையில் றியோ புவி உச்சிமாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இம்மாநாடு 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிறேசில் நாட்டின் றியோடி ஜெனிரோ நகரில் இடம்பெற்றது. இந்த உச்சி மாநாட்டிற்கு முன்னோடியாக சுவீடன் தலைநகரான ஸ்ரொக்காமில் 1972 இல் ஒரு மாநாடு இடம்பெற்றது. இதிலே 113 நாடுகள் பங்குகொண்டன. 1992 இல் இடம்பெற்ற றியோ மாநாட்டில் 160 உலக நாடுகள் பங்குகொண்டன.

18,000 இற்கு மேற்பட்டோர் பங்குபற்றுனர்களாகக் கலந்துகொண்ட இம்மாநட்டில் ஏறத்தாழ 400,000 பேர் பல்வேறு நவீன தொலைத்தொடர்பு ஊடகங்கள் வழியாக பார்வையாளர்களாகப் பங்குகொண்டனர். 8000 இற்கு மேறபட்ட பத்திரிகைகள் இம்மாநாடு பற்றி எழுதின. இம்மாகாநாட்டின் இறுதியில் செயற்றிட்டம் 21 (Agenda 21) எனும் நிகழ்ச்சித்திட்டம் முன்வைக்கப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் உலக சூழலைப் பேணுவதற்கு உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி இது விரிவாகக் குறிப்பிடுகின்றது. மேற்படி மாநாடு வலியுறுத்திய பல்வேறு விடயங்களைச் சுருக்கமாகத் தொகுத்து நான்கு தலைப்புகளின் கீழ் தரலாம்.

**1. உயிரியல் பன்முகத்தன்மையைப் பேணுதல்.**

**2. உயிரினங்களுக்கு ஆதாரமான காடுகளைப் பேணுதல்.**

**3. பச்சைவீட்டுத் தாக்கமுள்ள வாயுககளின் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான சர்வதேச சட்டங்களை இயற்றுதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும்.**

**4. உலகில் புதிய பொருளாதார ஒழுங்கை உருவாக்குதல்.**

2.2. உயிரியல் பன்முகத் தன்மையைப் பேணுதல் எனும்போது விரைவாக அழிவடைந்து வரும் புவியிலுள்ள விலங்குகளை தாவர ஜீவராசிகளை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது. உலகில் ஏறத்தாழ 50-100 இலட்சம் வரையிலான உயிரின வகைகள் உள்ளனவெனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய விஞ்ஞான யுகத்தில் இவற்றுள் 10 வீதமான உயிரின வகைகளே ஆய்வுக்குட்பட்டுள்ளன. இவற்றுள் 1 வீதமானவையே நுண்ணாய்வுக்குட்பட்டவை. ஏனையவை மறை வளங்களாக உள்ளன. எதிர்கால சந்ததியினர் இவற்றை முறையாக

## வேளாண், விலங்கு வளர்ப்பு, மீன்பிடி அபிவிருத்திகளை வலிகாமம் மற்றும் தீவுப்பகுதிகளில் முன்னெடுக்க வாய்ப்பு உண்டு

ஆராய்ந்து பல்வேறு பயன்பாட்டிற்கு உட்படுத்த முடியும். ஆய்வுக்குட்படாமலேயே இவை அழிவடைந்துவிடின் எதிர்கால மனித குலத்திற்கு இன்றைய மனிதன் துரோகமிழைத்தவனாவான். மேலும் உயிரினங்களின் பாரம்பரிய மரபுக்கூறுகளைப் பிரித்தெடுத்து தேவையான வகையில் வளர்க்கும் மரபுக் கூற்றுப் பொறியியல் அண்மைக் காலத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. உலகம் எதிர்நோக்கும் உணவு நெருக்கடிக்கு இத்துறை வளர்ச்சி தீர்வாக அமையுமென விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள். எனவே உயிரினப் பன்முகத் தன்மையை இன்றைய மனிதகுலம் பேணிக்காத்திடல் இன்றியமையாத் தேவை எனலாம்.

புவி உச்சி மாநாடு வலியுறுத்திய இரண்டாவது அம்சம் உலகின் **காடுகளைப் பேணுவதாகும்.** உலகைப் பசுமையாக வைத்திருப்பது, மழையை வருவிப்பதற்கும் வெப்பத்தை மட்டுப்படுத்தி புவியை பாலைவனமாகாது பாதுகாப்பதற்கும் உயிர் மண்டலத்தைப் பேணுவதற்கும் காடுகள் அவசியமாகும். மண்-தாவர- ஏனைய உயிரின வாழ்வு என சூழலியல் முறைமை செயற்படுகின்றது. உலகில் காடுகள் இயற்கையாகவும், செயற்கையாகவும் தினம் தினம் பெருமளவு அழிவடைந்து வருகின்றன. மேலும் உலக நிலப்பரப்பில் இன்று 6 வீத பரப்பளவில் பரந்துள்ள அயனக் காடுகளில் உலகின் மொத்த உயிரின வகைகளில் 60 வீதமானவை காணப்படுகின்றன. இத்தரவுகள் காடுகளைப் பேணவேண்டியதன் அவசியத்தை உணர்த்தப்போதுமானவை.

**2.3. பச்சைவீட்டுத் தாக்கமுள்ள வாயுக்களின** வெளியேற்றம், கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து அதிகரித்து வந்து இன்று புவியை ஒரு ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. புவியின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எடுத்துக்காட்டாகக் குளோரோ புளோரோ காபன் எனும் வாயு வெளியேற்றத்தால் வளிமண்டலத்தில் 15-30 மைல் உயரத்திலுள்ள ஓசோன் வாயுப் படையில் துவாரங்கள் உருவாகியுள்ளன. புவியில் தீங்கு விளைவிக்குமென கருதப்படுகின்ற புற ஊதாக்கதிர்வீச்சுத் தாக்கத்தை ஓசோன் படையே பாதுகாக்கின்றது. புவியில் தற்போது புற ஊதாக்கதிர்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால்தான் சரும நோய்கள், புற்றுநோய்கள் என்பனவும் இனம்காண முடியாத வேறு நோய்களும் அதிகளவில் காணப்படுகின்றன என மருத்துவவியலாளர்கள் எச்சரிக்கை செய்கின்றார்கள். பச்சைவீட்டு தாக்கமுள்ள நச்சுத்தன்மை வாய்ந்த 85 வீத வாயுக்களை கைத்தொழில் நாடுகளே வளியில் பரவவிடுகின்றன. உலகின் 30 வீத குடித்தொகையைக் கொண்ட இந்நாடுகளின் வர்த்தக நோக்கம் கொண்ட அபரிமிதமான தொழில் உற்பத்திகளின் விளைவாகப் புவியின் வளிமண்டலம் முழுவதும் நச்சுப்புகையால்கனத்து வருகின்றதெனலாம்.

2.3. விவசயம், மீன்பிடி, கைத்தொழில், சேவைகள் எனும் பொருளாதார உற்பத்தித்துறைகளில் சூழல் நட்பார்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எதிர்கால அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டுமென்பதே சுருக்கமாகப் புதுப் பொருளாதார ஒழுங்கின் அடிப்படை எனலாம். இவை பொதுவாக நிலைத்து நிற்கக்கூடிய அல்லது பேண்தகு அபிவிருத்தியாக (Sustainable Development) விளங்கவேண்டுமென்பதே சூழலியலாளர்களின் எதிர்பார்ப்பாகும். இவர்கள் கைத்தொழில்துறையின் எரிசக்தியாக; சூழலைப் பேணுவதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஞாயிற்றுச்சக்தி, காற்றுச் சக்தி, அலைச்சக்தி போன்றவற்றைப் பயன்படுத்துவதை விரும்புகின்றார்கள். விவாசாயத்துறையைப் பொறுத்தவரையில் இரசாயன உள்ளீடுகளைத் தவிர்த்து நிலைத்து நிற்கும் வோளண்மை அபிவிருத்தியை அல்லது இயற்கை வேளாண்மை அபிவிருத்தியை வேண்டிநிற்கின்றார்கள்.

2.4. இயற்கை வேளாண்மையை நிலைத்து நிற்கக் கூடிய வேளாண்மை, நிலையான வேளாண்மை, பேண்தகு வேளாண்மை என்று பலவாறு வழங்குவர். இயற்கைவேளாண்மை பழமைக்குத் திரும்புதல் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும். இன்றைய உலக நிலவரங்களை: அதாவது குடித்தொகை அதிகரிப்பு, உணவுப்பற்றாக்குறை, சூழல் நெருக்கடி என்பனவற்றை மனங்கொண்டு புதுப்பொருளாதார ஒழுங்கின் அடியாகச் சிந்தித்ததன் விளைவெனலாம். இயற்கை வேளாண்மையின் தந்தையென ஐப்பானியக் காந்தி மாசானபு ஃபுகாகோ (Masanabu Fukuoka) வைத் தரிசிக்கலாம்.

இவர் இயற்கை வேளாண்மையை வலியுறுத்தி எழுதிய "ஒற்றை வைக்கோல் புரட்சி" (One Straw Revolution (1975)) என்ற நூலும் இயற்கை வழி வேளாண்மை (The Road to nature-1977) என்ற நூலும் மிகவும் பிரபலமானவை. இந்நூல்கள் பலமான ஆதரவையும் கடும் விமர்சனத்தையும் எதிர் கொண்டவை. இவர் வழியில் இன்று பலர் சிந்தித்து வருகின்ற போதிலும் பில் மோலீசன் (Bill Molision), டேவிட் ஹம்ரன் (David Homton), ஜே.ஐ.றோடேல் (J.I. Rodale), அவரது மகன் ஜோன் றோடேல் (John Rodale) என்பவர்களும் மூன்றாம் உலகைச் சேர்ந்த அனில் குப்தா மனீந்தர்பால் எம்.எஸ் சுவாமிநாதன், ஆரியரத்தினா போன்றோரும் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர்.

இயற்கை வேளாண்மையை "ஒன்றும் செயயாமல் ஒரு வேளாண்மை" என்று குறிப்பிடும் மாசானபு ஃபுகாகோ தான் தன் வயலில் வேலை செயயும்போது 'இதனையும், செய்யாமல் இருநதால் என்ன?' என்ற கேள்வியைத் தன் மனத்தில் கேட்டுக்கொண்டே செய்வதால் இயற்கை வழியில் அனைத்தையும் விட்டுவிட முடிகின்றது என்கிறார். தன் பண்ணையில் உலாவரும் போது இயற்கையாக வளர்ந்த நெற்கதிர் ஒன்று நவீனமுறையில் பயிராகும் நெல்லைவிட மிக்க ஆரோக்கியமாகவும் அதிக கதிர்களைக் கொண்டதாகவும் விளங்கியதைக் கண்டே தான இயற்கை வழி விவசாயத்தின்பால் அக்கறை கொண்டதாகக் கூறும் இவர், புவியிலிருந்து வரும் அனைத்தும் புவிக்கே திரும்பிவிட வேண்டும். நெற்கதிர்களை எடுத்துக் கொண்டு ஏனையவற்றை அப்படியே விட்டுவிட வேண்டும் எனக கூறுகிறார். அவர் முன்வைக்கும் இயற்கை வோளன்முறையில் நான்கு அம்சங்கள் முக்கியமானவை.

**மண்வளம் பேணுதல்** பற்றிக் கூறும்போது பயிர்வளர்ச்சிக்கு பண்ணையை உழவேண்டியதில்லை. தாவரங்களின் வேர்களும், மண்புழுக்கள, முயல் ஏனைய சிறு விலங்கினங்கள் என்பன இயற்கையாகவே மண்ணை உழுகின்றன. உக்கவைக்கும் நுணணங்கிகளின் பெருககம் மண்வளத்தையும் பெருக்கும் என்கிறார்.

பயிர்வளர்ச்சிக்குரிய **உரம்** பற்றிக் குறிப்பிடும்போது நிலத்தை அதன் போக்கில் விடுவோமாயின் இயற்கையாகவே அது மண்ணில் உரச்சத்தை நிர்வகித்துக் கொள்ளும். பண்ணையில் வளரும் மிருகங்களும், பறவையினங்களும் இயற்கையாக உரத்தை வழங்கும். வைக்கோலை வெளியேற்றாதுவிட்டால் அது உக்கி உரத்தை வழங்கும் எனக்கூறும் அவர், காட்டில் செழித்து வளரும் மரங்களுக்கு நாம் உரமிடுகின்றோமா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றார்.

**களைகளின் வளர்ச்சி** இயற்கை சமச்சீர்த்தன்மையைப் பேணும் ஒரு நடவடிக்கையே அதனை உழுது அழிக்க எண்ணினால் அது பெருகுமேயன்றிக் குறையாது. பருவப் பயிர்களுக்கு இடையே ஊடுபயிர்களை வளர்ப்பது, வைக்கோலால் நீண்ட காலம் வயல் பரப்பை மூடி வைத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகள் களையைக் கட்டுப்படுத்தும் என்கிறார்.

[illegible] பற்றிக் குறிப்பிடும் மசானபு ஃபுகாகோ இயற்கையான சுற்றும் சூழலில் வளரும் பயிர்கள் ஆரோக்கியமானவையே. இயற்கையில் பூச்சிகளுக்கு எதிர்ப் பூச்சிகள் உண்டு. நாம் கிருமிநாசினி தெளிப்பதால் அனைத்துப் பூச்சிகளும் அழிந்து இயற்கைச் சமநிலை அற்றுப்போகின்றது. சிலந்தி வலை பின்னி என் பண்ணை முழுவதையும் பாதுகாப்பதை நீங்கள் நேரில்வந்தால் பார்க்க முடியும். எனது பண்ணை சிலந்திவலைப் பரவலால் மின்னிச் கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். மயிர்கொட்டிகளை செம்பகம் அழிக்கும். எலிகளை ஆந்தைகள் அழிக்கும், தவளை, தேரை என்பனவும் பூச்சிகளிலிருந்து பயிர்களைக் காக்கும். இயற்கையின் விந்தைகளை விளக்க முடியாது என்று வலியுறுத்துகின்றார்கள்.

2.5. சூழலுக்கு ஊறு விளைவிக்காத நிலைக்கும் வேளாண்மை பற்றிய கருத்துகளை உலகிற்கு பரப்பிவரும் இன்னொரு முக்கியமானவர் பில் மோலீசன் (Bill Mollision) ஆவார். இவரும டேவிட் ஹோம்ரன் (Davill Homton) என்பவரும இணைந்து ஃபேமா கல்சர் (Permt Culture) என்ற நூலை 1978 இல் வெளியிட்டனர். இதன் அர்த்தம் நிலைத்து நிற்கும் பயிர்ச்செய்கை (Permanent Culture) என்பதாகும். இவர்கள் இந்நூலில் மசானபு ஃபுகாகோலின் சிந்தனைகளினால் கவரப்பட்டுள்ளமை நன்கு வெளிப்படுகின்றது. ஆஸ்திரேலியாவில நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தில் டயால்கம் (Taylgum) என்ற இடத்தில் நிலைக்கும் பயிர்ச்செய்கை நிறுவனம் (Perma Culture

## நிலத்தை அதன் போக்கில் விட்டால் உரச் சத்துப் பெருகும்

Institute) என்ற அமைப்பனை நிறுவி அதனூடாக மேற்படி வேளாண் முறைகளை உலகிற்குப் பரப்பி வருகின்றார்கள். உலகில் இவர்களுக்கு 54 நாடுகளில் கிளை நிறுவனங்கள் உண்டு. இந்நிறுவனங்களின் மூலம் நிலைக்கும் வேளாண்மையை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்தில் கடந்த இரு தசாப்தமாக நிலவிவரும் யுத்த நெருக்கடியால் நாம பல இன்னல்களை எதிர்நோக்கினாலும் சில நன்மைகளும் விளைந்துள்ளன. எரிபொருள், உரம், களை நாசினி, கிருமி நாசினித் தட்டுப்பாட்டால் எமது விவசாய நிலங்கள் நஞ்சாகாது பேணப்பட்டு வந்துள்ளமை குறித்துரைக்கதக்க நல்விளைவாகும். இந்நிலங்கள் நிலைத்துநிற்கும் பண்பு கொண்ட இயற்கை வேளாண்மைக் குரிய அடிப்படைகளைக் கொண்டுள்ளன. வலி காமத்தில் வடபகுதிச் செம்மண் வலயம், தீவுப் பகுதி பிரதேசம் என்பன பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் புலம் பெயர்ந்ததால் பலவழிகளில் இயற்கைவழி மாற்றத்திற்குள்ளாகி சீர்பெற்றுள்ளன. இவ் விடங்களில் புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளும் அரசும், அரச சார்பற்ற நிறுவனங்களும் 21 ஆம் நூற்றாண்டுக்குரிய சூழல்பேண் இயற்கை வேளாண் வழிமுறைகளை மேற்குறித்த பகுதிகளில் அறிமுகப்படுத்துதல் அறிவுடைமையாகும்.

வலிகாமம் வாழ் விவசாய மக்கள் மீளக் குடியேற்றத்தின் பின் உரம், நாசினிப்பாவனையின்றி அதிகளவு விவசாய உற்பத்திகளைப் பெற்று வருவது கவனத்திற்குரியது. தீவுப் பகுதியைப் பொறுத்தவரையில் மீள்குடியமர்ந் தோர் குறைவு. ஆனால் விவசாய நிலங்கள் அதிகம் உள. இச்சூழ் நிலையைப் பயன்படுத்தி சூழல் பேண் இயற்கை வேளாண் பண்ணைகளையும், விலங்கு வளர்ப்புப் பண்ணைகளையும் அங்கு உருவாக்குதல் சாத்தியமே. நகரச் சந்தையில் உடன்விற்பனை செய்யக் கூடிய காய்கறி உற்பத்தி, விலங்கு வேளாண் உற்பத்தி, மீன்பிடி உற்பத்தி என்பனவற்றை அங்கு மேற்கொள்ள உதவி வழங்குவதன் மூலம் தீவுப்பகுதியை அபிவிருத்தி செய்வ தோடு யாழ்ப்பாண நகர மக்களின் ஒரு பகுதி உணவுத் தேவையினையும் பூர்த்திசெய்ய முடியும். பொதுவாக வடகீழ் மாகாண புனர்வாழ்வு புனர்நிர்மாணம் என்பனவற்றிற்காத் திட்டமிடுவோரும் ஆலோசனை வழங்குவோரும் இப்பிரதேசங்களில் நிலைத்து நிற்கும் பண்பு கொண்ட 21 ஆம் நூற்றாண்டிற்குரிய சூழல் பேண் வேளாண் அபிவிருத்தியை முன்னெடுத்தல் பயன்தருமா என்பதுபற்றியும் எவ்வெவ் இடங்களில் எந்தெந்த வழிகளில் இதனை அமுல்நடத்த முடியுமென்பது பற்றியும் ஆய்வுகளை மேற்கொண்டு தெளிந்த நல்லறிவைப் பெறுதல் வேண்டும்.

★★★



பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்
தலைவர், சமூகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
(இணைப்பாளர், புறநிலைப் படிப்புகள் அலகு).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக விளையாட்டு வீரர்
**கா.கந்தசாமி** (கந்தன்)
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி கா.நாகம்மா**
அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மத்திய விளையாட்டுக் கழகம்,**
**ஆவரங்கால்.**
(சி/553904)

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள
நீர்ப்பாசனப் பொறியியலாளர் **ராஜகோபு**
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் மாணிக்கம் தம்பிராஜா**
24.07.2008 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளரும், உத்தியோகத்தர்களும்,
**நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்.**
(76664)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 27.06.2008
வெள்ளிக்கிழமை
அன்று
சிவபதமடைந்த எமது
குடும்பத் தலைவர்
**அமரர் தர்மலிங்கம்**
**நாகேஸ்வரன்**
அவர்களின்
வீட்டுக்கிரியைகள்
இன்று (27.07.2008)
ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12
மணியளவில் எமது
இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (766659) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### சைவப்புலவர் சண்முகராஜா தையல்நாயகி



207, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா தையல்நாயகி 25.07.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் அமரர் சண்முகராஜாவின் அன்பு மனைவியும் கிருஸ்ணமூர்த்தி, சண்முகநாதன் (France), கமலாசனி ஆகியோரின் சகோதரியும் மனோன்மணி, உதயமலர்(France), அமரர் தனராஜா ஆகியோரின் மைத்துனியும் சித்திவிநாயகன், நாகலட்சுமி, சிறிகாந்தன் (உதவி விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தாயும் சுதர்சினி, வீரசிங்கம், மனோகரன் ஆகியோரின் மாமியும் நாகநந்தினி, காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் பெரிய தாயும் சாந்தினி (நோர்வே), சாந்தசொரூபன் (டென்மார்க்), ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அத்தையும் கௌசிகன், சண்சிகா, காருண்யன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (76660)

தகவல்:
**ச.சிறிகாந்தன் (மகன்).**

### கந்தையா நாகரத்தினம் (செல்லம்மா)



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நாகரத்தினம் 24.07.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையாவின் மனைவியும் வாமதேவி, கமலாதேவி, கிருஸ்ணமூர்த்தி, சரோயினிதேவி, புவனேந்திரன், பத்மாவதி, தேவராசா ஆகியோரின் தாயும் கந்தையா, மங்களேஸ்வரி, நிர்மலாதேவி, நவரத்தினராஜா, நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தன், பாலசிங்கம் அகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி,
சங்கானை.
(76657)

தகவல்:
மகன்மார்: **க.கிருஸ்ணமூர்த்தி,**
**க.புவனேந்திரன் (ஐயா),**
**க.தேவராஜா.**

## ஆடவனை அவன் மார்பின்..

(09 பக்கத் தொடர்ச்சி...)

பகுத்தறிவு வாதம் பேசுவோரும் பூணூல் உடையானைக் கண்டால் பார்ப்பார் எனக் கணித்து வெறுக்கின்றனர். முதுகு கடித்தாற் பூணூலைப் பிடித்துக் கடியைப் போக்கலாம். குளிக்கும்போது முதுகின் அழுக்கைத் தேய்க்கலாம் என்பர்.

எனினும், பூணூல் மார்பிற் கிடந்தசைவதோர் அழகேயாம். பூணூலாகிய இவ்வணிகலம் பார்ப்பார்க்கென்றே நிலைத்து விட்டதால் எல்லோருக்குமான பண்டைய பழக்கம் போய்விட்டது.

**உபசரிப்புக்குப் பலமுறைகள்**

தமிழனிடமிருந்த தமிழனுக்கே சொத்தான பூணூல் கூறும் கதையிது. பூணூல் எதுவும் இல்லாதிருந்தால் அவன் தலைவாசலை எட்டவில்லை என்பதை உணர்த்தும். அவனைத் தன் தம்பிக்குச் சமமாக மதிப்பாள் இல்லத்திலிருக்கும் பெண். தம்பிக்கான பரிவைக் காட்டி உபசரிப்பாள்.

தம்பி, அண்ணன், முதியவர் என்றெல்லாம் அமையும் விருந்தினரை அந்தந்த முறையில் அடையாளங் கண்டு உபசரிப்பதற்கு பூணூல் அணிந்தவன், அதனை அணியாதவன், அதன்மென்மை, தடிப்பு, முறுக்கு ஆதியாந் தன்மைகள் உதவின. அவ்வத் தரத்துக்கேற்ப பருவ வேறுபாடுகளை உணர்த்தின. இவ்வேறுபாட்டிற்கமைய விருந்தின் பரிவும் இருக்கும்.

பூணூல் ஒற்றை வடத்தில் அமைந்திருந்தால் அவன் வாலிபத் திசைக்கு வந்துவிட்டான் என்பது பொருள். நேருக்குநேர் இருத்தி உபசரிக்கத் தலைப்பட்டால் பருவத்துக்கேற்ற கோளாறுகளிருக்கும். வாலிபத் தொல்லைக்கு ஆளாக நேரும். அந்நிலை பெண்ணுக்கு நேரக்கூடாது.

இச்சந்தர்ப்பத்தில் உள்ளே போய் இலையைப் போட்டுப் படைத்து விட்டு இலை போட்டிருக்கு எனக் கூறிச் சென்று விடுவாள்.

**தங்கையின் தரத்துக்கான உபசாரம்**

இரட்டைவடம் மணம் புரிந்தவன என்று அர்த்தம். இவனை மூத்த சகோதரனாகப் பார்த்து உபசரிப்பாள். தன் சகோதரி என அவன் உணர்வு மேலோங்கச் செய்யும் விதத்தில் இவள் நடந்துகொள்வாள்.

அதிதியின் மார்பிற் காணப்படும் மூன்றுவடம் மணமாகி மனைவியை இழந்தவன். (தபுதாரன்) மறுமண விருப்பற்றவன் என்பதைக் காட்டும். இத்தகைய அதிதிக்கு முதியோருக்கான உபசாரமாக அமையும்.

**கலாசாரக் கலப்புகளின் விளைவு**

இத்தகைய பண்டைய பூணூல் இன்று போல் வகுப்பு வர்க்கங்காட்ட அமையவில்லை - ஒரு சாரார்க்குரியதாக இருக்கவில்லை. இன்று பகுத்தறிவாதிகள் பூணூல் கண்டவுடன் பார்ப்பாராக் பொருள் கொண்டு புறந்தள்ளுகின்றனர். அந்தணர்க்கு என்றாகிவிட்ட இந்தப் பூணூல் பஞ்சகம்மியர்க்கும் உரியது என்பதை நிலைநாட்ட அவர்களும் மார்பில் அணிகலனாக்கியுள்ளனர். அணியும் ஆபரணமாக மார்பிற் துலங்கும் இதனை அவர்கள் கைவிடாது இன்றுவரை போற்றுகின்றனர்.

பூணூலுடன் சால்வை மேல் அலங்காரமாக வேட்டியுடன் பண்டு மலர்மாலையும் வழக்கிலிருந்தது. மணிமாலைகள் இடையிற் சேர்ந்து கொண்டன. நாகரிக கலாசாரக் கலப்புக்களால் மேற்சட்டை (Shirt) புகுந்துகொள்ள சால்வை மடிப்புடன் சேர்ந்து மேலங்கியானதை இன்று காணலாம். பெரும்பாலும் சால்வை விடுபட்டுப் போகின்றது. மேற்சட்டை பலவாறாய் - அரைக்கை, முழுக்கை என்றெல்லாம் - தோற்றம் பெற்றிருக்கிறது. மேற்சட்டைகளில் ஒன்றாக ஆபாரமும் (நாசனலும்) விளங்குகின்றது. மேற்சட்டைகளில் --அதனுள் அமைந்த துணைப்பை (Pocket) கைக்குட்டை வைக்கும் இடமாக மாறி அது சால்வையினது ஒரு கூறாகிய தொழிலைச் செய்கின்றது. நாசனல் வேட்டி சால்வை தமிழன் கலாசார உடுப்பு என்று இப்போது இனங்காட்டப்படுகிறது. -தொன்மைப் பூணூல் ஆரியமாகியது; சடங்குகளுக்கு ஏற்ற பொருளாகிவிட்டது. ***


## வீடு விற்பனைக்கு

671/1, K.K.S.வீதி, பூநாறி மரத்தடியில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. (பூநாறி மரத்தடியில் இருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் இடதுபுறத்தில் முதலாவது வீடு).
தொடர்பு: 077 6146253, 021 222 6021
(76654)

## காணி தேவை

பருத்தித்துறை, வியாபாரிமூலை,
திக்கம் பகுதிகளில் இலவச
வைத்தியசாலை ஒன்று
அமைப்பதற்கு உடனடியாக
காணி தேவை.
தொடர்பு: **கோபி**
தொ.பே.இல. 0212225501/
2659/2450
(76655)

## United Nations Development Programme

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with people to find their own solutions to global and national development challenges. As local capacity is developed, nations draw on UNDP and our wide network of partners.

UN
DP

## VACANCY

UNDP Sri Lanka has a large portfolio of programmes in Sri Lanka. A significant portion of this portfolio consists of projects which are implemented directly by UNDP in the North and East of the country. The United Nations Development Programme Office in Jaffna is looking for energetic, proactive candidate to fill a Mine Action Officer position in Jaffna. The Mine Action officer will be responsible to the Government Agent (GA) of the Jaffna district and report directly to the UNDP Senior Programme Manager in Colombo.

### MINE ACTION OFFICER (Duty Station –Jaffna)

Following an initial period of orientation, the duties and responsibilities of the Mine Action Officer are as follows:

- Support the GA of Jaffna district as a technical advisor for Mine Action.
- Supervise Jaffna DMAO staff, including the Admin & Finance Assistant, the Operations Officer and the QA Team Leader.
- To act as focal point for all aspects of Mine Action within the Jaffna district.
- Lead strategic planning by the Jaffna DMAO.
- To compile a list of priority tasks for mine clearance with assistance from the Mine Action Steering Committee and the UNDP Mine Action Technical Advisor.
- Monitor and coordinate all survey, marking, clearance and MRE activities, including on-going General Mine Action assessments and other assessments carried out by the Jaffna DMAO.
- Collect and assimilate all information relating to Mine Action.
- Provide monthly IMSMA data to UNDP HQ.
- Liaise with the Sri Lanka Army, demining operators and the government agencies, UN agencies and NGOs involved mine action and resettlement.
- Any other duties as suggested and agreed upon with the Sri Lanka government, the UNDP Programme Management Unit and the UNDP Mine Action Technical Advisor.

For full terms of reference please go to the UNDP Sri Lanka website (check "vacancies")

http://www.undp.lk

The successful candidate should possess the following qualifications:

- A minimum 02 years experience in Mine Action.
- A working knowledge of the International Mine Action standards (IMAS) with the ability to implement IMAS in a Sri Lankan context.
- Good working knowledge of recent regional (military) history.
- At least 05 years experience in a managerial position.
- Excellent interpersonal skills and the ability to form and maintain partnerships with government and non-governmental agencies
- Flexibility in undertaking any kind of assignment and the ability to work in a challenging environment.
- Experience in the use of computers and office software packages (MS Word, Excel, etc.)
- Excellent verbal and written knowledge of English, and proficiency in Tamil and Sinhala.

This position offers an attractive remuneration package. Subject to medical clearance, the appointment will initially be for a period of one year, with potential for renewal. Qualified female candidates are encouraged to apply. Qualified candidates are invited to send an updated CV containing detailed educational and professional qualifications and work experience with the names of two unrelated referees and a contact telephone number during working hours, by **Monday 04th August 2008**. Applications should be emailed to **nicola.perera@undp.org**
(C/553896)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக அரங்குகளை ஒளியமைப்பினால் மெருகூட்டி வெளிமாவட்டங்களுக்கும் சென்று முத்திரை பதித்த மூத்த கலைஞர்

ஈழத்தின் புகழ்பெற்ற நாடக ஒளியமைப்பாளர் **திரு.நாகலிங்கம் தவமணிநாயகம்** அவர்கள் பலநூற்றுக்கணக்கான நாடகங்களுக்கும் நடன நிகழ்வுகளுக்கும் ஒளியமைப்புச் செய்து ஒளியமைப்புக் கலையில் தனிமுத்திரை பதித்தவர். யாழ்ப்பாணத்தில் இத்தனை நவீன ஒளியமைப்புச் சாதனங்களைக் கொண்டவர்கள் இருக்கிறார்களா? எனத் தென்னிலங்கைக் கலைஞர்களையும், தமிழகக் கலைஞர்களையும் வியக்கவைத்தவர். தமது எண்பதாவது அகவையில் காலடி வைத்துள்ள அவரது நீண்ட ஒளியமைப்புத்துறை அனுபவங்களை 'உதயன்' வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதற்காக அவரது மல்லாகம் இல்லத்திலே சந்தித்தோம்.

கேள்வி:- இந்த ஒளியமைப்புத்துறையில் எப்போது காலடி வைத்தீர்கள்? பல்வேறுதுறைகளில் இத்துறையை நீங்கள் தெரிவு செய்வதற்கான காரணம் என்ன?

பதில்:- 1948 ஆம் ஆண்டிலேயே நான் நாடகத்துறை ஒளியமைப்பு, ஒலியமைப்பு ஆகிய இரண்டையும் தொடங்கிவிட்டேன். இத்துறையில் நான் ஆர்வம் கொள்ளக் காரணம் இராமநான் கல்லூரியில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும். அப்போது நான் பரமேஸ்வராக் கல்லூரியில் எஸ்.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தேன். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் விழாக்களுக்கு எமது மாணவர்களை உதவிக்கு அனுப்பும் பழக்கத்திற்கேற்ப நானும் சென்றிருந்தேன். நிகழ்ச்சி தொடங்கி 10 நிமிடங்களில் ஒலிபெருக்கி நின்றுவிட்டது. சூடேறிவிட்டதே காரணமென அதன் இயக்குநர் கூறினார். அடுத்து நாடக விழாவிற்கு ஒளியமைப்பு இடம்பெற்றது. ஒரு சன்லைற் பெட்டிக்குள் ஈயப் பேப்பர் ஒட்டி அதனுள் "பல்ப்" பை வைத்து ஒரு துவாரத்தினூடாக ஒளியை அனுப்பி வர்ணக் கடதாசிகளைக் குறுக்கே பிடித்து நிறங்களை மாற்றுவதுதான் அப்போதைய ஒளியமைப்பு . நாடகப் பாத்திரங்கள் எல்லாம் கரிய உருவங்களாகத் தெரிந்ததால் ஒளியமைப்பை நிறுத்துமாறு சபையோர் கூச்சலிட்டனர். இறுதியில் ஒலிபெருக்கி, ஒளியமைப்பு இரண்டும் இல்லாமலே விழா நடைபெற்றது. அப்போதுதான் இவை இரண்டையும் முறையாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது.

கே:- இந்த ஆர்வத்தின் பின்னணியில் ஒலி, ஒளியமைப்புக் கருவிகளை எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள்?

ப:- அப்போது சிறந்த ஒலியமைப்பாளராகக் கருதப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சீனன் நடராஜா. அவர் தனது வெள்ளைக்கார நண்பர் ஒருவருடன் தொடர்பு கொண்டு இங்கிலாந்திலிருந்து 50 வாற்ஸ் 'அம்பிளியர்' ஒன்றை வாங்கித் தந்தார். (அப்போது யாழ்ப்பாணத்தில் 15 வாற்ஸ் உடையவையே இருந்தன) அதன் துணை யுடன் பரமேஸ்வராக் கல்லூரியில் நடந்த தமிழ் விழாவில் 9 ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தினேன். தென்னிந்தியப் பாடகி எம்.எல். வசந்தகுமாரியின் கச்சேரியும் அங்கு இடம்பெற்றது. அது எனக்குப் புகழைத் தேடித்தந்தது. பின்னர் வெளிநாடுகளில் இருந்து Stage light முதலிய கருவிகளை வாங்கி ஒளியமைப்புத் துறையில் நுழைந்தேன்.

கே:- நவீன கருவிகளுடனான உங்கள் ஒளியமைப்பு யாழ்ப்பாணத்தில் முன்னர் இருந்த ஒளியமைப்பு முறையில் இருந்து எவ்வாறு வேறுபட்டது?

ப:- எனது ஒளியமைப்பு முறையை effects lighting என்று சொல்வார்கள். முன்னர் இருந்த முறையில் காட்சிகள் திரைச்சீலைகள் மூலமே மாற்றப்படும். இம்முறையில் பின்னால் ஒரு வெள்ளைத் திரைச்சீலை இருக்கும். ஒளியமைப்பு மூலம் காடு, சோலை முதலிய எந்தக் காட்சிகளையும் Slides ஐ பயன்படுத்திக் கொண்டு வரலாம். Mirror Ball என்றொரு கருவி. அதனை மேடையின் மேற்கட்டுவோம். அதில் கண்ணாடிகள் பதிக்கப் பட்டுச் சுற்றிக் கொண்டிருக்கும். அதன் மீது ஒளிைப் பாய்ச்சி மேடையெங்கும் நட்சத்திரங்கள் தெறிப்பது போலச் செய்ய முடியும். காதற்காட்சிகளுக்கு இதனைப் பயன்படுத்துவோம். எமது ஸ்பொட் லைற்றில் (spot lights)



வில்லைகள் உள்ளன. 1ரூபா நாணயத்தின் அளவிலிருந்து 5 அடிவிட்டமுள்ள வட்டம்வரை எந்தப் பகுதியை யும் தெளிவாகக் காட்டலாம். கண் இமைகள் கூடத் தெளிவாகத் தெரியும். பின்னணியில் மேகக் கூட்டம் செல்வது போன்ற அசைகின்ற காட்சி களையும் காட்டமுடியும்.

கே:- இத்தகைய முன்னேற்றகரமான ஒளியமைப்புக் கருவிகள் யாழ்ப்பாணத்தில் வேறு யாரிடம் அக் காலத்தில் இருந்தது?

ப:-யாழ்ப்பாணத்தில் வேறு எவரிடமும் இல்லை. கொழும்பிலும் பராக்கிரம றேடியோ, மகிந்தா டயஸ் ஆகிய இரு அமைப்புகளிடம் மாத்திரமே அப்போது இருந்தன.

கே:-நாடகத்துக்கு ஒளியமைக்கும்போது எத்தகைய விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள்?

ப:- முதலில் மேடையில் நிழல் விழாத முறையில் ஒளியமைப்பைச் செய்தல் வேண்டும். அரங்கை மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று வரிசைகளிலே மின்குமிழ்களைப் போடுவதன் மூலம் நிழல் விழுவதைத் தடுக்கலாம். அடுத்து உணர்வுகளுக்கேற்ப ஒளியின் நிறத்தை மாற்ற வேண்டும். அதிர்ச்சியான நிகழ்வுகளுக்கு மின்னி மின்னித் தோன்றும் fliggering light பயன்படுத்துவோம். கோபம், சோகம் ஆகிய உணர்வுகளுக்கு குறைந்த ஒளியையும் (Dim light) ஏனைய உணர்வுகளுக்கு பிரகாசமான ஒளியையும் பயன்படுத்துவோம். இரவுக்காட்சி என்றால் மங்கிய ஒளியின்

## 'அரங்க நிகழ்வுகளின் காட்சிகளைச் சிறந்த ஒளியமைப்பின் ஊடாக யதார்த்தமாக்கலாம்'

- தவமணிநாயகம்

பின்னணியில் மெல்லிய நீலநிறம் பயன்படுத்தப்படும்.

கே:- எத்தனை நாடகங்களுக்கு ஒளியமைப்பு செய்திருக்கிறீர்கள்?

ப:- பல நூற்றுக்கணக்கான நாடகங்கள். என்னிடமிருந்த ஒளியமைப்பு வசதிகள் மற்றவரிடம் இல்லாத காரணத்தால் இந்தியாவிலிருந்தோ கொழும்பிலிருந்தோ எந்த நாடகம் வந்தாலும் என்னையே அழைப்பார்கள். இந்தியாவிலிருந்து வந்த ஹரி தாஸ் சுவாமிகளின் நாடகங்கள், எதிர்வீரசரத்சந்திரவின் சிங்கள நாடகங்கள் என்பன யாழ்ப்பாணம் வந்தபோது நானே ஒளியமைத்தேன். கிறிஸ்தவ நாடகங்கள் முழுவதும், குறிப்பாக பாதிரியார் சவரிமுத்து அவர்களின் பலிக்களம் என்ற நாடகத்துக்கு மட்டும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமாக 35 மேடைகளில் ஒளியமைத்துள்ளேன். எஸ்.எஸ்.கணேசபிள்ளை, லடிஸ் வீரமணி, தார்சீசியஸ், பாலேந்திரா ஆகியோரின் நாடகங்களுக்கும் ஏரம்பு சுப்பையா, வேல் ஆனந்தன், கீதாஞ்சலி நல்லையா ஆகியோருடைய நடனங்களுக்கும், நானே ஒளி யமைப்புச் செய்தேன்.

கே:- பேராசிரியர் சு.வித்தியானந்தன் தனது நாடகங்கள் நடந்த இடமெல்லாம் உங்களையே அழைத்துச் சென்றதாக அறிய முடிகிறது. அந்த அனுபவம் பற்றிக் கூறுங்கள்?

ப:- அது உண்மைதான். அவரது வடமோடி, தென்மோடி ஆகிய இருவகை நாடகங்களிலும் நான் பணியாற்றியிருக் கிறேன். அவரது கர்ணன் போர், வாலிவதை, ராவணேசன் முதலிய நாடகங்கள் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் நடைபெற்ற வேளைகளில் நாடகக் குழுவினருடன் என்னையும் அழைத் துச் சென்றார்.

கே:- "ஒளியால் எழுதும் கவிதையே நாடகம்" என்று 'அடொல்ப் அப்பியா' கூறுவார். இந்த வகையில் நீங்கள் ஒளியமைத்த நாடகங்களில் ஒளியமைப்பினால் மிகவும் சிறப்புப் பெற்ற நாடகம் என்று எதனைக் கூறுவீர்கள்?

ப:- கொழும்பிலே நடந்த மானிப்பாய் ரகுநாதனின் 'வேதாளம் சொன்ன கதை' என்ற நாடகத்தைக் குறிப்பிடலாம். வழமையாகப் பின்னணியில் இருக்கும் வெள்ளைத் திரைச் சேலைக்குப் பதிலாக வெள்ளைச் சுவர் அங்கே இருந்தது. பின்னணியில் முகிலோட்டம் போட்டு ஒளியமைப்புச்செய்யக் காட்சி தத்ரூபமாக அமைந்து விட்டது. அங்கே இருந்த நாடகத்துறைசார்ந்த பெரியவர்கள் மூவர் வந்து, "யாழ்ப்பாணத்தில் இவ்வளவு வசதி இருக்கிறதா?



டி.கே. சண்முகம் சகோதரர்களின் நாடக ஒளியமைப்புக்குப் பின்னர் இப்போதுதான் சிறந்த ஒளியமைப்பைப் பார்க்கிறோம்" என்று பாராட் டினார்கள்.

கே:- உங்கள் வாழ்க்கையில் மறக்க முடி யாத சம்பவம் என்று எதனைக் கூறுவீர்கள்?

ப:- 1982 இல் வவுனியாவில் இடம் பெற்ற பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழாவுக்கு தென்னிந்தியாவிலிருந்து புகழ் பெற்ற நடன மேதை சொர்ணமுகியை அழைத்திருந்தார்கள். நடனம் தொடங்க முன்னர் ஒளியமைப்பாளருடன் கதைக்க வேண்டும் என்று என்னை அழைத் தார். "வர்ண ஒளியமைப்பு வேண்டாம் Pright light மட்டும் போதும்" என்றார். நான் "எம்மிடம் நவீன வசதிகள் உண்டு. வர்ண ஒளியமைப்புச் செய்தால் அழகாக இருக்கும்" என்று கேட்டதற்கிணங்க முதற் காட்சிக்கு மட்டும் வர்ண ஒளியமைப்பை செய்யச் சம்மதித்தார். அவர் நடனத்துக்கு மஞ்சள் நிற உடையுடன் இருப்பதைப் பார்த்து, ஏனைய நிறங்களைத் தவிர்த்து மஞ்சள் நிற ஒளியையே கொடுத்தேன். அது அவரை ஒரு பொன்னிறத் தேவதையாகக் காட்டியது. முதற்காட்சி முடிந்தவுடன் "இனி எல்லாக் காட்சிகளுக்கும் நீங்கள் விரும்பிய வர்ணங்களைக் கொடுங்கள்" என்று அனுமதித்தார். நடனம் முடிந்ததும் "இந்த ஒளியமைப்பு வசதிகள் தமிழ்நாட்டில் சில ஸ்ரூடியோக்களில் தான் உண்டு. நீங்கள் தனியொருவர் வைத்திருக்கிறீர்களே" என்று கூறிப் பாராட்டியதை ஒருபோதும் மறக்க முடியாது. ✱

செவ்வி: ம.பா.மகாலிங்கசிவம்

## தாயின் உடல் நிறை அதிகரிப்பு குழந்தையைப் பாதிக்கும்



கருவுற்றிருக்கும் தாய்மார் அதிக உடற்பருமன் அல்லது உடல்நிறை அல்லது Obesity உள்ளவர்களாக இருப்பின் அவர்களின் கருப்பையில் நிகழும் இரசாயன மாற்றங்களுக்கு ஏற்ப குழந்தையும் அதிக உடற்பருமன் உள்ளதாக எதிர்காலத்தில் உருவாகக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ளதாக அமெரிக்காவில் எலிகளிடத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.

உடற்பருமன் அதிகரிக்கும் வகையில் உணவூட்டப்பட்ட எலிகளின் அடுத்து வந்த சந்ததிகள் கூடிய உடற்பருமன் உள்ளனவாகக் காணப்பட, மட்டுப்படுத்திய உணவூட்டலுடன் (விசேடமாக விற்றமின்கள் மற்றும் Folicacid சேர்க்கப்பட்ட உணவுகள் கொண்டு) வளர்க்கப்பட்ட எலிகளின் அடுத்து வந்த சந்ததிகளில் இந்தத் தன்மை இல்லாது இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

உடற்பருமன் அதிகம் உள்ள தாயின் கருப்பையில் சிசு வளரும் போதே அதன் மூளையில் பசியைத் தூண்டத்தக்க தொழிற்பாட்டுடன் கூடிய பகுதியின் விருத்தியுடன் சம்பந்தப்பட்ட ஜீன்களின் செயற்பாடு அதிகம் தூண்டச் செய்யப்படுவதே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். இருப்பினும் இது தொடர்பான முழுமையான விளக்கத்தை இன்னும் விஞ்ஞானிகளால் கொடுக்க முடியவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குழந்தை ஒன்று கருப்பையில் வளரும் போது அது சந்திக்கும் தாயின் கருப்பையில் நிலவும் இரசாயனச் சூழலுக்கு ஏற்ப அதன் எதிர்கால உடலாரோக்கியம் தீர்மானிக்கப் படுகின்றது என இதன் மூலம் ஊகிக்கக் கூடியதாக இருப்பதாக விஞ்ஞானிகள் மேலும் கருத்துப் பகர்ந்துள்ளனர்.

இதற்கிடையில் பிறிதொரு ஆய்வில், அதிகளவு உடற்பருமன் உள்ள பெண்களில் குறிப்பாக மாதவிடாய் நின்ற பருவத்தை அடைந்த பெண்களில் வயிற்றுப் பகுதியில் அதிகம் (70%) கொழுப்பு அல்லது உடல் நிறை சேர்வதால் சதையச் சுரப்பி (Pancreas- குருதியில் இரத்தத்தின் அளவை சீராக்க உதவும் இன்சுலின் எனும் ஓமோனைச் சுரக்கும் சுரப்பி) சார்ந்த புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் கண்டறிந்துள்ளனர்.

எனவே பெண்களோ ஆண்களோ உடற்பருமன் அல்லது உடல் நிறை அதிகரிக்காத வகையில் தங்கள் உடலாரோக்கியத்தையும் உணவுப் பழக்கத்தையும் கைக்கொண்டிருப்பது அவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் எதிர்கால சந்ததிக்கும் நன்மையாக அமையும்.

## சரியான தூக்கமின்மையால் ஞாபகசக்தி குறைவடைகின்றது



*இரவில் சரியான தூக்கமின்மை ஞாபகக் குழப்பத்துக்கு இட்டுச் செல்வதாக ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்து நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது. இந்த ஞாபகக் குழப்பத்தால் சரியான வகையில் நினைவில் உள்ள தகவல்களை மீளப் பெறமுடிவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது.*

*பொதுவாக பரீட்சைக்குப் போகும் மாணவர்கள் பரீட்சைக்கு முதல் நாள் இரவில் நித்திரையின்றி நீண்டநேரம் படிப் பதைக் கண்டிருக்கின்றோம். அதேபோல் அலுவலகங்களில் வேலை செய்வோரும் வேலைப்பழு கூடிய நேரங்களில் இவ்வாறு செயற்படுவதைக் கண்டிருக்கின்றோம். சிலர் இரவு நேரவேலைகளில் தூக்கமின்றி நீண்டநேரம் ஈடு படுவதும் உண்டு. அவர்கள் இனிமேல் அப்படிச் செய்வது சரியானதா என்பதை இந்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கக்கூடிய சூழல் தோன்றியுள்ளதாகவே தெரிகிறது.*

## மலேரியாவுக்கு எதிரான புதிய கண்டுபிடிப்பு



உலகில் குறிப்பாக வெப்ப வலய நாடுகளில் வருடத்துக்கு பல ஆயிரக்கணக்கானோரின் உயிரை பலி எடுக்கும் மலேரியா நோய்க்கு புதிய வகையில் சிகிச்சை அளிக்கக் கூடிய முறை ஒன்றை ஆஸ்திரேலிய ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மலேரியா நோயை உருவாக்கும் புரட்டோசோவா (Protozoa) வகை ஒட்டுண்ணி நோயாக்கி குருதியில் உள்ள செங்குருதிக் கலங்களுள் புகுந்து கொண்டு குறிப்பிட்ட காலம் வாழ்வதால் அவ்வாறு ஒட்டுண்ணிகள் புகுந்து கொண்ட செங்குருதிக் கலங்களை உடலில் உள்ள நீர்ப்பீடணம்(immune system) இனங்கண்டு தாக் காதிருக்க உதவும் புரதப் பசைப் படையை உருவாக்கும் 8 புரத மூலக்கூறுகளை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் 8 புரத மூலக் கூறுகள் சேர்ந்து ஆக்கப்படும் அந்த பாதுகாப்புப் பசையில் ஒரு புரதமூலக் கூறின் உற்பத்தியை தடுத் தாலே அதன் செயற்பாட்டைத் தடுத்து ஒட் டுண்ணி நோயாக்கி புகுந்து கொண்டுள்ள செங் குருதிக் கலங்களை இலகுவாகத் தாக்கி அழிக்க வகை செய்ய முடியும் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அசைவ உணவு இருதய நோயை தடுக்கும்



கொழுப்புச் சத்து நிறைந்த இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை சாப்பிடக் கூடாது. இதனால் மாரடைப்பு போன்ற ஆபத்து ஏற்படும் என்று நீண்ட நாள்களாகவே டாக்டர்கள் அசைவ உணவுப் பிரியர்களுக்கு தடைபோட்டு வந்தனர்.

சைவ உணவு சாப்பிடுவோருக்கு எந்த நோயும் வராது என்று கூறிவார்கள்.

ஆனால் இப்போது டெல்லியில் உள்ள ஒரு ஆராய்ச்சி டாக்டர் அருள்கார்க் இதற்கு மாறான தகவலை தெரிவித்து இருக்கிறார்.

மீன், இறைச்சி, முட்டைகளை வெளுத்துக் கட்டும் அசைவஉணவுக்காரர்களுக்கு இது ஆறுதல் அளிக்கும் விஷயம்.

சைவ உணவு மட்டுமே சாப்பிடுபவர்களுக்கு 'பி-12' விற்றமின் குறைபாடு ஏற்படும் இந்த விற்றமின் குறைபாடு காரணமாக இருதய நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது அசைவ உணவில் இந்த 'பி-12' விற்றமின் அதிகமாக உள்ளது.

கடந்த 5 ஆண்டுகாலம் 5 ஆயிரம் பேரிடம் ஆய்வு நடத்தி இந்த முடிவை அவர் வெளியிட்டு இருக்கிறார்.

'பி-12' விற்றமின் குறைபாடு காரணமாக 'ஹோமோ சிஸ்டின்' என்ற வேதிப்பொருளின் அளவை அதிகரித்து மாரடைப்பு, பக்கவாதம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். இரத்தக் குழாய்களில் இரத்தம் உறையும் அபாயமும் ஏற்பட்டுவிடும்.

மூளைக்கு இரத்தம் செல்வது பாதிக்கப்பட்டு அதனால் பக்கவாதம் ஏற்படும் பார்வைக் குறைபாடு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. அசைவ உணவு இருதயத்தை பலப்படுத்தி இருதய நோய்களை தடுக்கும்.

இவ்வாறு அந்த டாக்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 75 இலட்சம் பேர் பக்கவாத நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் 6 லட்சம் பேர் ஆண்டுதோறும் பக்கவாத நோயால் பலியாகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்
## அறிவித்தல்

எமது சங்கத்தில் 15,000 மேற்பட்ட வெற்றுப் பைகளும், வெற்றுச் சாக்குகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்க வேலை நாள்களில் பொருள்களை பார்வையிட்டு, கேள்விப் பத்திரங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

விண்ணப்ப முடிவு திகதி: 03.08.2008

26.07.2008 (சி/853916) பொதுமுகாமையாளர்.

# மரண அறிவித்தல்
## திருமதி தம்பு தங்கம்மா



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தங்கம்மா நேற்று (26.07.2008) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சரவண முத்து - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், சிறிவீரேஸ்வரநாதன், நற்குணவதி, சிவக்கொழுந்து, சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயீரும், சுமதி, மோகன்ராஜ், சசிதேவி, மயூரதி ஆகியோரின் மாமியாரும் பவித்ரா, சுபத்ரா, திவாகரன், சஞ்சுதன், சுயந்தினி, விகாஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (26.07.2008) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம்செய்யப்பட்டது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அரசடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*
(76670)

தகவல்:
த.மோகன்ராஜ்
(மருமகன்).

# தவறிவிட்டது

கனகசுந்தரம் சிவரூபன் என்பவரது தே.அ. அட்டை (901992703V) 27.07.2008 வெள்ளிக்கிழமை அன்று மருதனார் மடத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

07, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0779488347.

# தவறிவிட்டது

பத்மநாதன் ஜனார்த்தனன் என்பவரது தே.அ. அட்டை (833093967V), விசேட அடையாள அட்டை (ஆமி I.C.) என்பன நேற்று (26.07.2008) சனிக்கிழமை யாழ்.பிறவுண் வீதியில் தவறவிடப்பட்டுள்ளன. மேற்படி அடையாள அட்டைகளை கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.தொ.நிலையத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லிங்கம் தொலைத்தொடர்பு நிலையம், மானிப்பாய் வீதி, இணுவில்.
தொ.பே. 222 5942, 222 7745




# STUDY IN SINGAPORE

மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு

- படிப்புடன் கூடிய வேலை வாய்ப்பு
- மற்றும் உங்களுக்குத் தேவையான சகல பாடநெறிகளும் எங்களால் பெற்றுத்தர முடியும் -

மேலதிக விவரங்களுக்கு:-
SINGAPORE 0065 - 93429725
JAFFNA - 077 - 6569663

*எந்தவித முன்கட்டணமுமின்றி நம்பிக்கையுடன் எமது சேவை.*


# மணமகள் தேவை

வடமராட்சியைச் சேர்ந்த, 1977ல் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, பூராட நட்சத்திரமும் 23 ¾ கிரக பாவமும் 5' 5'' உயரமுள்ள இலண்டனில் உள்ள எம்.எஸ்.சி. பட்டதாரி மணமகனுக்கு, 27 வயதிற் குட்பட்ட படித்த அழகிய உள்நாட்டு மணப்பெண் தேவை. தொடர்பு தொ.பே.இல. 021 226 4547

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நிரந்தர மாத வருமானம் உடைய இளமைத் தோற்றமுள்ள நற்பண்புகள் கொண்ட மணமகனுக்கு முன் திருமணமாகாத மணமகள் தேவை. தற்போது மணமகன் சென்னையில் வசிக்கிறார். மணமகள் 35-40 வயதுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

031 2259080
071 6477614

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF SCIENCE**

Senior Professor/Professor in **Mathematics/ Statistics/Physics* /Botany/Zoology/Marine Biology/Chemistry** (Physical/ Organic)**

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in **Mathematics/ Statistics/ Physics/ Botany/ Zoology/Chemistry**

Assistant Network Manager in **Computer Science**

* Preference will be given to those who has B.Sc. (Eng) degree with specialization in Electronics.
** Preference will be given to applicants with Specialization in Physical/Inorganic Chemistry.

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs. 57,755 - 11x900 - 67,655/-p.m. |
| Professor | Rs. 50,905 - 13x850 - 61,955/-p.m. |
| Senior Lecturer Gr.I | Rs. 42,650 - 7x800 - 48,250/-p.m. |
| Senior Lecturer Gr.II | Rs. 37,650 - 11x700 - 45,350/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 26,900 - 10x585 - 32,750/-p.m. |
| Assistant Network Manager | Rs. 25,145 - 3x585- 26,900(EB) 28,655 -13x585-36,260/-p.m. |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid
i. An academic allowance equivalent to 25% of the basic salary (for academic posts)
ii. Cost of living allowance Rs.2,875/-p.m.

**Statutory benefits:**
i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
ii. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
iii. Gratuity payments.
iv. Employees Trust Fund benefits
V. Free Medical Services.

**Closing date:**
Post of Senior Professor/ Professor - 31.10.2008
Other posts - 01.09.2008

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establisments, University of Jaffna, Sri-Lanka either in person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size. Further details could also be obtained from the University Website www.jfn.ac.lk.

Those who wish to apply for more than one post should make separate applications.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only sort listed applicants will be called for an interview.

**ACTING REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
*25 JULY 2008*
(C/553908)

# மரண அறிவித்தல்கள்
## திருமதி கந்தவேள் யாழினி



விடத்தற்பளை, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தவேள் யாழினி 24.07.2008 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் குணம் கந்தவேளின் (சுவிஸ், முன்னாள் ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி) அன்பு மனைவியும் அபிநயன், அட்சயன் ஆகியோரின் அன்புத் தாயும் செல்லப்பா கந்தசாமி (முன்னாள் ஊழியர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) - திருமதி கனகாம்பிகை கந்தசாமி (கொடிகாமம் ப.நோ.கூ.சங்க எழுதுநர்) தம்பதியரின் அன்பு மகளும் நல்லதம்பி குணம் (லண்டன்) - திருமதி குணமணி குணம் (லண்டன்) தம்பதியரின் மருமகளும் கந்தசாமி பிரணவனின் (இந்தியா) சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி இல்லத்தில் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக வேரொண்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*
(76666)

*தகவல்:*
குடும்பத்தினர்.

## தில்லையம்பலம் பஞ்சாட்சரம்
### (ஓய்வு பெற்ற மின்பகுதி உத்தியோகத்தர்)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் பஞ்சாட்சரம் நேற்று (26.07.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும் பஞ்சரத்தினம், ஜெயக்குமார், (ஆசிரியர், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி), சிவகுமார்(ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி), சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கலோஜினி, சத்தியப்பிரபா (ஆசிரியர், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருமதி இராசமணியின் சகோதரரும், புவனசிங்கி, அமரர் மகாதேவன், பவளம்மா (வவுனியா), காலஞ்சென்ற தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாம்பவி, நந்தகோபி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள்), தர்மேந்திரா(அசோக்கா கல்லூரி, கண்டி), நிவேதினி (விகாரமாதேவி மகளிர் கல்லூரி, கண்டி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(76672)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெற்றோர்தின விழா

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய கலை விழாவும் பெற்றோர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய கந்தையா மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப் பாளர் ம.பிரதீபனும் பாரியாரும் கலந்துகொள்வர்.

## செயலமர்வு

தீவக வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கு நவீன கற்றல், கற்பித்தல் துணைச் சாதனங்கள் பற்றிய செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் நெடுந்தீவு மகாவித்தி யாலயத்தில் நடைபெறவுள்ளது. (202-267)

# அந்தியேட்டி அழைப்பு



கடந்த 24.06.2008 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு

**அமரர்**
**காசிநாதன் பிரசாத் (குஞ்சன்)**

*(விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்.பல்கலைக்கழகம்)*

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (28.07.2008) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடை பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குருந்தடி தோட்டம்,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்திடம் அம்பலமாகும் தெற்கின் திருகுதாளங்கள்

தெற்காசியாவுடனான உறவுகள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்பட்ட சமயம் தான் வெளியிட்ட அறிக்கையிலும்; செய்தியாளர் மாநாட்டிலும் இலங்கை அரசுக்கு சூடாகவே கொடுத்திருக்கின்றது.

* மனித உரிமைகள் தொடர்பான விடயத்தில் அரசின் போக்குக்குக்கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

* மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச கவலைகள் குறித்து இலங்கை அதிகம் சிரத்தை எடுத்து, அவற்றுக்குப் பரிகாரம் காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு சர்வதேசப் பட்டயங்கள் தொடர்பான தனது கடப்பபாடுகளை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்த ஆவன செய்யாவிட்டால் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிக்குரிய ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இலங்கை இழக்க வேண்டிவரும்.

* அரசுத் தரப்புடன் சேர்ந்து இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் (கருணா குழுவின்) ஆயுதங்களைக் களைவதற்கான கால அட்டவணை அறிவிக்கப்படாதமை குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

* அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படாததால் அப்பிரதிநிதிகள் குழு முழுமை பெற்றதல்ல என்ற கருத்து தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

- இவ்விடயங்களைப் பிரதிபலித்த ஐரோப்பிய விசேட குழு, உண்மையில் இங்கு தான் தங்கியிருந்த ஐந்து நாள்களுக்குள் இங்குள்ள நிலைமைகளை செவ்வனே உள்வாங்கிக் கொண்டுவிட்டது என்பது தெளிவு. தனது விஜயத்தின் முடிவில் அது வெளியிட்ட அறிக்கையும், கருத்துகளும் இதனை நிரூபிக்கின்றன.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழு என்பது சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுத்த தந்திரோபாய நடவடிக்கையே என்பது சர்வதேச சமூகத்துக்கு இப்போது நன்கு புரியத் தொடங்கிவிட்டது. அதைத்தான் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவும் தற்சமயம் பிரதிபலித்திருக்கின்றது.

இன்றைய நிலையில் இலங்கையின் நாடாளுமன்றத்தில் வடக்கு,கிழக்குத் தமிழர்களைப் பிரிதிநிதித்துவம் செய்யும் இருபத்தி மூன்று எம்.பிக்கள் உள்ளனர். இவர்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைத் தவிர எஞ்சிய இருபத்திரண்டு பேரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எல்லோரையும் ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டுத்தான் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கை என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்து அதற்கு 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' என்று நாமமும் சூட்டி நாடகமாடினார் ஜனாதிபதி மஹிந்தர்.

ஆரம்பத்தில், இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒதுக்கப்பட்டமை குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது, ''இனப்பிரச்சினைக்குத் தென்னிலங்கையின் கருத்தொருமைப்பாட்டுடன் கூடிய தீர்வு யோசனையைத் தயாரிப்பதற்கான அமைப்பே இது. எனவே இது வடக்கு-கிழக்கு தமிழர்களின் பிரதித்துவம் அவசியம் இல்லை'' - என்று விளக்கமளித்தார் நாட்டின் தலைவர்.

ஆனால் சற்றுக் காலம் செல்ல, தெற்கின் இணக்கப்பாட்டுடனான திட்டமே தீர்வு என்று வரையறை செய்து கொண்டு, தமிழர் தரப்பை ஒதுக்கி, விலத்தித் தாம் அமைத்த சர்வகட்சி பிரதிநிதிகள் குழவின் திட்டம் என்ற பெயரில் உப்புச் சாரபற்ற - உருப்படியற்ற- ஒரு யோசனையைத் தீர்வு வடிவமாக காட்ட முயன்றார். இருபது வருடங்களுக்கு முன்னர் தாமே எதிர்த்த - அப்போதே பயனற்றது என்று தூக்கிக் கடாசப்பட்ட-அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழான அம்சங்களை தோண்டி எடுத்து தூசு தட்டித் தீர்வுக்கான நடவடிக்கை என முன்வைத்தார்.

இதில் மிகப் பெரிய வேடிக்கை என்னவென்றால், அந்தத் திட்டத்தை ''அனைத்துக் கட்சிப் பிரதிகள் குழுவின் யோசனை'' என்ற பெயரில் முன்வைக்கப்பட்டு, உலகின் காதில் பூவைக்க எடுக்கப்பட்ட முயற்சிதான்.

இந்த அனைத்துக் கட்சி பிரதிகள் குழுவில் இப்போது பிரதான எதிர்கட்சியான ஐ.தே.க.இல்லை; ஜே.வி.பியும் இல்லை; தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் சேர்க்கப்படவில்லை.

இப்படியிருக்க, ஆளும் கட்சித் தரப்பிலுள்ள அணியையும் எதிரணியில் உள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையும் மட்டும் சேர்த்துவைத்துக் கொண்டு, தான் விரும்பிய 'உளுத்தல் திட்டம்' ஒன்றை இலங்கையின் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளினதும் திட்டம் என்ற பெயரில் வெளிப்படுத்தி மஹிந்த தரப்பு ஆடிய நாடகத்தின் சாயம் இப்போது சர்வதே சமூகத்தின் முன் நன்கு வெளுத்து விட்டது. அதனையே ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் கருத்தும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டத்தை அடங்குவதற்கு அரசு கையில் எடுத்திருக்கும் 'அரச பயங்கரவாதமே' இலங்கைத் தீவில் மிகமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களாகக் கட்டவிழ்கின்றன என்ற உண்மையும் இந்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவுக்கு நன்கு விளங்கத் தொடங்கியிருப்பதும் முக்கிய விடயமாகும்.

ஈழத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத் துவதற்கு அரசு என்றை கட்டமைப்பை வைத்துக் கொண்டு தென்னிலங்கை செய்யும் திருகுதாளங்கள் இப்போது சர்வதேச மட்டத்தில் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கிவிட்டன.

# மாவையில் இன்று கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை 20 ஆம் திருவிழாவன்று திருக்கார்த்திகை உற்சவம் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

இன்று காலை விசேட அபிஷேகம், பூசைகளைத் தொடர்ந்து ஷண்முகார்ச் சனை இடம்பெறும்.

இன்னிசையுடன் திருப்புகழ் இசைக்க ஷண்முகார்ச்சனை இடம் பெறும். திருமுறைப் பாராயணம், விசேட பஜனை என்பனவும் இடம்பெறும்.

பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கார்த்திகைத் திருவிழாவில் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க் கப்படுவதால், தெல்லிப்பழையில் இருந்து விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (1)

# காரைநகர் பிரதேச மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு

காரைநகர் பாடசாலைகளில் கல்வி பயிலும் 40 மாணவர்களுக்கு மாதாந்த கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு இன்று காரைநகர் அபிவிருத்திச் சபையால் நடத்தப்படும் கல்வித் தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

கனடாவில் வசிக்கும் டாக்டர் வி.விஜயரத்தினம் தனது தாய் அமரர் திருமதி ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்தமாக இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்வுள்ளார்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தலா 12 மாணவர்களும் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், வியாவில் சைவ வித்தியாலயம் என்பவற்றில் தலா எட்டு மாணவர்களும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை-

இந் நிகழ்வில் காரைநகரைச் சேர்ந்த பதினாறு கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. கமலாகரன், ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ஆ.பலராமன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரத்தினம்-

ஓய்வுபெற்ற அதிபர்களான சி. பொன்னம்பலம், வி.கனகேந்திரம், திருமதி த.நாகரத்தினம், திருமதி க.காராளசிங்கம், ஆ.பாலகிஸ்ணன், பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை மற்றும் எ. நமசிவாயம், அ.சிவநாதன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (202-250)

## உயர்தரப்பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

அடுத்தமாதம் 6ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ.சீ.ஈ (உயர்தரம்) பரீட்சை தொடர் பான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை வேம்படி மகளீர் உயர்தர பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய்க் கொட்டம் தவிர்ந்த யாழ்ப் பாணம் சாவகச்சேரி தீவகம் ஆகிய வலையங்களில் பரீட்சை நிலையங்களில் பணிகளில் ஈடுபடவுள்ள மேற்பார்வையாளர்கள், உதவிப்பரீட்சை மேற்பார்வையா ளர்கள் இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை கூட்டத்தில் கலந்து கொள்ளு மாறு யாழ். வலையக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

# இன்றைய நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜூலை27

சுன்னாகம் றோட்டறக் கழகத்தின் 14 ஆவது பதவியேற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனார்மடம், இராமநாதன் கல்லூரிமண்டபத்தில்எஸ்.ஜெயந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எம். கோணேஸ்வரன் சுன்னாகம் றோட்டறக் கழகப் பணிப்பாளராகப் பதவி யேற்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் றோட்டறக் கழக முன்னாள் தலைவர் பி.ரி.சுரேந்திரனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி எஸ். சொக்கலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் 'சுருதி' என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளது. (202-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 27

தெல்லிப்பழை கிழக்கில் இலங்கை வங்கியின் கிராம அறிமுக விழாவும் விளையாட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30மணிக்கு கட்டுவன் புல மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

கலைச்செல்வி சனசமுநிலையத் தலைவர் இ.அருந்தவராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 26

தென்மராட்சி கலை மன்றத்தினர் சாவகச்சேரி அம்பிகா மருத்தகத்தின் அனுசரணையுடன் நடத்தும் கதம்ப விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு கலை மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அ.பிரேமசங்கர் கலந்து கொள்வார்.

அகில இலங்கை ரீதியிலானதமிழ்த்திணப் போட்டி - 2007 இல் இசை - குழு-II போட்டியில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவரும் ஆசிரியர்களும் இவ் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாணவர்களின் நடனம், நாடகம், பேச்சு, இசை ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெறும். (1-207)

* * *

சங்கானை, ஜூலை 27

அரலியூர் சன்மார்க்க சபையினர் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் 8வது சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3மணிக்கு அராலி மத்தி, வண்ணபுரம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அருள் நெறிச்செல்வர் சிவத்திரு வி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சைவப் புலவர் க.நித்தியதசிதரன் 'ஆன்மீகத்தில்' ஈடுபடுவதால் ஏற்படும் நன்மைகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (202-29)

* * *

சங்கானை, ஜூலை27

நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் நினைவுதின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தொல்புரம், கொட்டியம்பதி ஆதி முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நினைவுப் பேருரைகளை ஐ.என்.எஸ். நிறுவன முகாமையாளர்பொ இராஜேஸ்வரன்,வட்டு வடக்கு அ.மி.பாடசாலை உப அதிபர் சிவஸ்ரீ பொ. சிவலோகநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (202-29)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 13 | 28.07.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | பி.இ. 01.37 வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி |
| | பி.இ. 12.53வரை |
| | ஏகாதசி விரதம் |
| [illegible] : | [illegible] |
| ராகுகாலம் : | [illegible] |

## கல்வயல், சரசாலை சுற்றிவளைத்துத் தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

சாவகச்சேரி கல்வயல், சரசாலை ஆகிய கிராமங்கள் நேற்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்குப் பின்னர் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (1-207)

## தங்கத்தாத்தா நினைவு தினம் இன்றாகும்



### பவளக்கொடி

பருத்தித்துறை யூராம்
பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்
அங்கவள்கோர் நாளில்
அடுத்ததுயர் கேளீர்

★ ★ ★

பாற்குடஞ் சுமந்து
பையப்பைய நடந்து
சந்தைக்குப் போம்போது
தான்நினைத்தாள் மாது
பாலையின்று விற்பேன்
காசைப்பையில் வைப்பேன்

★ ★ ★

முருகரப்பா வீட்டில்
முட்டை விற்பாள் பாட்டி
கோழிமுட்டை வாங்கிக்
குஞ்சுக்குவைப் பேனே
புள்ளிக்கோழிக் குஞ்சு
பொரிக்குமிரண் டைஞ்சு
குஞ்சுகுள்வளர்ந்து
கோழியாகும் விரைந்து
விரைந்துவளர்ந் திடுமே
வெள்ளைமுட்டை யிடுமே

★ ★ ★

முட்டைவிற்ற காசை
முழுதுமெடுத் தாசை
வன்னச்சேலை சட்டை
மாதுளம்பூத் தோய்பி
வாசனைசெருப்பு
வாங்குவேன் விரும்பி

★ ★ ★

வெள்ளைப்பட் டுடுத்து
மினுங்குதொப்பி தொடுத்துக்
கையிரண்டும் வீசிக்
கதைகள் பல பேசிச்
சுந்தரிபோல் நானே
சந்தைக்குப்போ வேனே

★ ★ ★

அரியமலர் பார்ப்பாள்
அம்புசமும் பார்ப்பாள்
பூமணியும் பார்ப்பாள்
பொற்கொடியும் பார்ப்பாள்
சரிகைச்சேலை பாரீர்
தாவணியைப் பாரீர்
வன்னச்சட்டை பாரீர்
வடிவழகு பாரீர்
என்றுயாரும் புகழ்வர்
என்னையாரோ இகழ்வர்
யாரும் யாரும் என்று
பவளக்கொடி நின்று
சற்றுத்தலை நிமிர்ந்தாள்
தையலென்ன செய்வாள்

★ ★ ★

பாலுமெல்லாம் போச்சு
பாற்குடமும் போச்சு
மிக்கதுயரோடு
வீடுசென்றாள் மாது
கைக்குவருமுன்னே
நெய்க்குவிலை பேசேல்

-நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.




இரத்ததானம் உயிர்காக்கும் உன்னதபணி

* ஆரோக்கியமானவர்களாகவும்
* உடல் நிறை 50 கி.கி. இற்கு மேற்பட்டவராகவும்
* வயது 18 தொடக்கம் 60 வரையிலும்
* இரத்ததானம் வழங்குவதற்கு சில மணி நேரங்களுக்குள் உணவு உட்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
* ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பாதிப்பும் இல்லாது நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம்.

*இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்: 021-222 306*

குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா 02.08.2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான தரவுகளைப் பெற்ற பின்னரே இலங்கை அரசு குறித்து கருத்து வெளியிட்டோம்

## போகல்லாகமவுக்கு இவான்ஸ் பதிலடி



கொழும்பு, ஜூலை 27
இலங்கையின் மனிதஉரிமை நிலைவரம் தொடர்பாக நான் தெரிவித்த கருத்துக்கள் உண்மையானவை பரந்துபட்ட அளவில் பலருடனும் விரிவாகவும் தெளிவாகவும் கலந்துரையாடிய பின்னரே கருத்துக்களை வெளியிட்டேன்.

இப்படிக் கூறினார் இலங்கை வந்திருந்த ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவின் தலைவர் றொபேட் இவான்ஸ்.

கொழும்பில் அவர் வெளியிட்ட கருத்துக்களை இலங்கை அரசு மறுத்துள்ளது. அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பரந்துபட்ட அளவில் பலருடனும் கலந்துரையாடியே இந்த முடிவுக்கு வந்திருக்கி றோம். அரசுத்தரப்பினர் அனைத்து அரசியல்கட்சிகள், அரசசார்பற்ற அமைப்பினர், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக் கப்பட்டவர்கள் என பல தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னரே நாங்கள் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். நாம் இந்த விடயத்தில் இலங்கை அரசை விமர்சித்தது உண்மைதான். ஆனால், எமது விமர்சனம் நட்பு ரீதியிலானது; ஆதரவுப் போக்கிலானது. இலங்கையின் நட்பு ரீதியிலான விமர்சகர்களாகவே நாங்கள் இருக்க விரும்புகிறோம் - என்றார்றொபேட் இவான்ஸ்.

இதேவேளை -

இலங்கையில் மனித உரிமைகளைப் பேண இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியக்குழு குற்றஞ்சாட்டியுள்ளதை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம மறுத்திருக்கிறார்.

அவர்கள் இலங்கை அடைந்திருக்கின்ற முன்னேற்றங்களை சரியாக கணக்கில் எடுக்கத் தவறி விட்டார்கள் என்பதாகும். துர்திஷ்டவசமாக அவர்கள் கொழும்பில் மாத்திரம் ஆராய்ந்து விட்டு இலங்கையின் நிலை மைகள் மற்றும் அபிவிருத்திகள் குறித்து அறிக்கை வெளி யிட்டிருக் கிறார்கள் - என்றார் அமைச்சர் போகொல்லாகம. (அ-02)



## ஊர்காவலர் விபத்தில் பலி!

கொழும்பு,ஜூலை 27
நீர்கொழும்பு, கொழும்பு பிரதான வீதியின் கட்டுநாயக்கா முச்சந்தியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் சீதுவை காவல் நிலையத்தில் கடமையாற்றும் ஊர்காவல் படைவீரர் ஒருவர் உயிரிழந்திருக்கின்றன.

அந்தச் சந்தி வழியே சென்ற வான் ஒன்று குறித்த ஊர்காவல் படைவீரர் மீது மோதியதாலேயே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றன.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

# வீடுகளை உடைக்கும் படலம் நாடு முழுவதும் விஸ்தரிப்பு

கொழும்பு, ஜூலை 27
சார்க் மாநாட்டை அடிப்படையாக வைத்து கொழும்பில் தொடங்கப்பட்ட வீடுகள் மற்றும் கடைகள் போன்றவற்றை இடித்துத் தள்ளும் நடவடிக்கை இப்போது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான ரவூவ் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டினார்.

சார்க் மாநாட்டின் பாதுகாப்பைக் காரணங்காட்டி இந்த அரசு கொழும்பு கொம்பனித் தெருவில் அமைந்திருந்த மக்களின் வீடுகளை இடித்துத் தள்ளியது. அதேபோல், ராஜகிரிய பகுதியிலும் வீதியோரம் அமைந்திருந்த கடைகளையும் அகற்றியது.

இதைத் தொடர்ந்து கண்டி குண்டசாலை, திகண போன்ற பகுதிகளில் வீதியோரங்களில் அமைந்திருக்கும் கடைகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக நாம் அறிகிறோம் என்றார்.

# கிளிநொச்சி, முல்லையில் புலிகளின் படைத் தளங்கள் மீது மிகக் கடும் தாக்குதல்களை ஆரம்பிக்கப்போகின்றோம்

## அனுராதபுர தேர்தல் கூட்டத்தில் ஜனாதிபதி

அனுராதபுரம், ஜூலை27
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் படைத்தளங்கள் மீது மிகக் கடுமையான தாக்குதல்களை உடனடியாக - மிகவிரைவில் ஆரம்பிக்கப்போகிறோம் -

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று சனிக்கிழமை தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து நாம் ஏற்கனவே மீட்டுவிட்டோம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களில் உள்ள தமிழ் மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்பதற்கான தாக்குதலை நாம் ஆரம்பிக்கவுள்ளோம்.



ஆகவே தற்போது லீவில் சென்றுள்ள இராணுவத்தினர் அனைவரும் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும்.

அப்படி பணிக்குத் திரும்பாதவர்கள் மீது இராணுவ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி எச்சரித்தார். (அ-1)

### இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் தொலைபேசிப் பாவனையாளர்கள் மீண்டும் சேவையைப் பெறுவதற்கு பொலிஸ் அனுமதி (கிளியரன்ஸ்) பெற வேண்டும் என்று பாவனையாளர்களுக்கு ரெலிகொம் அறிவுறுத்தல் விடுத்தது.

அதற்குரிய படிவத்தைப் பெற்று பொலிஸ் அனுமதி பெற்ற வாடிக்கையாளர்கள் அவற்றை மீளவும் ரெலிகொம் நிறுவனத்திடம் கையளித்துள்ளனர்.

இப்போது- பொலிஸ் அனுமதி பெற்றவர்களின் விவரங்கள் பலாலி தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இரு கட்டங்க ளாக 400 வாடிக்கையாளரின் விவரங்கள் பலாலிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

அங்கிருந்து அனுமதி கிடைத்த பின்னரே இணைப்பு மீள வழங்கப்படும் சாத்தியம் உண்டு என்றும் ரெலிக்கொம் அதிகாரி ஒருவர் விளக்கமளித்தார். (அ-1)

### நிபந்தனைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கைவிட்டுவிட்டு, தமிழீழம் என்ற தமது கோட்பாட்டையும் கைவிட்டுவிட்டு சமாதான முயற்சிகளில் பங்கேற்க முன்வந்தால், அவர்களுடன் பேச்சு நடத்துவது குறித்து பரிசீலிப்பதற்கு அரசு எப்போதும் தயாராகவே இருக்கின்றது.

''சார்க்'' மாநாட்டை முன்னிட்டு போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளார்கள். அதனால் அரசும் போர்நிறுத்தம் செய்யவேண்டும் என்று எல்லோரும் கேட்கிறார்கள்.

விடுதலைப்புலிகளின் பழைய வரலாறு எங்களுக்குத் தெரியும். தோல்வியை நோக்கிச் செல்லும் போதெல்லாம், போர் நிறுத்தத்தை அறிவித்து, தம்மைப் பலப்படுத்துவதில் அவர்கள் ஈடுபடுவது வழமை. அந்த வகையில் இப்போது போர்நிறுத்தத்தை அறிவித்துள்ளார்கள். விடுதலைப் புலிகளின் வலையில், சூழ்ச்சியில் சிக்குவதற்கு நாங்கள் தயாரில்லை.

விடுதலைப்புலிகள் மட்டும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். வேறு தமிழ்க் குழுக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக பணிபுரிகிறார்கள். சமாதானப் பேச்சுக்கான அரசின் நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்காது விட்டால் ஏனைய தமிழ் அரசியல் குழுக்களுடன் பேச்சு நடத்தி உகந்த தீர்வு ஒன்றைக் கொண்டு வந்து சமாதானத்தை உருவாக்குவோம் - என்று பிரதமர் சொன்னார். (அ-01)

### சாவகச்சேரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனர்த்தத்தில் சிக்கினார்.

மரணமானவர் வீதியில் சென்று கொண் டிருந்த வேளை படையினரின் கவசவாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது அந்த வாகனம் திடீர் என பின்நோக்கி வந்தது அதில் சிக்கி அந்தப் பெண் அந்த இடத்தி லேயே மரண மானார். சடலம் பிரேத பரிசோத னைக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு நேற்று பி.ப அனுப்பப்பட்டது. (அ-1-202-207-25)

### தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல கட்சிகளின் பங்களிப்பும் இல்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காத அந்தக் குழு அர்த்தமற்றது.

விடுதலைப்புலிகள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்துள்ள குறுகிய கால போர் நிறுத்தம் இரு தரப்பினதும் நீண்டகால போர் நிறுத் தமாக மாற வேண்டும் என்பதே எமது விருப் பமாகும் - என்றார் அவர்.

### முதலாம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குமுறை இல்லாமல் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவது குறித்துக் கேட்டபோது அவர் கூறியதாவது:

ஏற்கனவே நடைமுறையில் இருந்தவாறு ஒன்றைவிட்ட நாள் மாலையில் மின் விநியோகம் தடைசெய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை மின் நிலையங்கள் மூலமான விநியோகம் 6.30 முதல் 7.40 வரையும், 7.40 முதல் 8.50 வரையும்இருதடவைகள் தடைசெய்யப் படுகிறன.

சாவகச்சேரி, வடமராட்சி மின் நிலையங்கள் மூலமான விநியோகம் இரவு 8 மணி முதலும் 9 மணி முதலும் மாறிமாறி ஒன்றைவிட்ட ஒரு நாள் மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது.

கோம்பயன் மணல், மல்லாகம் மின்னிலையங்கள் மூலமான மின் விநியோகமும் மாலையில் வெட்டப்படுகிறது. அத்துடன் பிரதான விநியோகத்தில் தடைஏற்படும் படும் போது இந்த நிலையங்கள் ஊடான விநியோகம் அடிக்கடி தடைப்படும்.

கடந்த சில, வாரங்களாக 'கூல் ஏயர்' நிறுவனத்தின் மின்மாற்றிகளில் சிலவற்றிற்கு உபகரணங்களை கொழும்பில் இருந்து கொண்டுவரவேண்டிய நிலை ஏற்பட்டதாலும்-

சுன்னாகத்தில் உள்ள 'அக்கிறிக்கோ' நிறுவனத்தின் மின்மாற்றிகள் பழுதடைந்து திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாலும் மின் விநியோகத்தை குறிப்பிட்ட நேரத்திற்கு மேலதிகமாக தடை செய்ய நேரிட்டது.

இரு மின் நிலையங்களிலும் திருத்த வேலைகளும் இப்போது பூர்த்தியடைந் துள்ளன.

இதன் காரணமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் ஏற்கனவே அட்டவணைப் படுத்தப் பட்ட நேரத்தை 15 நிமிடத்தால் குறைக்க முடிவு செய்யப்பட் டுள்ளது - என்றார் அவர். (அ-1)

### பலாலி-இரத்மலானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுறுத்தலுக்கு அமைய எதிர்வரும் முதலாம்திகதியிலிருந்து இடைநிறுத்த இப்போது முடிவு செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பணிகள் கப்பல் சேவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**கப்பல் பயணிகள் எண்ணிக்கை வீழ்ச்சி**

எனினும், பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

400 பேர் பயணம் செய்யக் கூடிய வசதி இந்தக் கப்பலில் இருந்த போதிலும் நேற்றைய தினம் 94 பயணிகள் மட்டுமே இங்கு இருந்து புறப்பட்டனர் என்றும் 250 பயணிகள் மட்டுமே திருமலையில் இருந்து வந்தனர் என்றும் அந்த அதிகாரி மேலும்தகவல் வெளியிட்டார். (அ-1)

### வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பிரதேச வாசிகளின் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்தன.

இந்த மனுக்களை ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான ஆயம் -

யாழ். அரச அதிபரால் வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர உரிமை உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட அனைத்துக் குடும்பங் களைச் சேர்ந்த - பொதுமக்களையும் கட்டம் கட்டமாக விரைந்து மீள் குடியமர்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐவர் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை நியமித்து அதற்கு உத்தரவு விட்டிருந்தது.

உயர்மட்டக் குழுவின் தலைவராக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா நியமிக்கப்பட்டிந்தார்.தனது உத்தரவை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யுமாறு உயர்நீதி மன்றம் கடந்த வியாழக் கிழமை அவருக்கு கடிதம் அனுப்பி உள்ளது.

அடுத்த வாரம் அளவில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் படி மீள் குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்த சாத்தியமான நேரத்தை அறிவிக்குமாறு உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கு மேல்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் கடிதங்களை அனுப்பியுள்ளது.

இந்தக் குழுவின் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.கடற்படைத் தளபதி பி.ஏ. டி.சமரசிங்க, யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (அ1)

**Sky Computer Systems**
No. 89, Kandy Road, Chundukuli, Jaffna.
(கச்சேரி அருகில்) T.P No:- 021 222 9109
**Intel Dual Core 2.0 GHz Computer**
**விற்பனைக்குண்டு.**
(15 "Samsung Monitor With DVD Writer, Etc.)
பாவித்த P IV கணனிகளும் விற்பனைக்கு உண்டு.

**English Classes**
English classes will be conducted (Spoken and written)
**From** 02.08.2008
to the following category of people at the address given below.
* University students
* Young professionals in employment
* Degree holders wishing to enhance English knowledge (group and individual classes)

Kurumbacaddy,
Puloly.

C.Nadarajalingam
Retd.Area manager,
Bank of Ceylon.

**A/L 2008 சகல துறைகளுக்குமான பொது சாதாரண பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு**
ஆரம்பம்:- நாளை - திங்கள் [28.07.2008]

| | |
|---|---|
| பிரிவு I | திங்கள் 8-12<br>செவ்வாய் 8-10 |
| பிரிவு II | திங்கள், செவ்வாய் 12-2<br>புதன் 9-12 |

வழிகாட்டல் நூல் உட்பட
கட்டணம் 200/=
DMI நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.